வெளியீடு 30-7-2000 Issued 30-7-2000

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

புதன்கிழமை, நவம்பர் 24, 1999 – தொகுதி 86– எண் 2

**Wednesday the 24th November, 1999 – Volume 86 – No. 2**

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009
Legislative Assembly Secretariat, Fort St. George,
Chennai-600 009

[Price Rs. 3.00

**24-11-1999**

## உள்ளடக்கம்


பக்கங்கள்

1. **வினாக்கள்-விடைகள்—**

உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. .. 213-252

2. **சிறப்புக் கவன ஈர்ப்பு—**

(அ) கன்னியாகுமரி மாவட்டம், அரசு இரப்பர் தோட்டக் கழகத் தொழிலாளர்களுக்கு போனஸ் வழங்குதல் 252-261, 275-276

டாக்டர் தே. குமாரதாஸ் .. .. .. 253, 255

* திரு. ஜே. ஹேமச்சந்திரன் .. .. ..255, 256-258

திரு. சி. வேலாயுதன் .. .. .. 258

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி 258-261

* மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான் .. 261

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி ..276, 277-278

(ஆ) தமிழக மீனவர்களை பாகிஸ்தான் சிறையிலிருந்து மீட்டல் 266-275

திரு. இரா. பொன்னாரடு .. .. .. 267-269

டாக்டர் தே. குமாரதாஸ் .. .. .. 269-270

திரு. பீளன். வல்லரசு .. .. .. 270

திரு. டி. மணி .. .. .. .. 271

திரு. சி. வேலாயுதன் .. .. .. 271-272

* மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன் 272-275

திரு. ச. அழகிரி .. .. .. .. 275

பக்கங்கள்

2. சிறப்புக் கவன ஈர்ப்பு—தொடர்ச்சி

(இ) கோவை, ஆற்றுப்பாலத்தில் சுங்கவரி வசூலிப்பதால் ஏற்பட்டுள்ள நிலை — 280-289

திரு.வி.கே. லட்சுமணன் — 281-282

திரு. கே. சுப்பராயன் — 282-284

* மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன் — 284-289

3. தகவல் கோரல்—

(அ) தஞ்சை மாவட்டம், வல்லம், மகளிர் தொழில்நுட்பப் பயிலகம் மற்றும் பொறியியல் கல்லூரிக்கு அளித்த நிலத்தின் ஒரு பகுதியை அரசு திரும்பப் பெற நடவடிக்கை — 261-266

(ஆ) தமிழகத்தின் பல்வேறு இடங்களில் கிருத்துவ தேவாலயங்களும் மற்றும் வேலூரில் தர்காவும் தீயினால் சேதம் — 277-280

4. கவன ஈர்ப்பு—

தென்காசி நகராட்சி குடிநீர் விஸ்தரிப்புத் திட்டம் தொடங்குவதில் தாமதம் — 289-291

5. அறிக்கை அளித்தல்—

அரசு உறுதிமொழிக் குழு — 291

6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—

(அ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு, 1999 — 291-293

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி — 292-293

(ஆ) தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1999 — 294-295

மாண்புமிகு திரு. ஆலடி அருணா — 294-295


2,21,2006



V21,31N99 N99.8602


பக்கங்கள்

6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—தொடர்ச்சி

(இ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஏழாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1999 — 295-300

மாண்புமிகு திரு. ஆலடி அருணா — 296,298-299, 300

* திரு. ஜே. ஹேமச்சந்திரன் — 296-297

திரு. சி. வேலாயுதன் — 297-298

(ஈ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (எட்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1999 — 300-302

மாண்புமிகு திரு. ஆலடி அருணா — 300,302

(உ) தமிழ்நாடு தொழிலியல் துறைக்கான நோக்கங்களுக்காக நிலத்தைக் கையகப்படுத்துதல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1999 — 302-304

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம் — 303,304

(ஊ) தமிழ்நாடு ஊராட்சிகள் (ஏழாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1999 — 305-317

மாண்புமிகு திரு. கோ.சி. மணி — 305,311-315, 317

திரு. நா. பெரியசாமி — 305-306

திரு. கே. சுப்பராயன் — 306-309, 314, 315

* மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் — 308

திரு. டி. மணி — 309-310

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி — 315

(எ) தமிழ்நாடு ஊராட்சிகள் (எட்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1999 — 317-319

மாண்புமிகு திரு. கோ.சி. மணி — 318,319

பக்கங்கள்

6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—தொடர்ச்சி

(ஏ) தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரிய (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1999 .. 319-321

மாண்புமிகு திரு. கோ.சி. மணி .. .. 320, 321

(ஐ) தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1999 .. 321-323

மாண்புமிகு திரு. கோ.சி. மணி .. .. 322, 323

(ஒ) தமிழ்நாடு இந்து சமய அறநிலைக் கொடைகள் (தனி வகைமுறைகள்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1999 .. 323-325

* மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன் 324-325

(ஓ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு, 1999 .. 325-358

மாண்புமிகு திரு. ஆலடி அருணா - 326, 349, 350-351 352-355, 357

திரு. ச. அழகிரி .. .. .. .. 326-338, 349-350, 354

* மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் -327-328, 329

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி - 329, 333, 335, 336

திரு. பெசு. திருவேங்கடம் .. .. .. 332, 333

திரு. சி. ஞானசேகரன் .. .. - 337

திரு. இரா. விசுவநாதன் .. .. - 338-340

திரு. நா. பெரியசாமி .. .. - 340-341

திரு. ம. அப்துல் லத்தீப் .. .. - 341-344

திரு. எஸ். எஸ். முகம்மது இஸ்மாயில் - 344-345





பக்கங்கள்

6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—தொடர்ச்சி

(ஓ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு, 1999—தொடர்ச்சி

* திரு. ஜே. ஹேமச்சந்திரன் - - - 345-347

திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் - 347-349

திரு. சோ. பாலகிருஷ்ணன் - - - 355-356

திரு. ஜி. பழனிசாமி - - - 356

திரு. பி.ஆர். சுந்தரம் - - - 356

(ஔ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1999 358-359

மாண்புமிகு திரு. ஆலடி அருணா - - 358, 359

(அஅ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1999 360-361

மாண்புமிகு திரு. ஆலடி அருணா 360-361

(அஆ) தமிழ்நாடு சங்கங்கள் பதிவு செய்தல் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1999 361-363

* மாண்புமிகு திரு. இ. பெரியசாமி - - 362, 363

7. அறிவிப்புகள்—

(அ) தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1999 (ஆஇ) 293

(ஆ) தமிழ்நாடு தொழிலியல் துறைக்கான நோக்கங்களுக்காக நிலத்தைக் கையகப்படுத்துதல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1999 (ஆஇ) 302

பக்கங்கள்

8. **அரசினர் தனித் தீர்மானம்—**

நாடாளுமன்ற இரு அவைகளிலும் நிறைவேற்றப்பெற்ற 1999 ஆம் ஆண்டு அரசமைப்பு (எண்பத்து நான்காவது திருத்தச்) சட்டமுன்வடிவினால் செய்யக் கருதப் பெற்றுள்ள இந்திய அரசமைப்பின் 368-வது பிரிவின் (2)-ம் பகுதியின் காப்புரையின் (d) பகுதியின் வரம்பிற்குள் வரும் திருத்தங்களுக்கு ஏற்பளித்தல் 363-364

9. **அரசினர் தீர்மானம்—**

பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப் பெறுதல் 364-365

10. **பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்—** 365-366

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

### கார்த்திகை 8, பிரமாதி, திருவள்ளுவர் ஆண்டு 2030

### 1999 நவம்பர் 24, புதன்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. பிடி.ஆர். பழனிவேல் ராஜன்** அவர்கள் தலைமையில் முற்பகல் 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"அறனிழுக்கா தல்லவை நீக்கி மறனிழுக்கா
மானம் உடைய தரசு"

அறநெறி தவறாமலும், குற்றமேதும் இழைக்காமலும், வீரத்துடனும், மானத்துடனும் ஆட்சி நடத்துபவர்களே சிறந்தவர்கள் ஆவார்கள்.

### 1. வினாக்கள்-விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 61, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**61—**

**காகித ஆலை**

*21254—**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டத்தில் கிடைக்கும் வைக்கோலை வைத்து அப்பகுதியில் காகித ஆலை தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**திரு. எஸ். வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம், முற்றிலும் விவசாயத்தை நம்பியிருக்கின்ற மாவட்டம். அங்கே அதிகமான அளவிலே வைக்கோல் கிடைக்கின்றது. அங்குள்ள இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை ஏற்படுத்தும் நோக்கத்துடன் வைக்கோலை மூலப்பொருளாகக் கொண்டு—அங்கே எந்தவிதமான தொழிற்சாலைகளும் தொடங்கப்படவில்லை என்பதால்—காகித ஆலை தொடங்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதனை மறுபரிசிலனை செய்வார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, பொதுவாக வைக்கோலை மூலப்பொருளாக வைத்து காகித ஆலை தொடங்குகின்ற ஒரு நிலையை யாரும் இப்போது ஆதரிப்பதாக இல்லை. அதுமட்டுமல்ல. தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில், அதிகமான வைக்கோல் உற்பத்தி ஆகிறது என்று மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகிறார். உண்மையிலேயே மூன்று பருவங்களிலும் சேர்ந்து 7.87 இலட்சம் டன் வைக்கோல்தான் தஞ்சை மாவட்டத்திலே உற்பத்தியாகின்றது. இதிலே கால்நடை தீவனத்திற்கு 50 சதவீதம் வைக்கோல் பயன்படுகின்றது. மீதியுள்ள வைக்கோல், தொழிற்சாலை தொடங்குகின்ற அளவிற்குப் போதுமானதாக இல்லை. இருந்தாலும் வைக்கோலை வைத்துத் தொழிற்சாலை தொடங்குவது அவ்வளவு உசிதமான ஒன்று இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மா. இராமச்சந்திரன்.

**திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது தமிழ்நாட்டிலே உள்ள மொத்த காகித ஆலைகள் எத்தனை? அவற்றில் தனியார் மற்றும் அரசு காகித ஆலைகள் எத்தனை என்ற விவரத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் அவைக்கு அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, தமிழகத்திலே மொத்தமுள்ள காகித ஆலைகள் 15. அதற்கான விவரங்கள்:





புகளூரில் தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம். இது ஆண்டு ஒன்றுக்கு 1,80,000 டன் காகிதத்தை உற்பத்தி செய்கின்றது. உடுமலைப்பேட்டை. பொள்ளாச்சி. ஆழியாறு மற்றும் காளைக்குடி ஆகிய இடங்களில் ஸ்ரீ வெங்கடேஸ்வரா குரூப் நிறுவனத்தைச் சேர்ந்த 5 ஆலைகள். 1,15,000 டன் காகிதத்தை உற்பத்தி செய்கின்றன. விளாம்பட்டி, போத்தம்பாளையம் ஆகிய இடங்களில் சேர்வார் குரூப் நிறுவனத்தைச் சேர்ந்த நான்கு ஆலைகள் மூலம் 1,08,000 டன் காகிதமும், மேலும் உடுமலைப்பேட்டையில் அமராவதி குரூப் நிறுவனத்தைச் சேர்ந்த நான்கு ஆலைகளின் மூலம் 80,000 டன் காகிதமும், பள்ளிப்பாளையத்தில் சேஷசாயி பேப்பர் மற்றும் போர்ட்ஸ் ஆலையின் மூலம் 57,000 டன் காகிதமும். ஆக 15 காகித ஆலைகள் மூலம் ஆண்டு ஒன்றுக்கு தமிழ்நாட்டில் 5,40,000 டன் காகிதம் உற்பத்தியாகின்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. குத்தாலம் பி. கல்யாணம்.

**திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காகிதத் தயாரிப்பில் தற்போது அதிகமாகப் பயன்படுத்தப்படும் மூலப்பொருள் என்ன என்பதை அறிய விரும்புகிறேன். மேலும் எங்களுடைய பகுதியில். துகிலியிலே ஒரு தனியார் சர்க்கரை ஆலையும், மணல்மேட்டில் என்.பி.கே.ஆர்.ஆர். சர்க்கரை ஆலையும், கொல்லுமாங்குடி அருகில் கீரனூரிலே ஒரு தனியார் சர்க்கரை ஆலையும் இருக்கின்றன. அவற்றிலிருந்து கிடைக்கின்ற கரும்புச் சக்கையைப் பயன்படுத்தி காகிதம் தயாரிக்கிற ஓர் ஆலையை எங்கள் பகுதியில் அமைக்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, கேள்வியினுடைய முதல் பகுதிக்கு என்னுடைய பதில். முன்பெல்லாம் மரம் (மூங்கில்) காகிதம் தயாரிக்கப் பெரும்பகுதி பயன்படுத்தப்பட்டது. இப்போது அவை எல்லாம் மிகச் சிறிய ஆலைகளுக்குத்தான் பயன்படுத்தப்படுகின்றன. பெரிய ஆலைகளுக்கு பகாஸ் என்று சொல்லப்படுகிற கரும்புச் சக்கைதான் பயன்படுத்தப்படுகின்றது. தஞ்சை மாவட்டத்திலே இருக்கின்ற சர்க்கரை ஆலைகளுக்காகப் பயன்படுத்துகின்ற கரும்பிலிருந்து காகித ஆலையை உருவாக்க இயலுமா என்று கேட்டிருக்கிறார். அங்கே போதுமான அளவுக்கு கரும்பும் இல்லை; பகாசும் கிடைக்காது. அதுமாத்திரமல்ல. தஞ்சை மாவட்டத்தில் ஒரு காகித ஆலையை உருவாக்குவது என்றால், 600 ஏக்கர் நிலம்

வேண்டும். 600 ஏக்கர் நஞ்சை நிலத்தைத் தருவதற்கு யாரும் தயாராக இருக்கமாட்டார்கள். அதுமாத்திரமல்ல. காகித ஆலையிலே இருந்து வருகின்ற கழிவு நீரும் விவசாயத்தைப் பெரிதும் பாதிக்கக்கூடிய அளவுக்கு மாசுபடிவதாக இருக்கின்ற காரணத்தால், அதனாலும் பல பிரச்சினைகள் உருவாகக்கூடும். எனவே தஞ்சை மாவட்டத்திலே இப்போது காகித ஆலை என்பது காகித அளவிலேதான் இருக்கமுடியும்.

*முற்பகல் 9-35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செ. இராமலிங்கம். தஞ்சை மாவட்டமா?

**திரு. செ. இராமலிங்கம்:** ஆம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் குறுவை நெல் சாகுபடி மட்டும் சுமார் 2 இலட்சம் ஏக்கரில் பயிர் செய்யப்படுகிறது. சம்பா பயிர் சுமார் 4 இலட்சம் ஏக்கரில் பயிர் செய்யப்படுகிறது. இதில், குறுவை சாகுபடியில் அறுவடை செய்யப்படுகின்ற வைக்கோலை தீவனத்திற்கு அதிகமாகப் பயன்படுத்துவது கிடையாது. காரணம் அது மழைக் காலங்களில் அறுவடை செய்யப்படுகிறது. எனவே அப்படி 2 இலட்சம் ஏக்கரில் கிடைக்கின்ற வைக்கோலிலிருந்து குறைந்தபட்சம் card board அட்டையைத் தயாரிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, வைக்கோலிலேயிருந்து காகிதம் தயாரிக்க முடியாது என்பதற்கு ஐந்து காரணங்கள் இருக்கின்றன. இந்த ஐந்தையும் நான் சொல்லிவிட்டால் பிறகு கேள்வி எழாது என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

முதல் காரணம், ஏற்கெனவே சொன்னேன், தஞ்சை மாவட்டத்திலே கால்நடை தீவனத்திற்கே 50 சதவிகிதம் வைக்கோல் தேவைப்படுகிறது என்று. எனவே போதுமான அளவுக்கு வைக்கோல் இல்லை என்று சொன்னேன்.

இரண்டாவது, வைக்கோலில், சிலிக்கா என்று ஒன்று இருக்கிறது. அந்த சிலிக்காவை இரசாயன முறையில் பிரித்தெடுக்கும்போது இயந்திரங்களுடைய உபகரணங்களை எல்லாம் துருப்பிடிக்கச் செய்து விடுகிறது. அதனால், அந்த ஆலையிலே உள்ள இயந்திரங்களுக்கு வைக்கோலில் இருக்கின்ற சிலிக்கா என்கின்ற அந்தப் பொருளின் காரணமாகச் சேதாரம் வெகுவிரைவிலே, அடிக்கடி ஏற்படக்கூடும். எனவே அது நல்ல அறிவுரையாக இல்லை காகிதத் தொழிற்சாலைக்கு.



அடுத்தபடியாக மாசுக் கட்டுப்பாடு. மத்திய அரசின் சுற்றுப்புறம் மற்றும் வனத் துறையின் தற்போதைய வழிகாட்டு நெறிகளின்படி காகிதத் தொழிற்சாலை அதிக அளவில் சுற்றுப்புறச் சுகாதாரக் கேடு விளைவிக்கும் தொழிலாகும். எனவே வெளியேற்றப்படும் கழிவுகளால் யாதொரு பிரச்சினையும் ஏற்படாத இடமாகத் தேர்வு செய்ய வேண்டும். அது தஞ்சை மாவட்டத்திலே இயலாத ஒன்றாகும்.

மேலும், ரூ. 50 கோடியும், அதற்கு மேலும் உள்ள பெரும் தொழில்களைத் தொடங்குவதாக இருந்தால், மத்திய அரசினுடைய விதிமுறைகளின்படி வெகு தொலைவிலே அவை எல்லாம் அமைய வேண்டும். இவை எல்லாம் வேண்டும்; 600 ஏக்கர் நிலம் அதற்கு வேண்டும். இவை எல்லாம் தஞ்சை மாவட்டத்திலே வாய்ப்பாக இல்லை என்பதற்கான இன்னொரு காரணம்.

கடைசியாக 5-வது காரணம். காகிதத் தொழிற்சாலைக்குத் தண்ணீர் மிக மிக அத்தியாவசியம். ஒரு இலட்சம் டன் காகிதம் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைக்குக் குறைந்தது, நாளொன்றுக்கு 35 ஆயிரம் கன மீட்டர் தண்ணீர் தேவைப்படுகிறது. தஞ்சை மாவட்டத்திலே இந்த அளவுக்குத் தண்ணீர் எடுத்தால், பிறகு அங்கே கொடி தூக்கிக்கொண்டு சாலைக்கு வந்துவிடுவார்கள், சாலை மறியல் செய்ய, என்பதையும் மறந்துவிடக் கூடாது.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** பேரவைத் தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தஞ்சை மாவட்டத்தைப் பற்றிக் கேட்கப் போகிறீர்களா? அதற்குத்தான் அனுமதி. மற்ற மாவட்டங்களுக்கு அனுமதி கிடையாது. நீங்கள் உட்காருங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** பேரவைத் தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தஞ்சை மாவட்டத்தைப் பற்றிக் கேட்கப் போகிறீர்களா? சரி, கேளுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வரவர்கள் காகித ஆலை தொடங்குவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லாததைப்பற்றி விளக்கமாக அறிவித்திருக்கிறார்கள். குறிப்பாக ஒன்றுபட்ட தஞ்சை மாவட்டம் வெறும் விவசாயத்தை மட்டுமே நம்பியிருக்கிற மாவட்டமாக இருக்கிறது.

[1999 நவம்பர் 24

முதல்வரவர்களே எங்களது மாவட்டத்தைச் சார்ந்தவர்கள். ஆகவே தொழில் துறையிலே மிகவும் பின்தங்கிய நிலை அங்கே இருக்கின்ற காரணத்தால், வேறு வகையான தொழில்களைத் தொடங்குவதற்குரிய சாத்தியக்கூறுகள் இருக்கின்றனவா என்பதை ஆராய்ந்து—ஏராளமான தொழில்கள் தொடங்கப்படுகின்றன பல மாவட்டங்களில்—நமது மாவட்டத்திலும் வேறு தொழில்களைத் தொடங்குவதற்கான முயற்சிகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மேற்கொள்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, முதலில் பசுமையே தலைகாட்டாத மாவட்டங்களை கவனித்து, பிறகு பசுமை குலுங்குகின்ற தஞ்சை மாவட்டத்தைத் தொழில் வளத்தைப் பொறுத்தவரையிலே கவனிக்கலாம் என்று கருதுகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ. அசோகன்.

முற்பகல் 9-40

**திரு. அ. அசோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக ஒரு காகித ஆலை ஆரம்பிக்க வேண்டுமென்றால் அதற்குக் குறைந்த உற்பத்தித் திறன் எவ்வளவு இருக்க வேண்டும்? அதற்கு எவ்வளவு மூலதனம் தேவைப்படும் என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, பெரிய ஆலையாக இருந்தால் ஒரு இலட்சம் டன் உற்பத்தித் திறன் இருக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எம்.எம்.எஸ். அபுல்ஹசன்.

**திரு. எம்.எம்.எஸ். அபுல்ஹசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியைச் சேர்ந்த வில்லியநல்லூர் பஞ்சாயத்தில் மல்லியங்கொல்லை என்ற ஒரு கிராமத்தில் அட்டை தொழிற்சாலை ஏற்படுத்தப்பட்டு, அதைத் தனியார் நடத்தி சில ஆண்டுகள் நடந்தபின் மூடி விட்டார்கள். அது பல ஆண்டுகளாகத் தொடர்ந்து மூடியே இருக்கிறது. அதை மறுபடியும் திறந்து சர்க்கார் எடுத்து நடத்துவதற்கு முயற்சி செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.



1999 நவம்பர் 24]

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, மூலக் கேள்வி வைக்கோலைப் பற்றியது, காகிதத்தைப் பற்றியது; அட்டையைப் பற்றியது அல்ல என்றாலும்கூட, அது என்ன அட்டை என்பதைத் தெரிந்துகொண்டு, அதுபற்றி யோசிக்கலாம் என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 62, திரு. நா. பெரியசாமி, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**62—**

## இட ஒதுக்கீடு

*23436—**திரு. நா. பெரியசாமி:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொழிற் கல்வி பயில்வதற்கு கிராமப்புற மாணவர்களுக்கான 15 விழுக்காடு இட ஒதுக்கீட்டை பேரூராட்சிகளின் எல்லைக்குள் அமைந்துள்ள மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கும் கிடைக்கின்ற வகையில் மாற்றியமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1997-98 ஆம் ஆண்டு முதல் தொழிற் கல்விகளில் கிராமப்புற மாணவர்களுக்கென்று சிறப்பாக 15 சதவிகித இட ஒதுக்கீடு வழங்கப்படுகிறது. இதிலே நகர்ப் பகுதியிலே, நகரத்தின் எல்லையிலே அமைந்த மேல்நிலைப் பள்ளிகளிலே படிக்கிற மாணவர்களே அதிகம் பயன்பெறுகிறார்கள் என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தபோது, 'கட்டணம் செலுத்தி பயில்கிற மாணவர்களுக்கு அப்படிப்பட்ட சலுகைகள் வழங்கப்படாது' என்பதை அரசு உறுதி செய்து இருக்கிறது. கிராமப்புறப் பள்ளிகளில் பயிலுகின்ற மாணவர்களுக்கு தொழிற் கல்விகளில் இட ஒதுக்கீடு வழங்கப்படுவது

குறித்து ஆய்வு செய்கிறபோது ஈரோடு மாவட்டத்தில் 343 சிற்றூராட்சிகளில், 20 சிற்றூராட்சிகளில் உள்ள மாணவர்கள் மட்டுமே பயன்பெறுகிறார்கள் என்றும், தமிழ்நாடு அளவில் எடுத்துக்கொண்டால் 12,584 ஊராட்சிகளில் 785 ஊராட்சிகளில் உள்ள மாணவர்கள் மட்டுமே பயன்பெறுகிறார்கள் என்றும் கண்டறியப்பட்டது. எனவே கிராமப்புற மாணவர்கள் பயன்பெறத்தக்க வகையில் அரசியல், சமூக, பொருளாதார நிலைகளோடு கல்வி ரீதியிலும், கிராமங்களாகவே நீடித்து வருகிற பேரூராட்சி எல்லைகளில் உள்ள பள்ளிகளுக்கும் இந்தச் சிறப்பு ஒதுக்கீடு வழங்குகிற திட்டத்தை விரிவுபடுத்தினால் உண்மையில் கிராமப்புற மாணவர்கள் அனைவரும் பயன்பெறத்தக்க ஒரு வாய்ப்பு ஏற்படும். அதற்கான முயற்சியினை அரசு மேற்கொள்ளுமா? அதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, யார் யாருக்கு எல்லாம் இடம் கொடுக்க வேண்டும் என்ற அடிப்படையிலே இந்தக் கொள்கை வகுக்கப்படவில்லை. யாருக்கு கட்டாயமாகக் கிடைப்பதற்கு வழி செய்ய வேண்டுமென்ற அந்த அடிப்படையிலே இந்தக் கொள்கை வகுக்கப்பட்டது. இப்போது நடைமுறைப்படுத்தப்பட்டு இருப்பது கடைசி அடித்தட்டிலே உள்ள பள்ளிகளில் பயில்கிற பிள்ளைகளுக்கு வாய்ப்புக் கிடைக்க. பேரூராட்சி மன்ற எல்லைக்குள் வருகிறபோது அந்தப் பள்ளிகளுடைய தரத்தைவிட அங்கே படிக்கின்ற பிள்ளைகளுடைய தரம் உயர்ந்து இருக்கிற வாய்ப்பு இருக்கிறது.

இரண்டாவது அப்படி விரிவுபடுத்திக் கொண்டு போகிறபோது "rural" என்று சொல்கிற அந்த இலக்கண வரம்பை நாம் கடந்து விடுகிறோம். அது நீதிமன்றத்திலே நிற்பதற்கு வாய்ப்பு இல்லை. எனவே நீதிமன்றத்திலே நிற்கக்கூடிய வாய்ப்பு இருக்கும் அடித்தட்டிலே உள்ள கிராமப் பகுதியைச் சார்ந்த பிள்ளைகள் பயன்பெறவும், எல்லாவற்றையும் விட அந்தப் பள்ளிகளும்கூட யாரும் கட்டணம் செலுத்தாமல் படிக்கக்கூடிய அரசுப் பள்ளி, பஞ்சாயத்துப் பள்ளி, உதவி பெறுகின்ற பள்ளிகள், தாழ்த்தப்பட்டோர் பள்ளிகள், அதேபோல சீர் மரபினர் பள்ளிகள், வனச் சரகப் பள்ளிகள் ஆகியவற்றில் படிக்கிற பிள்ளைகளுக்கு என்ற காரணத்தால் இந்த ஒதுக்கீடு யாருக்குப் போய்ச் சேர வேண்டுமோ அவர்களுக்குக் கட்டாயம் சேருகிறது. யார் யாருக்கு இதிலே புகுந்து கொள்ள வேண்டுமென்ற எண்ணம் இருக்கிறதோ



அவர்களுக்கு எல்லாம் இந்த வாய்ப்பு வழங்குவதற்கு இல்லை. ஆகவே இந்தக் கொள்கையை மாற்றுவதற்கு வழி இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேல்நிலைப் பள்ளிகள் என்பது பெரும்பாலும் பேரூராட்சிகளிலேதான் அமைந்திருக்கின்றன. பேரூராட்சி அல்லாத கிராமப் பஞ்சாயத்துக்களிலே பெரும்பாலும் மேல்நிலைப்பள்ளிகள் இல்லை; உயர்நிலைப்பள்ளிகள் அளவுக்குத்தான் அங்கு இருக்கின்றன. பொதுவாக பேரூராட்சி என்பது கிராமப் பகுதியாகத்தான் இருக்கிறது. எனவே பேரூராட்சிப் பள்ளிகளிலே பயில்கிறவர்களும் கிராமப்புறங்களைச் சேர்ந்தவர்கள் என்பதைக் கணக்கில் கொள்ள வேண்டுமென்று வலியுறுத்தி சொல்லி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தக் கருத்தை ஏற்றுக் கொள்வார்களா என்று கேட்டு அமைகிறேன்.

முற்பகல் 9-45

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் கூறுவது போன்று, கிராமப் பகுதிகளில் பள்ளிகள் ஏராளம் இருக்கின்றன. அந்தப் பட்டியலில் ஏறத்தாழ பத்திலே ஒன்று அல்லது எட்டிலே ஒன்று கிராமங்களில் இருக்கின்றன. ஆகவே அங்கே படிக்கின்ற பிள்ளைகளும் விண்ணப்பதாரர்களில் குறிப்பிடத்தக்க அளவுக்கு இருக்கிறார்கள். இரண்டாவது S.C. இட ஒதுக்கீடு, B.C. இட ஒதுக்கீடு, M.B.C. இட ஒதுக்கீடு என்ற வகையில் பேரூராட்சியிலுள்ள பிள்ளைகளும் இடம் பெறுகிறார்கள். எனவே பேரூராட்சிகளை சேர்க்கின்ற காரணத்தால் நம்முடைய குறிக்கோள்தான் பயன்படாமல் போய்விடுமே தவிர இப்பொழுது அடித்தட்டிலே உள்ள, அதிக முன்னேற்றமான முறையில் படிக்கிற சூழ்நிலை இல்லாத அந்தப் பிள்ளைகளுக்குக் கிடைக்கின்ற வாய்ப்பு மற்றவர்களுக்குப் போய்ச் சேரும். ஆனால் மற்றவர்களுக்கு வேறு இட ஒதுக்கீட்டிலே கிடைக்கின்ற வாய்ப்பு இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே பல்வேறு பேரூராட்சிகள், பேரூராட்சிகள் என்று பெயரளவிலே இருந்தாலும், முழுக்க முழுக்க சிற்றூராட்சிகளுக்கும் கீழே பொருளாதார நிலையில் பின்தங்கிய பேரூராட்சிகளாக

[1999 நவம்பர் 24

இருக்கின்றன. முழுக்க முழுக்க கிராமப்புறத்தைச் சேர்ந்த மாணவர்களுடைய எதிர்கால நலனைக் கருத்தில் கொண்டு மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இதை மறுபரிசீலனை செய்வார்களா? பேரூராட்சிப் பகுதிகளுக்கும் இந்தத் திட்டத்தை விரிவுபடுத்த முயற்சிப்பார்களா என்பதை மீண்டும் வலியுறுத்தி, அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டினி கிடக்கின்றவர்களுக்கு சோறு என்று தொடங்குகிறபோது, முழுப்பட்டினி உள்ளவர்களுக்குப் போடுகின்றபோது, அரைப் பட்டினியைப் பற்றி இப்போது கவனிக்க வாய்ப்பில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சோ. பாலகிருஷ்ணன்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களுக்காக ஒதுக்கப்பட்ட பணத்தில் ஒவ்வொரு தொகுதியிலேயும் மூன்று பள்ளிக்கூடங்களில் கணினி மையம் கட்டுவதற்காக பணம் ஒதுக்க வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறார்கள். என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் ஒரே ஒரு மேல்நிலைப்பள்ளி மட்டும்தான் அரசுப் பள்ளியாக இருக்கிறது. அந்த ஒரு பள்ளிக்கு ஒதுக்க வேண்டுமென்று நான் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு எழுதினேன். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மூன்று உயர்நிலைப் பள்ளிகளைக் கூட எடுக்கலாம் என்பதுபோல சொல்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கு ஒரு விளக்கம் அளிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கூடுமான வரையில் சிந்தித்துச் சொல்கிற பதிலைத்தான் இப்போது வழங்க முடியும். திட்டவட்டமான பதிலை நான் தெரிவிக்கவில்லை. இருந்தாலும்கூட பள்ளிக்கூட கட்டடங்களுக்கு என்று ஒதுக்கப்பட்டது இது. கணினிக்கு என்று ஒரு மேல்நிலைப்பள்ளிக்கு மட்டும் எடுத்துக்கொண்டாலும் கூட, இன்னும் இரண்டு பள்ளிகளுக்குக் கட்டடங்கள் கட்ட அதுவும் அந்தத் தொகுதியிலேதான் பயன்படும். தொகுதியைத் தவிர வேறு இடத்திலே அந்தப் பணத்தைக் கொண்டு போய்ச் செலவிடுவதற்கு நாம் அனுமதிக்கவில்லை. பள்ளி வளர்ச்சி என்ற முறையில் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் எந்தப் பள்ளிக்கூடத்தில் கட்டடம் கட்ட வேண்டுமென்று சொன்னாலும்கூட, அந்த முறையிலே கட்டுவதற்கு வாய்ப்பு இருக்கிறது.



1999 நவம்பர் 24]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 63, திரு. மா. இராமச்சந்திரன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**63—**

## பொது நூலகம்

***25824—திரு. மா. இராமச்சந்திரன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், குளிச்சம்பட்டு ஊராட்சியில் பொது நூலகம் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1948 ஆம் ஆண்டு பொது நூலகச் சட்டத்தின்படி 5,000 மக்கள் தொகைக்கு மேல் உள்ள இடங்களில் ஒரு கிளை நூலகமும், 1,000 மக்கள் தொகைக்கு மேல் உள்ள இடங்களில் ஒரு பகுதி நேர நூலகமும் திறக்க வழிவகை உள்ளது. ஆனால் நிதிப் பற்றாக்குறை காரணமாக இவ்வாறு மக்கள் தொகை கொண்ட அனைத்து இடங்களிலும் நூலகங்கள் திறக்க இயலவில்லை. இருப்பினும் குளிச்சம்பட்டு கிராமத்தில் மக்கள் தொகை 1,797 என்பதால், இக்கிராம மக்கள் பகுதி நேர நூலகம் திறப்பதற்கான நிபந்தனைகளை நிறைவேற்றித்தர முன்வந்தால் இவ்வூரில் பகுதி நேர நூலகம் திறக்கப்படும்.

**திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு கிராமங்களில் நூலகம் மிகவும் அவசியம் ஆகிறது. காரணம், நாட்டில் நடக்கின்ற நிகழ்ச்சிகளை அவசியம் தெரிந்துகொள்ள வேண்டுமென்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் விரும்புகிறார்கள். அந்த வகையிலே குளிச்சம்பட்டிலே ஒரு துணை நூலகம் அமைத்துத் தருவதற்கு நம்முடைய அமைச்சர் அவர்கள் ஆவன செய்வதற்கு உரிய கருத்துருவை அறிவிப்பார்களானால், நாங்கள் அந்த ஊரிலே துணை நூலகத்தைத் திறப்பதற்கு ஆவன செய்வதற்கு ஏதுவாகும். அதற்கு ஒரு நடைமுறை அறிவிப்பை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த நூலகம் தொடங்குவதற்கான முயற்சியில் இதுவரையில் ஈடுபட்டதாக எனக்குத் தெரியவில்லை. இருப்பினும் நடைமுறை விதிகளின்படி நூலகம் இயங்க வாடகை இல்லாத இலவசக் கட்டடம் அளிக்கப்பட வேண்டும்; ஏதாவது ஒரு சிறிய இடம். பின்னர் நூலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு 5 சென்ட் முதல் 10 சென்ட் வரை காலி மனை நூலக ஆணைக் குழு பெயருக்குப் பத்திரம் பதிவு செய்து தரவேண்டும்; 200 உறுப்பினர்கள் சேர்க்கப்பட வேண்டும். 2,000 ரூபாய் மதிப்புள்ள தளவாடங்கள் நன்கொடையாக வழங்கப்பட வேண்டும். 1,000 ரூபாய் தொகை செலுத்தி இரண்டு புரவலர்கள் சேர்க்கப்பட வேண்டும். இதிலே ஏதாவது முடியாவிட்டாலும்கூட ஒரு முயற்சி எடுத்துக் கொள்ளப்படுமானால், அந்தக் கிராம மக்கள் அதிலே ஆர்வம் காட்டுவார்களானால் அந்தப் பகுதியில் பகுதி நேர நூலகம் திறக்க அரசு ஆவன செய்யும்.

முற்பகல் 9-50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 64. திரு. லி. அய்யலுசாமி. மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

64—

## குடிநீர் வசதி

***8103—திரு. லி. அய்யலுசாமி:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவில்பட்டி தொகுதி, குருவிகுளம் ஊராட்சி ஒன்றியத்தில் வரகனூர், கஸ்தூரிரங்கபுரம், மையப்பாறை, நடுவப்பட்டி, முக்கூட்டுமலை ஆகிய கிராமங்களுக்கு கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் வெம்பக்கோட்டை ஆற்றிலிருந்து தண்ணீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.



தங்கள் அனுமதியுடன் திருத்தப்பட்ட விடையைத் தெரிவிக்கிறேன்.

கோவில்பட்டி தொகுதி, குருவிகுளம் ஊராட்சி ஒன்றியத்தில் வரகனூர், கஸ்தூரிரங்கபுரம், மையப்பாறை, நடுவப்பட்டி, முக்கூட்டுமலை ஆகிய கிராமங்களுக்கு வெம்பக்கோட்டை ஆற்றிலிருந்து தண்ணீர் வழங்கும் கூட்டுக் குடிநீர்த் திட்டக் கருத்துரு தற்போது அரசின் ஆய்வில் இல்லை. ஆனால் தாமிரபரணியை நீராதாரமாகக் கொண்ட கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் மேற்கண்ட கிராமங்களையும் இணைத்து ஆய்வுப் பணிகளை மார்ச் 2000-க்குள் முடிக்கத் திட்டமிட்டு அறிவிக்கப்பட்டுள்ளது.

**திரு. லி. அய்யலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஓராண்டுக்கு முன்னால் போட்ட கேள்வி. அதற்குப் பின்னால், குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிகளைக் கேட்டபோது, வெம்பக்கோட்டை ஆற்றில் தண்ணீர் குறைவாக இருக்கிறது. ஆகவே வேறு திட்டத்தில் சேர்த்துக் கொள்வோம் என்று சொன்னார்கள். இப்போது பாளையங்கோட்டை, மானூர், குருவிகுளம், சங்கரன்கோவில் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திலே என்னுடைய தொகுதியில் உள்ள 21 பஞ்சாயத்துக்களையும் சேர்த்திருக்கிறார்கள். அது மொத்தம் 388 கிராமங்களை இணைக்கக்கூடிய திட்டம். அந்தத் திட்டத்தை நல்ல பயன் தரக்கூடிய முறையில்—அமைச்சர் வாக்குறுதியில் சொன்ன மாதிரி—2000 ஆண்டில் தொடங்கிக் கொடுத்து நிறைவேற்றிட அமைச்சர் அவர்கள் துரித நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாமிரபரணி ஒரு வற்றாத நதியாக இருக்கின்ற காரணத்தால், அதிலிருந்து நீராதாரத்தை ஏற்றுக்கொண்டு, மானூர், குருவிகுளம், மேலிதநல்லூர் மற்றும் சங்கரன்கோவில் ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 388 கிராமங்களுக்குண்டான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் மேற்கண்ட கிராமங்களையும் இணைத்து திட்டத்தின் ஆய்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. அது முடிந்தவுடன் நீராதாரம் தோற்றுவிக்கின்ற தாமிரபரணி ஆற்றில் 12 நீர் உறிஞ்சும் நிலையங்களை அமைக்க இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. பிரதான நீர் உந்தும் குழாய் வழித்தடம் 120 கிலோ மீட்டர் நீளத்திற்கு மட்ட அளவுகள் முடிக்கப்பட்டன. உபரி நீர் உந்தும் குழாய் வழித்தடத்தின் மொத்த நீளம் 600 கிலோ மீட்டர். அதில் 190 மீட்டர் நீளத்திற்கு மட்ட அளவுகள் முடிக்கப்பட்டுவிட்டன. எனவே ஆய்வுப் பணிகள் வரும் மார்ச் 2000-க்குள் முடிவுற திட்டமிடப்பட்டுள்ளது. என்ன இருந்தாலும் இது

பெரிய திட்டம். மூன்று ஆண்டுகளுக்குக் குறைவாக இந்தத் திட்டத்தை நிறைவேற்ற இயலாது. ஆனால் தனியாக ஆங்காங்கே நீராதாரம் கிடைக்கிற இடத்தில்தான் ஏற்கெனவே நான் அறிவித்த திட்டங்களை நிறைவேற்ற முடியுமே தவிர, கூட்டுக் குடிநீர்த் திட்டங்களைப் பொறுத்தவரையில் ரொம்பவும் அவசரப்படாமல் செய்தால்தான் சில பணிகள் நிரந்தரமாக நீடிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு எஸ்.எஸ். மணி நாடார். கோவில்பட்டி பற்றித்தான் கேட்க வேண்டும்.

**திரு. எஸ்.எஸ். மணி நாடார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாத்தான்குளம்-உடன்குடி கூட்டுக் குடிநீர்த் திட்டம் மூலம் 308 கிராமங்களுக்குப் பயன்படும் வகையில் அங்கே பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன. அதிலே 10-க்கும் மேற்பட்ட கிராமங்கள் இந்தத் திட்டத்திலிருந்து விடுபட்டிருக்கின்றன. இந்த 10-க்கும் மேற்பட்ட கிராமங்களை மீண்டும் இந்தத் திட்டத்தில் சேர்த்துக் கொள்வதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்று கேட்டு, அந்தப் பணிகளையெல்லாம் துரிதமாகச் செய்ய நடவடிக்கை எடுப்பாரா என்றும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல 308 கிராமங்கள் அல்ல. 388 கிராமங்கள் அதில் இணைக்கப்படும். ஆனால் அந்த 388 கிராமங்களில் அவர் குறிப்பிட்ட 308 போக 80 விடுபட்டிருந்தால், அதையும் அவர் தயவுசெய்து சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தவிர வழியோர கிராமங்கள் அனைத்தும் விடுபடாமல் இருக்கின்ற தன்மையில் தனியாக நீராதாரம் கிடைக்காத கிராமங்கள் ஏதேனும் வழியோரத்தில் இருந்தால் நிச்சயமாக இணைத்துக் கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 65. திரு. எஸ்.எஸ். பொன்முடி, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.



**65—**

### குடிநீர்த் திட்டம்

***30120—திரு. எஸ்.எஸ். பொன்முடி:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் மாவட்டத்தில் இரண்டாவது அத்திக்கடவு குடிநீர்த் திட்டத்தைச் செயல்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கோயம்புத்தூர் மாவட்டத்தில் இரண்டாவது அத்திக்கடவு குடிநீர்த் திட்டத்தைச் செயல்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளது.

**திரு. எஸ்.எஸ். பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தின் கடைசிப் பகுதியான பல்லடம், பொங்கலூர் தொகுதிகளுக்கு, குடிநீரானது இரண்டு நாட்களுக்கு ஒரு முறைதான் கிடைத்து வருகிறது. ஆகவே இந்தத் திட்டம் எவ்வளவு விரைவாக செயல்படுத்தப்படும், அதன் மதிப்பீடு எவ்வளவு என்று அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 9-55*

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இருக்கிற திட்டத்தில், எதிர்காலத்தில் கொடுக்க வேண்டிய அளவுக்குத் தண்ணீர் இல்லாத காரணத்தால், இது ஒரு துணைத் திட்டமாகத் தயாரிக்கப்பட்டு, இத்திட்டம் ஆரம்பிப்பதற்கான நிலையில் இருக்கிறது. ஏறத்தாழ 2026 ஆம் ஆண்டுக்குரிய குடிநீர் அளவு எவ்வளவு தேவையோ, அதை இதில் சேர்த்து இருக்கிறோம். கோவை மாநகராட்சிக்குக் கூடுதலாக 785 இலட்சம் லிட்டரும், வழியோரம் உள்ள 22 பேரூராட்சிகளுக்குக் கூடுதலாக 238 இலட்சம் லிட்டரும், 523 வழியோர கிராமங்களுக்குக் கூடுதலாக 120 இலட்சம் லிட்டரும் குடிநீர் வழங்க திட்டமிட்டு, இரண்டாவது குடிநீர்த் திட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறது. இது முதல் கட்டம். அதிலேயே முதல் கட்டமாக கோவை மாநகராட்சிப் பகுதிகளுக்கு குடிநீர் வழங்க ஆய்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள்

1999 டிசம்பருக்குள் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. முதல் கட்டப் பணிக்கான தோராய மதிப்பீடு ரூ.159 கோடியாகும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. மோகன் கந்தசாமி.

**திரு. ப. மோகன் கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஓர் அருமையான திட்டம். என்னுடைய பொங்கலூர் தொகுதிக்காகவே இது முதலிலே பரிந்துரை செய்யப்பட்டு, கிட்டத்தட்ட 253 கிராமங்கள் அதனால் பயன்பெறுகின்றன. ஆனால் இன்னும்கூட 40 கிராமங்களுக்கு முழுமையாகத் தண்ணீர் வரவில்லை. அமைச்சர் அவர்கள் அதற்குக் கடுமையான நடவடிக்கை எடுத்தபோது ஒரு வாரம் தண்ணீர் வருகிறது; வாரத்தில் ஒரு நாள், இரண்டு நாள் தண்ணீர் வருகிறது; பின்னர் நின்று விடுகிறது. சென்ற மாதம்கூட அமைச்சர் அவர்கள் கடுமையாக அதிகாரிகளிடம் சொன்னார்கள். ஆனாலும் இப்போது தண்ணீர் வரவில்லை. அதற்குக் காரணம்—நான் புரிந்து கொண்ட வகையிலே—என்னவென்றால், Technical-ஆக சில கோளாறுகள் அங்கே இருக்கின்றன. எனவே இங்கிருந்து சில experts அனுப்பி, அந்த மாதிரிப் பகுதிகளுக்கு ஏன் குடிநீர் வருவதில்லை என்பது பற்றி ஆய்வு செய்வார்களா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டமே மிகப் பெரிய திட்டம் நீண்ட தூரம் தண்ணீர் கொண்டு செல்கிற திட்டம். இப்படி தூரம் போகப்போக, தண்ணீர் போய்ச் சேருகிற நிலை சில நேரங்களில் குறைந்தும் அல்லது தடைப்பட்டும் போகிற சூழ்நிலை அடிக்கடி ஏற்படுகிறது. இப்போது இருக்கிற திட்டத்தையே இந்த அளவிலேயே நிறைவேற்றினால்கூட அதிலே இன்னும் பல sub-station-கள் உருவாக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. ஆகையினால் தட்டுப்பாடு ஏற்படுகின்ற நேரத்தில், அதற்கான முயற்சிகளிலே ஈடுபட்டு, அது வாராமல் இருப்பதற்கான நடவடிக்கையை நிச்சயமாக இந்த அரசு மேற்கொள்ளும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.எஸ். பொன்முடி.

**திரு. எஸ்.எஸ். பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியில் கிட்டத்தட்ட 5 பஞ்சாயத்துக்களில் அத்திக்கடவு குடிநீர்த் திட்டம் இல்லை. அந்த பஞ்சாயத்துக்கள் எல்லாம் அன்னூர்,



அவிநாசி, அத்திக்கடவு கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளன. இந்தத் திட்டத்தில் தொடக்கப்பணிக்காக 50 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டு இருப்பதாகவும், இந்தத் திட்டத்தின் பழைய மதிப்பீடு ரூ.38 கோடியிலிருந்து தற்போதைய மதிப்பீடு ரூ.50 கோடியாக திருத்தி அமைக்கப்பட்டு, அனுமதிக்காக அரசுக்கு அனுப்பப்பட்டு உள்ளதாகவும் கோவையில் நடந்த ஆய்வுக் கூட்டத்தில் அதிகாரிகள் சொன்னார்கள். தற்போது அந்தத் திட்டத்தின் நிலை என்ன? எப்போது தொடங்கப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்குரிய தகவல் தற்போது இல்லை. தனியாகக் கேட்டால் அது தரப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1996 ஆம் ஆண்டு வள்ளியூர், பணகுடி, தாமிரபரணி கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்காக ரூ.22 கோடியே 8 இலட்சத்திற்கு 1997 மார்ச்சிலேயே மதிப்பீடு தயாரித்துவிட்டார்கள். மேற்படி திட்டத்தின் மூலம் பணகுடி, வள்ளியூர், ஏர்வாடி, திருக்கரங்குடி, களக்காடு ஆகிய பேரூராட்சி மன்றங்களும், 170-க்கும் மேற்பட்ட வழியோரக் கிராமங்களும் பயன்பட இருக்கின்றன. மேற்படி திட்டத்திற்கு detailed estimate தயாரித்து இப்போது அரசினுடைய கொள்கை முடிவின்படி, இந்தத் திட்டம் பின்னர்தான் எடுத்துக் கொள்ளப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்து இருக்கின்றார்கள். இந்தத் திட்டத்திற்கு 1997-லேயே மதிப்பீடு தயாரிக்கப்பட்டதால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தத் திட்டத்திற்கு கடந்த கால திட்டத்தைப்போல நிதி ஒதுக்கீடு செய்து இதைத் திட்டத்தில் சேர்த்துக் கொள்வார்களா என்று தங்கள் மூலம் அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது என்னிடத்தில் தகவல் இல்லை. தனியாகக் கேள்வி போடவும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 66, திரு. ப. பாலசுப்பிரமணியன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

66—

## விவசாயப் பண்ணை

***24221—திரு. ப. பாலசுப்பிரமணியன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டுக்கோட்டை விவசாயப் பண்ணையை விரிவுபடுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) பட்டுக்கோட்டையில் அரசுப் பண்ணை எதுவும் செயல்படவில்லை. எனினும் அரசுக்குச் சொந்தமான நிலத்தில் தென்னை நாற்றங்கால் பண்ணை செயல்பட்டு வருகிறது. இந்தத் தென்னை நாற்றுப் பண்ணையை விரிவுபடுத்தும் திட்டம் ஏதும் தற்போது பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

முற்பகல் 10-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 67, திரு. ப. கோவிந்தன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

67—

## நகரப் பேருந்து வசதி

***21651—திரு. ப. கோவிந்தன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, மூங்கில்பாடி ஊராட்சியில் சேனைக்கவுண்டனூர், துட்டாஞ்சாவடி, பறைவைகாடு, அத்துவான் மாரியம்மன் கோயில் ஆகிய பகுதிகளுக்கு நகரப் பேருந்து வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) வினாவில் குறிப்பிட்ட வழித்தடம் மிகக் குறுகிய சாலையாக இருப்பதாலும், சாலையின் குறுக்கே மின் கம்பங்கள் உள்ளதாலும், ஓடை ஒன்று இருப்பதாலும், பேருந்து இயக்க சாத்தியக்கூறு இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 68, திரு. ந. பாண்டுரங்கன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

68—

## பேருந்து வசதி

***24932—திரு. ந. பாண்டுரங்கன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், தெள்ளாரிலிருந்து திருவண்ணாமலை செல்ல நேரடிப் பேருந்து வசதி இல்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தெள்ளாரிலிருந்து திருவண்ணாமலைக்கு நேரடிப் பேருந்து இயக்கும் அளவிற்கு பயணிகள் அடர்வு போதுமானதாக இருக்காது என்பதாலும் பகுதிவாரியாக போதுமான போக்குவரத்து வசதி இருப்பதாலும் நேரடிப் பேருந்து இயக்க சாத்தியக்கூறு இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 69, திரு. அ. மாரிமுத்து. மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

**69—**

**பயணியர் விடுதி**

***6511—திரு. அ. மாரிமுத்து:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விழுப்புரம் மாவட்டம், வானூர் வட்டத்தில் பயணியர் விடுதி அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

நெடுஞ்சாலைத் துறைக்குக் கட்டடங்களுக்கான நிதி ஒதுக்கீடு மிகக் குறைந்த அளவே உள்ளதால் விழுப்புரம் மாவட்டம், வானூர் தாலுகாவில் பயணியர் விடுதி அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. அ. மாரிமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. வானூர் ஊராட்சி ஒன்றியத்தினுடைய தலைமையிடமாகவும், வானூர் வட்டத்தினுடைய தலைமையிடமாகவும், வானூர் தொகுதியினுடைய தலைமையிடமாகவும், வானூர் விளங்கி வருகிறது. ஏற்கெனவே அங்கேயிருந்த பயணியர் விடுதியின் கட்டடம் தற்போது தரைமட்டமாகிவிட்ட காரணத்தாலும், திண்டிவனத்திற்கும், புதுவை மாநிலத்திற்கும் இடையில் பயணியர் விடுதி இல்லாத காரணத்தாலும், மத்திய, மாநில அமைச்சர்கள் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் போன்றவர்கள் மக்களுடைய குறைகளைக் கேட்பதற்காக வருகின்றபோது அவர்கள் தங்க பயணியர் விடுதி இல்லாத காரணத்தாலும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து பயணியர் விடுதியை அங்கே தொடங்க ஆவன செய்வார்களா? மறுபரிசீலனை செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மறுபரிசீலனை செய்ய வேண்டிய அவசியம் இல்லை. அடிப்படை வசதிகளான சாலை, குடிதண்ணீர், பள்ளிக்கூடக்





கட்டடம் ஆகியவற்றிற்குத்தான் நம்முடைய அரசு முன்னுரிமை அளிக்கின்றது. ஆகவே நெடுஞ்சாலைத் துறையைப் பொறுத்தமட்டில், கிராம இணைப்புச் சாலைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. பயணியர் விடுதி போன்ற பணிகளுக்கு நிதியாதாரம் கிடைக்கின்றபோது வானூரிலேயும் பயணியர் விடுதி கட்டுவதைப் பற்றி பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 70, திரு. சி.வெ. கிருஷ்ணன், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

**70—**

**பாலம் அமைத்தல்**

***15067—திரு. சீ.வெ. கிருஷ்ணன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் தொகுதி, குடகனாறு அணைக்கட்டு வழியாக கரூர் செல்லும் சாலையில் வள்ளிப்பட்டி-கம்பூருக்கு இடையில் கணேசபுரத்தில் உள்ள நீரோடையில் பாலம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**திரு. சீ. வெ. கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய வேடசந்தூர் தொகுதியிலேயிருந்து அழகாபுரி வழியாக, வள்ளிப்பட்டிக்கு வடபுறமும், கம்பூருக்குத் தென்புறமும் உள்ள ஓடையில் மழைக் காலங்களில் மழை பெய்கிறபோது, நீர் நிரம்பி, அந்தப் பகுதியிலே போக்குவரத்து தடைப்பட்டுப் போய்விடுகின்றது. விவசாயிகள் உற்பத்தி செய்கிற பொருள்களைக் கட்டை வண்டி, டயர் வண்டி மூலமாகக் கொண்டு செல்ல முடியவில்லை. அதைப்போல் சைக்கிளிலும் செல்ல முடியவில்லை. நம்முடைய அமைச்சர் திண்டுக்கல்லிற்கு

வந்திருந்தபோது என்னுடைய தொகுதிக்கு இந்தப் பாலத்தை அமைத்துத் தாருங்கள் என்ற கேட்டேன். கட்டித் தருகிறேன் என்று உறுதி தந்தார்கள். எனவே இதை மீண்டும் பரிசீலனை செய்து அந்தப் பாலத்தைக் கட்டித் தருமாறு அன்போடு கேட்டு, கட்டித் தருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்டிருக்கிற அந்தப் பாலம் உள்ள இடம், சரியாகச் சொல்ல வேண்டுமானால் விரியம்பட்டி-கம்பூர் சாலை என்பதிலேதான் அந்தப் பாலத்தை அமைத்துத் தர வேண்டுமென்று அவர் கேட்கிறார். இது ஏறத்தாழ 16.60 கிலோமீட்டர் நீளமுடைய இதர மாவட்டச் சாலை. (O.D.R.) இந்தச் சாலையினுடைய இடதுபுறத்தில் திண்டுக்கல்-கரூர் தேசிய நெடுஞ்சாலை-7 செல்கிறது. வலதுபுறம் திண்டுக்கல்-கரூர் மாவட்டச் சாலை செல்கிறது. இந்த ஓடையிலே ஒரு பாலம் அமைக்கப்பட வேண்டியது அவசியம்தான் என்றாலும், தற்போதுள்ள நிதிநெருக்கடியில் உடனடியாக எடுத்துச் செய்வதற்கு வாய்ப்பில்லை. வருகிற காலத்தில் இதுகுறித்து பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 71, திரு. ஏ. கோதண்டம், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

**71—**

**நினைவுக் கோட்டம்**

***22786—திரு. ஏ. கோதண்டம்:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தெய்வ சேக்கிழார் பிறந்த குன்றத்தூரில் சேக்கிழார் நினைவுக் கோட்டம் அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 72, திரு. க. மணிவர்மா, மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

**72—**

**தங்கத் தேர்**

***25977—திரு. க. மணிவர்மா:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை அருள்மிகு அருணாசலேஸ்வரர் ஆலயத்தில் தங்கத் தேர் செய்யும் திட்டத்தின் தற்போதைய நிலை என்ன?

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தங்கத் தேர் செய்யும் திட்டம் தற்போது இல்லை.

**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை அருள்மிகு அருணாசலேஸ்வரர் ஆலயத்திற்கு தங்கத் தேர் செய்யப்படும் என்று சென்ற ஆட்சிக் காலத்தில்—வருமானம் குறைவாக இருந்த காலத்திலேகூட அப்போது அறிவிக்கப்பட்டு—அறிவித்ததோடு நிறுத்திவிட்டார்கள். திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் ஆலயத்திற்கு இப்போது ஆண்டிற்கு ஒரு கோடி ரூபாய்க்கு மேல் வருமானம் வருகிறது. தங்கத் தேர் அமைத்து அருணாசலேஸ்வரர் வீதி உலா பவனி வர மாண்புமிகு அமைச்சரவர்கள் ஆவன செய்வார்களா? இதை மறுபரிசீலனை செய்வார்கள-

என்பதோடு, கடந்த 4 ஆண்டுகளுக்கு முன்பாக திருவண்ணாமலை ஆலயத்தில் பதினாறு கால் மண்டபம் எரிந்து சாம்பலாகியது. ஓராண்டிற்குள் கட்டி முடிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு 4 ஆண்டுகள் ஆகியும் இன்று வரையில் கட்டி முடிக்கப்படாமல் இருக்கின்றது. அதையும் விரைவில் கட்டிமுடிக்க மாண்புமிகு அமைச்சரவர்கள் ஆவன செய்வார்களா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-05*

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதல் பகுதி இந்த மூல வினாவுக்குத் தொடர்புடையது. இரண்டாவது, கோயிலுக்கு மட்டுமே தொடர்புடையது; வினாவுக்கு தொடர்புடையதல்ல. எனினும் முதல் கேள்விக்கு விடை, கடந்த ஆட்சிக் காலத்தைவிட, இந்த ஆட்சிக் காலத்தில் திருவண்ணாமலைக் கோயிலின் வருமானம் கூடி இருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் சொன்னதற்கு நன்றி. இந்த கோயிலுக்குக் குடமுழுக்கு விழா நடைபெற்றே 28 ஆண்டுகள் ஆகிவிட்டன. இப்பொழுது இந்த அரசு முயற்சி எடுத்து குடமுழுக்கு விழா நடத்துவதற்கு ஏற்பாடு செய்து இருக்கிறது என்பதை உறுப்பினர் அறிவார். அந்தக் குடமுழுக்கு விழாவுக்கு திருப்பணிக் குழுத் தலைவராக இசைஞானி இளையராஜா அவர்கள் அமர்த்தப்பட்டிருக்கிறார் என்பதையும் இந்த அவைக்குத் தெரியப்படுத்துவது என்னுடைய கடமை. அந்த அடிப்படையில் இப்பொழுது வருகின்ற வருமானத்தைக் கொண்டும், நன்கொடையாளர்களுடைய உதவியைக் கொண்டும் குடமுழுக்குப் பணி முதலில் நடத்தப்படவேண்டும். அதுதான் இன்றியமையாத, தலையாய பணி. அதைச் செய்த பிறகு, தங்கத் தேரைப் பற்றிச் சிந்திக்கலாம்.

இரண்டாவது, மணி மண்டபத்திற்கான வேலை என்பது, வெறும் சிமெண்ட் பூச்சால் நடைபெறுகிற வேலை அல்ல என்பது உங்களுக்குத் தெரியும். திருவள்ளுவர் சிலையே நீண்ட காலத்திற்கு முன்பாகத் தொடங்கப்பட்டு தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியில்தான் முழுமையாக முடிக்கப்பட்டு இப்போது திறப்பு விழா நடத்தும் அளவுக்கு வந்திருக்கிறது என்று சொன்னால், அரசு எடுத்துக்கொள்கிற கடும் முயற்சிதான் காரணம். அதுவும் கிரானைட் கற்களால் படிப்படியாக அடுக்கி வைக்கப்பட்டு வரவேண்டும். அதேபோலத்தான் அந்த கல்





மண்டபமும். வெறுமனே ஒரு கல்லைத் தூக்கி வைத்துவிட முடியாது என்பது உங்களுக்குத் தெரியாதது அல்ல. சிற்பிகள் பலபேர் சேர்ந்து, இன்னும் சொல்லப்போனால், தலைமைச் சிற்பியாக இருக்கிற ஸ்தபதி கடுமையான முயற்சி எடுத்துப் பலபேரை வைத்துக்கொண்டு தொடர்ந்து வேலை செய்து கொண்டிருக்கிறார். எனினும் வெகு விரைவில் கட்டி முடித்து, எழுப்பப்படும். திறப்பு விழாவில் இரண்டு பேரும் கலந்து கொண்டு வாழ்த்தலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 73, திரு. விஜி. தனபால், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**73—**

**மருத்துவமனைக்குக் கட்டட வசதி**

***28921—திரு. வி.ஜி. தனபால்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடியாத்தம் E.S.I. மருத்துவமனைக்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், குடியாத்தத்தில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம் மற்றும் பணியாளர்களுக்கான குடியிருப்புகள் கட்ட, சர்வே எண் 411-ல் 1.74 ஏக்கர் பரப்பளவுள்ள அருள்மிகு செல்வ விநாயகர் கோயிலுக்குச் சொந்தமான இடம் சதுர அடி ரூ.91 என்ற விலைக்குத் தேர்வு செய்யப்பட்டது. சதுர அடிக்கு ரூ.91 என்பது அதிகம் என்று மண்டல இயக்குநர், தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகம், சென்னை, தெரிவித்ததற்கிணங்க, கையகப்படுத்தும் நடவடிக்கை கைவிடப்பட்டு விட்டதால், வேறு நிலம் தேர்வு செய்ய தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அவ்வாறு நிலத் தேர்வு முடிந்து நிலம் கையகப்படுத்திய பின்னர்தான் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகத்துடன் ஆலோசித்து தக்க முடிவுகள் எடுக்கப்படும்.

**திரு. வி.ஜி. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடியாத்தம் பகுதி நூற்பாலைத் தொழிலாளர்கள், பீடித் தொழிலாளர்கள் மற்றும் தீப்பெட்டித் தொழிலாளர்கள் நிறைந்த பகுதியாகும். அங்கு E.S.I. மருத்துவமனை தற்போது தனியார் கட்டடத்தில் வாடகைக்கு மிகக் குறுகிய இடத்தில் இயங்கி வருகிறது. மாண்புமிகு அமைச்சரவர்கள் குறிப்பிட்ட, அறநிலையத் துறையின் கோயிலுக்குச் சம்பந்தப்பட்ட அந்த இடத்தை, அறங்காவல் குழுத்தலைவரும் மற்றும் உறுப்பினர்கள் அனைவரும் அரசு நிர்ணயித்த விலைக்குத் தர ஒப்புதல் கொடுத்து, அரசுக்குக் கடிதம் கொடுத்துள்ளார்கள். ஆகவே மீண்டும் அதைப் பரிசீலனை செய்து குடியாத்தத்தின் மையப் பகுதியில் உள்ள அந்த இடத்தில் E.S.I. மருத்துவமனை கட்ட அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் தெரிவிக்கும் தகவலின் அடிப்படையில் அதை ஆய்ந்து அது சரியாக இருக்குமானால் அரசு உரிய நடவடிக்கை எடுத்து தொழிலாளர்களின் நலன்களைப் பேணுகின்ற விதத்திலே E.S.I. மருத்துவமனையை அங்கே கட்ட உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 74, திரு. அ.லெ. சுப்பிரமணியன், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**74—**

**மாவட்ட அமர்வு நீதிமன்றம்**

***30976—திரு. அ.லெ. சுப்பிரமணியன்:**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இனக் கலவரத்தின் காரணமாக திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களில் அதிகமான கொலைகள் நடந்துள்ளதைக் கருத்திற்கொண்டு இக்கொலை வழக்குகளை விசாரிக்க ஒரு தனி மாவட்ட அமர்வு நீதிமன்றம் திருநெல்வேலியில் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



இனக் கலவரத்தின் தொடர்பாக ஒரு தனி மாவட்ட அமர்வு நீதிமன்றம் திருநெல்வேலியில் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

**திரு. அ.லெ. சுப்பிரமணியன்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, இனக் கலவரத்தின் காரணமாக நடந்த கொலை வழக்குகளை விசாரிக்க மதுரையிலே ஒரு தனி அமர்வு நீதிமன்றம் இப்பொழுது அமைக்கப்பட்டிருக்கிறது. இது திருநெல்வேலியிலிருந்து 175 கி.மீ. தொலைவில் இருக்கிறது. இப்படிப்பட்ட வழக்குகளில் ஏராளமான எதிரிகள் சேர்க்கப்பட்டு இருக்கிறார்கள். ஒவ்வொரு வாய்தாவிற்கும் அவர்கள் செல்வதற்கு மிகவும் கடினமாக இருக்கிறது. எனவே இதைக் கருத்தில் கொண்டு, இனக் கலவரம் குறித்து விசாரிக்க மதுரையில் அமைக்கப்பட்டிருக்கின்ற தனி நீதிமன்றத்தை திருநெல்வேலிக்கு மாற்றித்தர அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-10

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1997, 1998, 1999 ஆம் ஆண்டுகளில் நடந்த இனக் கலவரங்களில் 1030 வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. இந்த வழக்குகளில் கொலை, கற்பழிப்பு, பேருந்துகளுக்குத் தீ வைத்தல் போன்ற கொடிய குற்றங்கள் நீங்கலாக பிற குற்றங்களைப் புரிந்ததாகக் குற்றம் சாட்டப்பட்டவர்களுடைய வழக்குகளைத் திரும்பப் பெற வேண்டும் என்று கேட்டுக் கொண்டதன்பேரில், மாண்புமிகு முதல்வர் அவர்கள் கருணை உள்ளம்கொண்டு, அவற்றையெல்லாம் திரும்பப் பெற ஒப்புதல் அளித்தார்கள். அப்படி ஒப்புதல் அளித்ததன் காரணமாக 1030 வழக்குகளில் 553 வழக்குகள் இப்போது திரும்பப் பெறப்படுகின்றன. எனவே மீதியுள்ள வழக்குகள் 477 தான். இப்படி, திரும்பப் பெறப்பட்ட வழக்குகளின் மூலம் 11,562 பேர் வழக்குகளிலிருந்து விடுவிக்கப் படுகிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர், நம்முடைய A.L.S. அவர்கள் திருநெல்வேலிக்குத் தனி நீதிமன்றம் வேண்டும் என்று கேட்டார். ஆனால் வழக்குகளின் விவரத்தைப் பார்த்தால், திருநெல்வேலிக்கு அப்படியொரு நீதிமன்றமே தேவையில்லை. திருநெல்வேலி நகரம், திருநெல்வேலி மாவட்டம், இவற்றில் 127 வழக்குகள் பதிவாகியிருக்கின்றன. இதிலே 110 வழக்குகள் திரும்பப் பெறப்பட்டு விடுகின்றன. மீதியுள்ள வழக்குகள் 17. கன்னியாகுமரியில் 7 வழக்குகள்

பதிவாகியிருக்கின்றன. அதிலே 5 வழக்குகள் திரும்பப் பெறப்பட்டு விடுகின்றன. மீதியுள்ள வழக்குகள் இரண்டுதான். அதேபோல தூத்துக்குடியில் 67 வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. அதிலே 50 வழக்குகள் திரும்பப் பெறப்பட்டு விடுகின்றன. மீதியுள்ள வழக்குகள் 17 தான். ஆக கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி ஆகிய இந்த மூன்று மாவட்டங்களிலே நடக்கப் போகிற வழக்குகள், விசாரணைக்கு இருக்கிற வழக்குகள், 36 தான். இந்த 36 வழக்குகளுக்காக ஒரு நீதிமன்றத்தை அமைக்க முடியாது. மிகுதியான வழக்குகள் விருதுநகர் மாவட்டத்திலும், இராமநாதபுரம் மாவட்டத்திலும் இருப்பதால், அந்தத் தனி நீதிமன்றம் மதுரையில் செயல்படுவதுதான் பொருள் நிறைந்தது; பொருத்தமானது.

. **மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்த வழக்குகளின் தன்மைகளைப் பற்றிப் பேச நான் அனுமதி கொடுக்க முடியாது. நீங்கள் நீதிமன்றத்தைப் பற்றித்தான் கேட்க வேண்டுமேயொழிய** என்று சொல்வதை நான் அனுமதிக்க முடியாது. இது மிகவும் கண்டிப்பானது. நீங்கள் பேசியது அவைக் குறிப்பிலே இருக்காது. நீங்கள் வேறு ஏதாவது சொல்ல வேண்டுமானால் சொல்லுங்கள்.

**திரு. மு. அப்பாவு:** **

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அப்பாவு அவர்கள் சொன்ன கருத்துகளை அவைக் குறிப்பிலிருந்து எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துணை வினாவாக நீங்கள் கேட்க வேண்டியது வேறு; இங்கே பேசியது வேறு. உங்களுக்குத் துணை வினா கேட்க அனுமதி கிடையாது. திரு. அ.லெ. சுப்பிரமணியன்.

**திரு. அ.லெ. சுப்பிரமணியன்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மூன்று மாவட்டங்களிலும் 36 வழக்குகள் நிலுவையில் இருப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இதில் தனி நீதிமன்றம், மதுரையில் நடத்துவதற்குப் பதிலாக, ஏற்கெனவே திருநெல்வேலியில் நான்கு அமர்வு நீதிமன்றங்கள் இருக்கின்றன, பொது

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.



நீதிமன்றங்கள். அவற்றிற்கே மாற்றிட இந்த 36 வழக்குகளையும், வழக்கிலே இருக்கின்ற எதிரிகளின் நன்மைக்காக திருநெல்வேலியில் உள்ள Regular Court-க்கு மாற்ற அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-15

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனி நீதிமன்றம் அமைப்பதென்பது வழக்குகளை விரைவுபடுத்தி விசாரித்து தீர்ப்பளிக்க வேண்டும் என்பதற்குத்தான். சமுதாயம் சம்பந்தப்பட்ட, கலவரம் சம்பந்தப்பட்ட வழக்குகளுக்குத் தனி நீதிமன்றம் அமைத்துவிட்டு பிறகு அந்த வழக்குகளை அந்த நீதிமன்றத்தில் நடத்தாமல் இயல்பாகவே செயல்படுகின்ற Regular Court-ல் எடுத்தால் அது காலதாமதம் ஆகும்; விரைவிலே தீர்வு கிடைக்காது. எனவே சம்பந்தப்பட்ட கலவரங்களுக்குத் தீர்வு விரைவிலே கிடைக்க வேண்டும் என்பதற்காகத்தான் இந்தத் தனி நீதிமன்றம். இந்தத் தனி நீதிமன்றத்தில் விசாரிப்பதன் மூலமாகத்தான் வழக்குகளை விரைவில் தீர்வுக்குக் கொண்டு வரமுடியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 75, திரு. ந. கருப்பண்ண உடையார், மாண்புமிகு வனத் துறை அமைச்சர்.

**75—**

**பணி வரன்முறைப்படுத்துதல்**

***10639—திரு. ந. கருப்பண்ண உடையார்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு வனத் துறைச் சட்டத்தின்படி வனக் காப்பாளர், வனக் காவலர் மற்றும் மாலிக் நேர்முகத் தேர்வில் தேர்ச்சி பெற்று தஞ்சாவூர் மாவட்ட வன அலுவலகத்தில் பல ஆண்டு காலமாக பணிபுரிபவர்களைப் பணி வரன்முறைப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

8-7-1980-க்கு முன் வனத் துறையில் தினக்கூலி அடிப்படையில் தோட்டக் காவலர்களாகப் பணி செய்து வந்தவர்களில்

தகுதியுடையவர்களைத் தேர்வு செய்து தற்காலிகமாக வனக் காவலர் மற்றும் மாலிக் ஆகிய பதவிகளில் நியமனம் செய்யப்பட்டவர்களின் பணியினை வரன்முறைப்படுத்துவதற்கான செயற்குறிப்பு முதன்மைத் தலைமை வனப்பாதுகாவலரிடமிருந்து வரப்பெற்று அரசின் பரிசீலனையில் உள்ளது. இதில் தஞ்சாவூர் வனக் கோட்டத்தைச் சேர்ந்தவர்களும் அடங்குவர்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1987 ஆம் ஆண்டு முதல் வனத் துறையிலே காவலராகவும் மற்ற அலுவலர்களாகவும் பணியாற்றி வருகின்றவர்களுக்கு பணி வரன்முறை செய்யப்படாமல் இருந்து வருகிறது. சென்ற இரண்டு ஆண்டுகளாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலும் அந்தத் துறையைச் சேர்ந்த அதிகாரிகளிடத்திலும் சொல்லி இப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனையில் இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். எப்போது அந்தப் பரிசீலனை முடியும்? அவர்களுக்கு உரிய பணி வரன்முறை எப்போது செய்து கொடுக்கப்படும்? எவ்வளவு நபர்கள் வனத் துறையிலே வேலை பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்? எவ்வளவு நபர்களுக்கு பணி வரன்முறை மூலம் பதவி உயர்வு அளிக்கப்படும் என்பதை தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலை வாய்ப்புத் துறையில் 30-11-1987-ஆம் தேதி வெளியிடப்பட்ட அரசாணை (நிலை) எண் 312, சுற்றுப்புறம் மற்றும் வனத் துறையில் 7-3-1989 ஆம் தேதி வெளியிடப்பட்ட அரசு கடித எண் 361089-2 அடிப்படையில் வனத் துறையில் 1980-க்கு முன் பணியமர்த்தப்பட்டு, தோட்டக் காவலர்களாக தினக்கூலி அடிப்படையில் பணி செய்து வந்தவர்களில் தகுதி உடையவர்களை விதிகளுக்கு உட்பட்டு வனக் காவலர்கள் மற்றும் மாலிக் ஆகிய பதவிகளில் நியமனம் செய்துகொள்ளும்படி அனைத்து மாவட்ட வன அலுவலர்களுக்கும், கோட்ட வன அலுவலர்களுக்கும் அரசின் மூலம் அறிவுரைகள் வழங்கப்பட்டன. அதன்படி 1989 முதல் 1994 முடிய உள்ள காலத்தில் வனக் காவலர்களாக 538 நபர்களும், மாலிக் ஆக 52 நபர்களும் தற்காலிகமாகப் பணியமர்த்தப்பட்டு, மொத்தம் 590 நபர்களின் பணியினை வரன்முறைப்படுத்தக் கோரும் முதன்மைத் தலைமை வனப் பாதுகாவலரின் செயற்குறிப்பு அரசுக்கு வரப்பெற்று அரசின் பரிசீலனையில் உள்ளது. இன்னும் 15 தினங்களுக்குள் அவர்களுக்கு ஆணை வழங்கப்படும்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 76, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், மாண்புமிகு வனத் துறை அமைச்சர்.

**76—**

## கல் குவாரி ஏலம்

***25104—டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பள்ளிப்பட்டு வட்டம், கரிம்பேடு கிராமத்தில் வனத் துறைக்குச் சொந்தமான கல் குவாரியை ஏலம் விடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பள்ளிப்பட்டு வட்டம், கரிம்பேடு கிராமத்தில் வனத் துறைக்குச் சொந்தமான கல் குவாரியை ஏலம் விடும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியிலே இருக்கின்ற கரிம்பேடு கிராமத்தில் ஏறக்குறைய 120 குடும்பத்தினர் கல் குவாரியை நம்பி வாழ்கின்றார்கள். வனத் துறைக்குச் சொந்தமான இடத்திலே ஏறக்குறைய 20 ஆண்டுகளாக அந்தத் தொழிலைச் செய்து வருகின்றார்கள். வனத் துறை அதிகாரிகள் un-official-ஆக அதற்கு அனுமதி தந்துவிட்டு இப்போது கெடுபிடிகளைத் தந்து பல்வேறு முறைகேடுகளைச் செய்ய முயற்சிக்கிறார்கள். ஆகவே அந்த ஏழைக் குடும்பங்கள் பிழைப்பதற்கு வழி செய்யும் வகையில் முறைப்படி ஏலம் விடுவதற்கான செயற்குறிப்பினை அரசு அளிக்குமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் கோட்டம், திருவள்ளூர் சரகத்திலுள்ள கரிம்பேடு குவாரி எண் 1 முதல் 4 எண்கள் உள்பட மொத்தம் 33 கல் குவாரிகள் இறுதியாக 1-7-1981 முதல் 30-06-1983 முடிய குவாரி குத்தகைக்கு விடப்பட்டிருந்தது. பின்னர் கரிம்பேடு உள்ளிட்ட இதர 16

கல் குவாரிகளுக்கு மைய அரசின் இசைவாணை வழங்கப்படவில்லை. ஆகையால் மைய அரசின் இசைவாணையின்றி பள்ளிப்பட்டு வட்டம் கரிம்பேடு வன குவாரிகளைக் குத்தகைக்கு விட இயலவில்லை. மேலும் 1980 ஆம் ஆண்டைய வனப் பாதுகாப்புச் சட்டத்தின்படி வனப் பகுதிகளில் மைய அரசின் அனுமதி இல்லாமல் வனம் சாரா நிகழ்வுகளுக்கு அனுமதி அளிக்கக்கூடாது. அதனால் தனியார் கல் குவாரிகளுக்கு சமீபகாலமாக மத்திய அரசு இசைவு ஏதும் அளிப்பதில்லை.

முற்பகல் 10-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மீ.அ. வைதியலிங்கம்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாம்பரம் தொகுதி, பெரும்பாக்கம் வனத் துறைக்குச் சொந்தமான மலைக்கு மத்திய அரசு அனுமதி அளித்திருக்கிறது. அதையாவது ஏலம் விடுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு அனுமதி கொடுத்தால், விரைவில் ஏலம் விட ஏற்பாடு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ. வெங்கடாசலம்.

**திரு. அ. வெங்கடாசலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே பெரும்பாலும் ஊராட்சி ஒன்றியத்தின் மூலம் சமூக நலக் காடுகள் வளர்க்கப்பட்டு, அரசு அந்த சமூகநலக் காடுகளை—யூகலிப்டஸ்களை எல்லாம்—வெட்டி எடுத்ததற்குப் பிறகு, ஊராட்சி ஒன்றியத்திற்கும், ஊராட்சி மன்றங்களுக்கும் வரவேண்டிய, அரசு ஒதுக்கியிருக்கிற அந்தத் தொகை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மூலக் கேள்வி, கல் குவாரியைப் பற்றியது.

வினா எண் 77, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன், மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்.



**77—**

## பொது விற்பனை

***24553—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:**

மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செய்தித் துறை வெளியிடும் இதழான 'தமிழரசு' தற்போது கடைகளில் பொது விற்பனைக்குக் கொடுக்கப்படுவதில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) பொது விற்பனை மூலம் அனைவரும் அதை வாங்கிப் படிக்கும் வசதியை ஏற்படுத்தித் தர அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) பொதுமக்கள் 'தமிழரசு' பிரதிகள் வாங்குவதற்காக முகவர்கள் மூலமாகவும் மற்றும் ஹிக்கின்பாதம்ஸ் புத்தக அங்காடிகளிலும் பொது விற்பனைக்கு அனுப்பிவைக்கப்படுகிறது.

(ஆ) பொது விற்பனை மூலம், அனைவரும் அதை வாங்கிப் படிக்கும் வசதியை அரசு ஏற்படுத்தித் தந்துள்ளது.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசின் செய்தித் துறை மூலமாக 'தமிழரசு' பத்திரிகை மாதம் ஒன்றுக்கு எவ்வளவு பிரதிகள் அச்சிடப்படுகின்றன? அது யார் யாருக்கு வினியோகிக்கப்படுகிறது? 'தமிழரசு' பத்திரிகையின் மூலம், அரசுக்கு இலாபமா, நட்டமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு மாதமும், திங்கள் இருமுறை 'தமிழரசு', தமிழ் இதழ்கள் 34 ஆயிரம் பிரதிகளும், மாதம் ஒன்றுக்கு 2 ஆயிரம் ஆங்கிலப் பிரதிகளும் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகின்றன. இவற்றில், நூலகங்களுக்கு 1,777 பிரதிகளும், மற்றவை, முகவர்கள் மூலமாகவும், உள்ளாட்சி அமைப்புகள் மூலமாகவும் வினியோகிக்கப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதில் இலாபம் என்பதற்கு

[1999 நவம்பர் 24

இடமில்லை. அரசினுடைய திட்டங்கள் பொது மக்களைச் சென்றடைய வேண்டுமென்ற உணர்வோடு வெளியிடப்படுகிற இதழ் என்கிற காரணத்தினால், இலாபம் வருவதற்கான வாய்ப்பு இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 78, திரு. எஸ்.வி. கிருஷ்ணன், மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்.

**78—**

**கால்நடை மருந்தகத்திற்கு வசதிகள்**

***13050—திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:**

மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி தொகுதி, ஏர்வாடி கால்நடை மருந்தகத்திற்கு மின் வசதி, கழிவறை மற்றும் சிகிச்சைக் கூடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தங்களின் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.

(அ) ஆம்.

(ஆ) ஏர்வாடி கால்நடை மருந்தகத்திற்கு மின் வசதி செய்யவும், கழிவறை கட்டவும், திருநெல்வேலி மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட வருடாந்திர கட்டுமானச் செலவினத்திலிருந்து நிதி கொடுக்கப்பட்டு இருக்கிறது. அப்பணிகள் இந்நிதியாண்டில் மேற்கொள்ளப்படும். சிகிச்சைக் கூடம் கட்ட ரூ. 2 இலட்சம் தேவைப்படுவதால், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையினைத் தொடர்பு கொண்டு, நிதி பெற்று, பணிகள் முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுக்கு நன்றி. மேலும், அந்தப் பணிகள் எப்போது முடிவடையும் என்பதை அறிய விரும்புகிறேன்.



1999 நவம்பர் 24]

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு தொடங்கப்பட்டு முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 79, திருமதி ஏ.ஆர். வேடம்மாள், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்.

**79—**

**இலவசத் தொகுப்பு வீடுகள்**

***28445—திருமதி ஏ.ஆர். வேடம்மாள்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆதிதிராவிடர் நலத் துறையின் மூலம் ஆதிதிராவிட மக்களுக்கு இலவசத் தொகுப்பு வீடுகள் கட்டித் தர அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆதிதிராவிடர் நலத் துறையின் மூலம் ஆதிதிராவிட மக்களுக்குத் தொகுப்பு வீடுகள் கட்டித் தரும் திட்டம் தற்போது இல்லை. கட்டித் தர இயலாது.

**திருமதி ஏ.ஆர். வேடம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறையின் மூலமாக தொகுப்பு வீடுகள் கட்டும் திட்டத்திற்கு தற்சமயம், அதிக நிதி ஒதுக்கீடு செய்து, நமது முதலமைச்சர் அவர்கள் ஆட்சியில்தான் செம்மையாக அது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. ஆனால் தாழ்த்தப்பட்ட மக்களுக்குப் போதுமானதாக அந்தக் குடியிருப்புகள் இல்லை. எனவே, ஆதிதிராவிட நலத் துறையின் மூலமாக கொஞ்சம் நிதி ஒதுக்கீடு செய்து, கூடுதலாக அவற்றைக் கட்டித் தர அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது மத்திய அரசுத் திட்டம். மத்திய அரசும்,

மாநில அரசும் சேர்ந்து செய்கின்ற திட்டமாகும். மத்திய அரசு 80 சதவிகிதம் பணத்தை ஒதுக்கீடு செய்கிறது. மாநில அரசு 20 சதவிகிதம் பங்கேற்கிறது. ஆகவே, மத்திய அரசு, அதிகமாக பணம் ஒதுக்கினால், எதிர்காலத்தில் அதிகமான தொகுப்பு வீடுகள், ஆதிதிராவிட மக்களுக்குக் கட்டித் தருவதற்கு வாய்ப்பு ஏற்படும் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே 80:20 என்ற நிலைமாறி, 75:25 நிலைக்கு வந்து, அதற்குப் பிறகு அளித்த நிதியைக் குறைத்து, அதற்குப் பிறகு 41,000 சொச்சம் வீடுகள் கட்டுவது என்று முடிவெடுத்து, அந்த நிதி 31,200 வீடுகளுக்கு மட்டுமேதான் போதுமென்ற நிலை இந்த ஆண்டு ஏற்பட்டது. இதையெல்லாம் விளக்கி, 75 சதவிகிதம் மத்திய சர்க்காரும், 25 சதவிகிதம் மாநில சர்க்காரும் என்று முதலிலே அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால், இந்த ஆண்டு 41,000 சொச்ச வீடுகளைக் கட்டவேண்டுமென்று முதல்வர் அவர்கள் மானியக் கோரிக்கையில் அறிவித்தபடி நிதிநிலைமையினையொட்டி, நாம் எடுத்துக்கொள்ள வேண்டுமானால், ஏறத்தாழ 60 சதவிகிதம் நாமும், மத்திய சர்க்கார் 40 சதவிகிதமும் நிதி அளித்தால்தான் முடியும் என்ற அந்த நிலைக்கு நிதிநிலைமை வந்துவிட்டது. அந்த நிதி நெருக்கடியையும் ஏற்றுக்கொண்டு, முதல்வர் அவர்கள் அதற்கும் உத்தரவிட்டு, அந்தப் பணியைத் தொடங்கி நடத்துவதற்கு நாம், துறை மூலம் ஆணை பிறப்பித்திருக்கிறோம். எனவே இந்த ஆண்டு இனிமேல் உயர்த்துவது என்பதற்கு நிச்சயமாக சாத்தியக்கூறுகள் இல்லை.

முற்பகல் 10-25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிட மக்களுக்கும் அதுபோன்று பழங்குடியினருக்கும் வீடுகளைக் கட்டிக் கொடுத்தும் அது முழுமை பெறாத நிலையில் உள்ளது. பல்வேறு கிராமங்களில் இன்னும் ஆயிரக்கணக்கான வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அதிலும் குறிப்பாக இதற்கு முன்னால் கட்டிக் கொடுக்கப்பட்டு தற்போது பழுதடைந்துள்ள



வீடுகளைப் பழுது பார்க்க முடியாத சூழ்நிலை உள்ளது. பழங்குடியின மக்கள் மலைப் பிரதேசத்தில் இருக்கின்ற காரணத்தால் அங்கே இந்த வீடுகளைக் கட்டிக் கொடுக்காத நிலை தொடருகிறது. அந்த விதிமுறைகள் தளர்த்தப்பட்டால் மட்டும்தான், அங்கே வீடுகளை கட்டிக் கொடுக்க முடியும். அந்த வகையிலே பழுதடைந்துள்ள ஆதி திராவிட பழங்குடியின மக்களுடைய வீடுகளைப் பழுது பார்க்க அரசு நடவடிக்கையினை மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்களுக்குச் சொந்தம் என்று அந்த வீட்டை நாம் கட்டி, பட்டா உட்பட அவர்களிடத்திலே கொடுத்து, நீங்கள் இந்த வீட்டைப் பார்த்துக்கொள்ளுங்கள் என்று ஒப்படைக்கின்றோம். ஆனால் வீடே இல்லாமல் இலட்சக்கணக்கான பேர் தவித்துக் கொண்டிருக்கின்ற நிலையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும். அவர்கள் அந்த வீட்டைக் கண்காணிக்காத காரணத்தாலே, பழுது அவர்களாலேதான் ஏற்படுகிறது. இருந்தாலும், மத்திய சர்க்காருக்கு நாம் முதலிலே எழுதி, அவர்களும் ஓரளவுக்கு வாய்ப்பு தந்தாலும்கூட முழுமையாக அவற்றைப் பழுதுபார்க்கக்கூடிய அளவிற்கு நிலை இல்லை. அவற்றைச் சரியாகவும் பழுது பார்க்க முடியவில்லை. ஆகவே இந்த அரசு, தற்போது எடுத்திருக்கிற முடிவு என்னவெனில் 70 சதவிகிதத்திற்கு மேல் பாதிக்கப்பட்டு குடியிருக்க முடியாத சூழ்நிலை எங்கு இருக்கிறதோ—அவர்களுக்குப் புதியதாக வீடுகளைக் கட்டுவதைப் போலவே—அதை இடித்துவிட்டு புதியதாகக் கட்டிக்கொடுக்கலாம் என்ற முடிவுக்கு வந்து, அந்தப் பணி இந்த ஆண்டு தொடங்கப்பட்டிருக்கிறது. அதை நீடித்துச்செய்தாலே போதும் என்கின்ற நிலை, நிதியைப் பொறுத்தவரையில் இருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அதற்கு அளித்த உத்தரவின் அடிப்படையில், இந்த அரசாங்கத்திற்கு இன்றைய நிலையில் கணக்குப் பார்க்கிறபோது, நாம் 60 சதவிகிதமும், அவர்கள் 40 சதவிகிதமும் என்கின்ற நிலை இப்போது வந்திருக்கிறது. இதையும் தாண்டி, நிச்சயம் அந்தப் பணிகளைத் தொடங்க இயலாது என்பதைத் திட்டவட்டமாக நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ச. அழகிரி.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற நிதியாண்டில் 62,000 தொகுப்பு வீடுகள் கட்டப்பட்டன. இந்த நிதியாண்டில் 41,000 தொகுப்பு வீடுகள்தான் கட்டித் தரப்படும் என்று கூறியிருக்கின்றார்கள். அதிலும் பல்லாயிரம் வீடுகள் வாய்மொழி உத்தரவு மூலமாக பாதியிலேயே நிறுத்தப்பட்டு விட்டன. இவை

[1999 நவம்பர் 24

அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு வந்ததா? அப்படி நிறுத்தப்பட்டதற்குக் காரணம் என்ன? ஏன் மத்திய அரசிடமிருந்து நிறைய நிதிகளைப் போராடிப் பெற்றுத்தரவில்லை? அதற்கான காரணத்தையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பணி துரிதமாக நடத்தப்பட வேண்டும் என்பதற்காக, அந்த நிதியாண்டு முடிவடைவதற்குள்ளாகவே, அப்படிப்பட்ட நிலையில் இருக்கின்ற வீடுகளின் எண்ணிக்கையைத் தந்து, அதை நீங்கள் ஏற்றுக்கொள்ளுங்கள், அந்தப் பணியைத் தொடங்குங்கள் என்று சொன்னோம். அந்தப் பணியை பல மாவட்டங்களிலே தொடங்கினார்கள். அந்தப் பணி தொடங்கி முடிவடையும் தருணத்திற்கு இடையிலேயே அந்த உத்தரவு வந்தது. அதற்குப் பிறகு இதை நிறுத்தி வையுங்கள், அந்தப் பணியைச் செய்து பார்த்துக்கொண்டு, பிறகு இதை முடிக்கலாம் என்று ஆணை பிறப்பித்திருந்தோம். அதற்குப்பிறகு மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் தெரிவித்தபோது, இனிமேல் ஆரம்பித்ததை நிறுத்த வேண்டாம், நிதி வந்தாலும், வராவிட்டாலும், மன்றத்தில் அறிவித்த வாக்குறுதி நிறைவேற்றப்பட வேண்டும்; எனவே, அதற்கான நிதி ஒதுக்கீட்டை இந்த அரசாங்கம் செய்துதரும்; இந்தப் பணியைப் தொடங்கச் சொல்லுங்கள் என்று சொன்னார்கள். அந்த அடிப்படையிலே மீண்டும் அந்தப் பணி தொடங்கப்பட்டு சில இடங்களில் முடிவுற்றும் இருக்கிறது; சில இடங்களில் நடந்துகொண்டும் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி ஏ.ஆர். வேடம்மாள்.

**திருமதி ஏ.ஆர். வேடம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிட இன மக்களுக்கு அரசு இலவசமாக பட்டா வழங்குகிறது. ஒரே இடத்தில் 100, 200 பட்டாக்களை வழங்குகிறோம். ஆனால் உள்ளாட்சித் துறையின் மூலம் தரும் வீடுகளைப் பொறுத்தவரையில் 200 பட்டாக்கள் இருக்கிற இடத்திலே 10 வீடுகள் தந்தால் அது பிரச்சினைகள் வளருவதற்கு ஏதுவாக இருக்கிறது. எனவே, முன்பு TAHDCO மூலம் ஒரே இடத்தில் 200, 300 வீடுகள் கட்டித்தந்த திட்டத்தைப் பின்பற்றி, ஆதிதிராவிடர் நலத் துறை TAHDCO மூலம் அவ்வாறு மீண்டும் கட்டித் தர பரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.



V 2 11, 31 N 99
N99.80

1999 நவம்பர் 24]

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1989-90 ஆம் ஆண்டு முதல் அந்தத் திட்டம் ஊரக வளர்ச்சித் துறையின் மூலமாக சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றது. தற்போது TAHDCO மூலமாக அதைக் கட்டுவதற்குப் போதிய பணியாளர்கள் இல்லை. ஆகவே மத்திய அரசு கொடுக்கின்ற நிதி அதிகமாக இருக்கின்ற காரணத்தினால், மத்திய அரசு ஊரக வளர்ச்சித் துறையின் மூலமாகத்தான் கட்ட வேண்டுமென்ற விதியை விதித்திருக்கிறது என்பதைத் தங்களுடைய கவனத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 80, டாக்டர் மு. தேவராஜன், மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர்.

**80—**

**நலிவுற்ற தொழிலை ஊக்குவித்தல்**

***14272—டாக்டர் மு. தேவராஜன்:**

மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உலோகப் பாத்திரங்கள் தொழிலால், கிராமங்களில் நடக்கும் மண்பாண்டத் தொழில் நசிந்துள்ளதைக் கருதி அத்தொழிலை ஊக்குவிக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு, கதர்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மண்பாண்ட கைவினைஞர்கள் விளிம்புத் தொகை திட்டத்தின்கீழ் கடனுதவி பெற்று தொழில் புரிவதற்கு வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. அந்தத் திட்டங்களின்கீழ் இதுவரையில் திருவாரூர், புதுக்கோட்டை திருநெல்வேலி, ஈரோடு, திருவண்ணாமலை, காஞ்சிபுரம் ஆகிய மாவட்டங்களிலிருந்து தொழில் புரிகின்றவர்கள் கடனுதவி பெற்று [illegible]த்தின் மூலம் தொழில் புரிந்து வருகின்றனர்.

2, 21, 2016.

[1999 நவம்பர் 24

செவ்வாய்ப்பேட்டையில் மண்பாண்ட அலகில் உற்பத்தி செய்யப்படுகின்ற பூந்தொட்டிகள் மற்றும் பாத்திரங்கள் சென்னை மாநகராட்சிக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன. மண்பாண்டத். தொழில் கூட்டுறவுச் சங்கங்களினால் உற்பத்தி செய்யப்படும் பலவகையான பொம்மைகள், மண்பாண்ட வகைகள் முதலியவற்றை சிறப்பு கொலு விற்பனை நாட்களில் விற்பனை செய்திட அவர்களுக்கு இடவசதியும் தகுந்த விளம்பரமும் வாரியம் செய்து ஊக்குவித்து வருகிறது என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் மு. தேவராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுக்கு நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. சிறப்புக் கவன ஈர்ப்பு

### (அ) கன்னியாகுமரி மாவட்டம், அரசு இரப்பர் தோட்டக் கழகத் தொழிலாளர்களுக்கு போனஸ் வழங்குதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, கன்னியாகுமரி மாவட்டம், அரசு இரப்பர் தோட்டக் கழகத் தொழிலாளர்கள் போனஸ் தொடர்பாக....

*(டாக்டர் க. கிருஷ்ணசாமி, திரு. லா. சந்தானம், திரு. ஜே. ஹேமச்சந்திரன், திரு. பி.ஆர். சுந்தரம், திரு. கே. ஆர். இராமசாமி, திரு. முகம்மது கோதர் மைதீன், திரு .மு. அப்பாவு ஆகியோர் ஒரே சமயத்தில் எழுந்து நின்றனர்.)*



1999 நவம்பர் 24]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 6, 7, பேர் சேர்ந்து எழுந்து நிற்கிறீர்கள். நீங்கள் எல்லாம் சேர்ந்து பேசிக்கொள்ளுங்கள். எல்லாவற்றையும் நீங்களாகவே பேசி முடித்துக்கொள்ளுங்கள். (குறுக்கீடு) நான் இப்போது யாரையும் கூப்பிடவில்லை. நான் இப்போது ஒரு subject எடுத்தேன். அதற்குப் பிறகுதான் கூப்பிடுவேன். கன்னியாகுமரி மாவட்ட அரசு இரப்பர் கழகத் தொழிலாளர்கள் போனஸ் தொடர்பாக போராட்டம் நடத்தி வருவது குறித்து திருவாளர்கள் ஜே. ஹேமச்சந்திரன், டி. மணி, சோ. பாலகிருஷ்ணன், சி. ஞானசேகரன், சி. வேலாயுதன், டாக்டர் தே. குமாரதாஸ் ஆகியோர் சிறப்புக் கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். கட்சிக்கு ஒருவர் என்ற முறையில்...

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் உங்களைக் கூப்பிடவில்லை, நீங்கள் உட்காருங்கள். நீங்கள் ஒருபொருள் பற்றி என் அறையிலே கேட்டீர்கள். நான் அனுமதிக்க முடியாது என்று அப்போதே சொல்லிவிட்டேன். அதன் பிறகு நீங்கள் இங்கே பேசிக் கொண்டேயிருந்தால் எப்படி? நீங்கள் வேண்டுமானால் வெளிநடப்புச் செய்யுங்கள். இல்லாவிட்டால் நான் உங்களை வெளியேற்றுவேன்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்போது நான் உங்களை வெளியேற்றுவேன். நீங்கள் என் உத்தரவை மீறிப் பேசினால் நான் உங்களை வெளியேற்றுவேன். டாக்டர் தே. குமாரதாஸ் (குறுக்கீடு) டாக்டர் க. கிருஷ்ணசாமி சொல்வது அவைக் குறிப்பிலே ஏறாது. டாக்டர் தே. குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

**திரு. லா. சந்தானம்:** தலைவர் அவர்களே, மாறுபட்ட நிலை. இந்த...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** யார் சொன்னாலும் நான் கேட்கமாட்டேன். டாக்டர் தே. குமாரதாஸ், இப்போது பேசலாம்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குமரி மாவட்டத்தில் இரப்பர் தோட்டத் தொழிலாளர்கள் போனஸ் வழங்க வேண்டுமென்ற கோரிக்கையை வலியுறுத்தி......

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரேயொரு...

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[1999 நவம்பர் 24

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் டாக்டர் கிருஷ்ணசாமிக்கு அனுமதி தரவில்லை, நீங்கள் உட்காருங்கள். இல்லாவிட்டால் நான் உங்களை வெளியேற்றுவேன். டாக்டர் கிருஷ்ணசாமியை வெளியேற்ற வேண்டுமென்று உத்தரவிடுகிறேன். (குறுக்கீடு)

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** Point of Order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதில் Point of Order கிடையாது. நீங்கள் வெளியேறலாம்.

*(டாக்டர் க. கிருஷ்ணசாமி நின்றுகொண்டு ஏதோ பேசிக்கொண்டேயிருந்தார்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் கிருஷ்ணசாமி நீங்கள் வெளியேற வேண்டும். நீங்கள் கேட்டதற்கு நான் பதில் சொல்லியாகிவிட்டது. இனிமேல் அனுமதிக்க முடியாது. (குறுக்கீடு) கமிஷன் அறிக்கை பற்றி இப்போது பேசுவதற்கு அனுமதிக்க முடியாது. (குறுக்கீடு) நீங்கள் ஏதாவது செய்யுங்கள் (குறுக்கீடு) டாக்டர் கிருஷ்ணசாமி அவர்களை வெளியேற்றும்படி உத்தரவிடுகிறேன். டாக்டர் தே. குமாரதாஸ்.

*(டாக்டர் க. கிருஷ்ணசாமி கமிஷன் அறிக்கையை கிழித்துப் போட்டார். அவைக் காவலர்கள் டாக்டர் க. கிருஷ்ணசாமியை அவையை விட்டு வெளியேற்றினர்.)*

**திரு. பி. ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு.பி.ஆர். சுந்தரம் உட்கார வேண்டும். (குறுக்கீடு) நான் சொல்கிறேன், நீங்கள் உட்காருங்கள். நான் டாக்டர் குமாரதாசைப் பேசக் கூப்பிட்டுவிட்டேன். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காரவில்லையென்றால் டக்டர் கிருஷ்ணசாமிக்கு ஏற்பட்ட கதிதான் உங்களுக்கும் ஏற்படும். நீங்கள் உட்கார வேண்டுமென்று சொல்கிறேன். (குறுக்கீடு) நீங்கள் கண்டிப்பாக உட்கார வேண்டுமென்று சொல்கிறேன்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** கதி, கிதி என்று சொல்லக் கூடாது. அவர் பேசி முடித்த பிறகு எனக்கு அனுமதி கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதற்கு உத்தரவாதமெல்லாம் கொடுக்க முடியாது. டாக்டர் தே. குமாரதாஸ், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) நீங்கள், அவையை நடத்துவதற்கு எனக்கு ஒன்றும் வழி சொல்லித் தர வேண்டியதில்லை. நீங்கள் உட்காருங்கள்.



1999 நவம்பர் 24]

***திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** இந்த விஷயத்திலே முதலிலே Notice எழுதிக் கொடுத்தது நான். According to Rules, I should be called first.

**Hon. Speaker:** No, No. Don't tell me what the rule is. I know what the rule is. You please sit down.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் இரப்பர் தோட்டத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு, மறியலில் ஈடுபட்டிருக்கிற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அதை நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவதற்குக் காரணம், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் எல்லாத் தொழிற் சங்கங்களுக்கும்—ரூபாய் பல கோடி நஷ்டத்திலே இயங்கிக் கொண்டிருக்கிற போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களுக்கும் அதேபோல மின்சார வாரியத் தொழிலாளர்களுக்கும், பல இலட்சம் தொழிலாளர்கள் பணியாற்றிவருகின்ற கழகங்களுக்கெல்லாம் தீபாவளியை முன்னிட்டு போனஸ் வழங்கினார்கள். ஆனால் குமரி மாவட்டத்தைப் பொறுத்தவரைக்கும் சுமார் 2,500 தொழிலாளர்களே பணியாற்றி வருகிற இரப்பர் தோட்டத் தொழிலாளர்களுக்கு போனஸ் தொகை 8.33 சதவிகிதம் என்கிற அளவில்தான் வழங்க முடியும் என்று சொல்லி, அவர்களுக்கு வழங்க வேண்டிய போனஸ் இன்னும் வழங்கப்படவில்லை. கேட்டால் நஷ்டத்தில் இயங்கிக்கொண்டிருக்கிறது என்று சொல்வார்கள். மற்ற பல துறைகள் பெருத்த நஷ்டத்தில் இயங்கிக்கொண்டிருக்கும்போது, இதில் நஷ்டம் வெகு குறைவுதான்; 2500 பேர்தான் இதில் பணியாற்றுகிறார்கள். எனவே மாண்புமிகு முதல்வர் அவர்கள் கருணை உள்ளத்தோடு மற்றவர்களுக்கு வழங்கியது போல அவர்களுக்கும் 20 சதவீதம் போனஸ் வழங்க வேண்டும். அந்த 2500 தொழிலாளர்களும் தொழிலை நம்பி வாழ்ந்து கொண்டிருக்கிறவர்கள். எனவே தொழிலாளர்களுக்கு தமிழக அரசின் மூலம் துரோகம் வந்துவிடக்கூடாது என்கிற உணர்வோடும், தமிழகத்திலே ஒரே துறையிலே பணியாற்றுகிறவர்களுக்கு, ஒரு கண்ணிலே வெண்ணெயும், இன்னொரு கண்ணிலே சுண்ணாம்பும் வைக்கிற ஒரு சூழ்நிலை ஏற்பட்டு விடக் கூடாது என்கிற வேண்டுகோளையும் வைத்து, மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதிலே தனிக் கவனம் செலுத்தி அவர்களுக்கு 20 சதவீதம் போனஸ் வழங்கவேண்டுமென்ற வேண்டுகோளையும் வைத்து, வழங்குவார்களா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

[1999 நவம்பர் 24

*முற்பகல் 10-35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

***திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை சம்பந்தமாக 17-11-1999 அன்றே நான் பேரவைத் தலைவர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவந்து, அறிவிப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. இதிலே இருக்கிற பிரதானமான பிரச்சினையைக் கூற விரும்புகிறேன். இது ஓர் அரசு நிறுவனம். கன்னியாகுமரி மாவட்டம் வேலைவாய்ப்பிலே பின்தங்கிய மாவட்டம் என்ற முறையில் அங்கிருக்கின்ற மக்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்துவதற்காக 1960 ஆம் வருஷத்திலே உருவாக்கப்பட்டு, இன்று ஏறத்தாழ 3000 பேர் இந்த ஸ்தாபனம் வழியாக வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். இன்று ரப்பரினுடைய விலை வீழ்ச்சியின் காரணமாக ஏற்பட்ட நிலையினாலேயும் அங்கே பல ஏக்கர் நிலத்தில் இருக்கிற மரங்களை வெட்டி விற்கமுடியாததன் காரணமாகவும் அந்தக் கழகத்திற்கு இப்போது நிதி நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. அங்கிருக்கிற மரங்களை வெட்டி விற்றாலே ரூ. 5 கோடிக்கு அதிகமான பணம் அந்தக் கழகத்திற்குக் கிடைக்கிற வாய்ப்பு இருக்கிறது. ஆனால் நிதிநிலை மோசம் என்ற காரணத்தைச் சொல்லி அந்தத் தொழிலாளர்களுக்குக் கிடைக்க வேண்டிய போனஸ் மறுக்கப்படுகிறது. போனஸ் என்பதே ஒத்திவைக்கப்பட்ட ஊதியம்தான். அந்த முறையில் அவர்களுக்கு போனஸ் வழங்குவதற்கு எல்லா வகையிலும் நியாயம் இருக்கிறது. மாண்புமிகு முதல்வர் அவர்களே சென்று சட்டப் பேரவைக் கூட்டத்திலேயே தொழிலாளர்கள் நல்ல முறையில் வேலை செய்கிறார்கள், உற்பத்தியைப் பெருக்குகிறார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்தக் கழகத்தினுடைய 16 ஆண்டுகள் வரலாற்றை எடுத்துப்பார்த்தால், 10 ஆண்டுகள் அந்த ஸ்தாபனம் லாபத்தைத்தான் ஈட்டியிருக்கிறது. தொழிலாளர்கள் இன்றும் உற்பத்தியைப் பெருக்கிக் கொண்டிருக்கிறார்கள். அந்தக் கழகத்திற்கு நஷ்டம் என்ற காரணத்தைச் சொல்லி அவர்களுக்கு 20 சதவிகிதம் போனஸ் வழங்க மறுத்து இருப்பது நியாயமல்ல என்பதை நான் பணிவன்புடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். சென்ற வருடத்தில் 20 சதவிகிதம் அவர்களுக்கு வழங்கப்பட்டது. நஷ்டம் என்று சொல்வதற்கும் தொழிலாளிகளுக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை. இந்த ஸ்தாபனத்தைப் பொறுத்தவரையில் பல கோளாறுகள் அங்கே இருக்கின்றன என்பதை நான் முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கே முன்பு கொண்டு வந்திருக்கின்றேன். இது சம்பந்தமாக தகுந்த முறையில் அரசு நடவடிக்கை எடுத்து, இந்தக் கழகத்தை



1999 நவம்பர் 24] [திரு. ஜே. ஹேமச்சந்திரன்]

லாபகரமாக நடத்த வேண்டுமென்று சென்ற நவம்பர் 1, 2 தேதிகளில் மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சரும், வனத் துறை அமைச்சரும், அதேமாதிரி சுற்றுலாத் துறை அமைச்சரும் கலந்துகொண்ட அந்தக் கூட்டங்களில்கூட தொழிற்சங்கங்களின் மூலம் கருத்துக்கள் எடுத்து வைக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே இந்தக் கழகத்தைப் பொறுத்தளவிலே இதனை லாபகரமாக நடத்தி, கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கிற மக்களின் வேலைவாய்ப்பைப் பாதுகாத்துக்கொள்கிற ஒரு பிரச்சினையோடு இணைந்து இந்த போனஸ் பிரச்சினை இருக்கிறது என்பதை நான் பணிவன்புடன் தெரிவித்துக்கொண்டு, இந்தக் கழகத்திலே இருக்கிற தொழிலாளிகள் என்ற முறையில், போக்குவரத்துக் கழகங்களிலேயும், அதேபோன்று மின்சார வாரியத்திலேயும் இருக்கிற தொழிலாளிகளுக்கு நஷ்டம் என்று இருந்தாலும் அரசால் 20 சதவிகிதம் போனஸ் கொடுக்கப்பட்டிருப்பதுபோல, இவர்களுக்கும் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தொழிலாளர்கள் மட்டத்தில் எந்தவிதமான குற்றமும் இல்லாததோடு, அவர்கள் எந்த முறையிலும் இந்தத் தொழிலுக்கு எந்தவிதமான பாதிப்புகளையும் ஏற்படுத்தவில்லை. அங்கேயிருக்கின்ற அந்தக் கழகத்தினுடைய தலைவர் அந்தத் தொழிலாளர்களிடத்தில் நல்லமுறையில் வேலை செய்ய வேண்டுமென்று சொன்ன காரணத்தால் அவர்கள் உற்பத்தியைப் பெருக்கியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** அப்படி உற்பத்தியைப் பெருக்கியிருக்கிற அந்தத் தொழிலாளர்களுக்கு நல்லமுறையிலே போனஸ் கொடுத்து, அந்தப் போராட்டத்தை முடித்து வைக்க வேண்டும். காரணம் என்னவென்றால் நவம்பர், டிசம்பர் மாதங்களில்தான் அந்தக் கழகத்திற்கு வருவாய் வரவேண்டிய காலம். இந்தக் காலத்திலே வேலைநிறுத்தம் நடக்கிறது என்றால் அந்தக் கழகத்திற்கு வரவேண்டிய, மாமூலாகக் கிடைக்க வேண்டிய வருமானம் பாதிக்கப்படக்கூடிய ஓர் ஆபத்து ஏற்பட்டிருக்கிறது என்பதை அரசு பரிசீலிக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். போனஸை வழங்குவதற்கு முதலமைச்சர் அவர்கள் கனிவு காட்டினால்தான் கொடுக்க முடியும் என்ற ஒருநிலை இன்று இருக்கிறது. நான் பணிவுடன் தெரிவித்துக்கொள்ள விரும்புவது என்னவென்றால் அந்த மரங்களை விற்பதற்கு அனுமதித்தால் அவர்களுக்குப் பணம் கிடைக்கும். அதனால் கடனாகவாவது அரசு கொஞ்சம் நிதியுதவி செய்து தொழிலாளிகளுக்கு போனஸ் வழங்கி போராட்டத்தை முடிப்பதற்கு முதலமைச்சர் அவர்கள்

முன்வர வேண்டும் என்று பணிவன்புடன் கேட்டு வாய்ப்பு அளித்ததற்கு நன்றி தெரிவித்து அமர்கிறேன்.

முற்பகல் 10-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1960 ஆம் ஆண்டு இலங்கை அகதிகள் மற்றும் மலைவாழ் மக்களுக்கு வேலை கொடுக்கக்கூடிய வகையில் பெருந்தலைவர் காமராஜர் அவர்களுடைய காலத்தில் முதன்முதலாக அரசு இரப்பர் கழகம் கிரிப்பாறையில் அமைக்கப்பட்டது. அரசு இரப்பர் கழகமானது வனத் துறையிடமிருந்த காலம்வரை அனைத்தும் சிறப்பாக நடந்துகொண்டு இருந்தது. வனத் துறையிடமிருந்து விடுபட்டதற்குப் பிறகு படிப்படியாக அதிகாரிகள் அதிகமாக வேலைக்கு அமர்த்தப்பட்ட காரணத்தால் நஷ்டம் ஏற்படுகிறது என்ற ஒரு எண்ணம் தொழிலாளர்கள் மத்தியில் இருக்கிறது. அதற்கு என்ன செய்யலாம் என்பதை அரசு பரிசீலிக்க வேண்டும்.

சாதாரணமாக மின்சார வாரியம் மற்றும் போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களுக்கும் போனஸ் வழங்கும்போது இரப்பர் கழகத் தொழிலாளர்களுக்கும் போனஸ் வழங்குவது வழக்கம். இந்த ஆண்டுகூட போக்குவரத்துக் கழகமும் மின்சார வாரியமும் 20% போனஸ் வழங்குகிறது. அதேசமயத்தில் தோட்டத் தொழிலாளர்களுக்கு 8.33%தான் போனஸ் வழங்கப்படும் என்று கூறிய காரணத்தால் கிட்டத்தட்ட 1 மாத காலமாக அவர்கள் போராடிக்கொண்டு இருக்கிறார்கள். அதிகபட்சமாக உற்பத்தி 2,600 டன்கள்தான் இதுவரைக்கும் இருந்தது. ஆனால் கடந்த ஆண்டு 3,000 டன்வரை உற்பத்தி செய்திருக்கிறார்கள். எனவே உற்பத்தி கூடியிருக்கிறதே தவிர குறையவில்லை. இரப்பர் விலை குறைவாக இருந்தாலுங்கூட தனியார் இரப்பர் தோட்டங்கள் சரியான முறையில் தொழிலாளர்களுக்கு போனஸ் எல்லாம் கொடுக்க முடிகிறது. எனவே அரசு இதிலே உள்ள பிரச்சினைகளைக் கண்டறிந்து அந்தப் பிரச்சினைகளைப் போக்கி இந்தத் தொழிலாளர்களுக்கும்—சுமார் 2,500 தொழிலாளர்கள் இருக்கின்றார்கள்—20% போனஸ் வழங்க ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு இரப்பர் கழகம் 10-8-1984 அன்று



கம்பெனிகள் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டு 1-10-1984 முதல் இயங்கி வருகிறது. அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் 4 கோடி ரூபாய். ஆனால் அரசு செலுத்திய மூலதனம் 2 கோடி ரூபாய். இக்கழகத்தால் 4,279.88 ஹெக்டேர் நிலம் வனத் துறையிடமிருந்து குத்தகைக்கு எடுக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது. அரசு இரப்பர் கழகத்தில 2,143 தொழிலாளர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். அதில் 478 தொழிலாளர்கள் இலங்கை அகதிகள். அரசு இரப்பர் கழகம் தொழிலாளர்களுக்குக் கீழ்க்கண்ட நலத் திட்டங்களை வழங்கி வருகிறது. இலவசக் கல்வி, இலவச மருத்துவம், விடுப்புச் சலுகைகள், குழந்தைகள் காப்பகம், இலவசக் குடியிருப்பு மனைகள், தொழிலாளர் சட்டத்தில் உள்ள இதர சலுகைகள். இக்கழகத்தின் இரப்பர் உற்பத்தி 1996-97-ல் 2,591 டன்களிலிருந்து 1997-98-ல் 2,692 டன்கள் ஆகவும் 1998-99-ல் 2,985 ஏறத்தாழ 3,000 டன்களாகவும் கூடி உள்ளது. இயற்கையான இரப்பர் அதிக அளவில் இறக்குமதி செய்யப்பட்டு இரப்பரை மூலப் பொருளாகக் கொண்ட தொழிற்சாலைகளுக்கு குறைந்த விலையில் கிடைப்பதன் காரணத்தாலும் மற்றும் செயற்கையான பாலியூரித்தின் பொருள்கள் அதிக அளவில் இப்போது பயன்படுத்தப்படுவதாலும் இங்கு உற்பத்தியாகும் இயற்கையான இரப்பரின் தேவை குறைந்து வருகிறது. இதன் காரணத்தால் விலையில் பெரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. ஆண்டின் சராசரி இரப்பர் விலை பின்வருமாறு:

1995-96-ல் 1 கிலோ ரூ. 62.70 காசு, 1996-97-ல் 1 கிலோ ரூ. 55; 1997-98-ல் 1 கிலோ ரூ. 42.52 காசு; 1998-99-ல் 1 கிலோ ரூ. 33.87 காசு; இப்போது 1999-2000-ல் இரப்பர் ஒரு கிலோ ரூ. 29.37 காசு. ஆக, விலை பாதியாய் குறைந்துவிட்டது. இதன் காரணமாக அரசு இரப்பர் கழகம் 1997-98 ஆம் ஆண்டு முதல் நட்டத்தில் இயங்கி வருகிறது. 1998-99 ஆம் ஆண்டு கணக்குப்படி 5.64 கோடி நட்டத்தில் இயங்கி வருகிறது. அனுமதிக்கப்பட்ட மூலதனத்தைவிட நட்டம் அதிகமாக உள்ளது.

முற்பகல் 10-45

அரசு இரப்பர் கழகத் தொழிலாளர்கள் 3-9-1999 முதல் ஊதிய உயர்வு மற்றும் அகவிலைப்படி உயர்வு போன்ற கோரிக்கைகளை வலியுறுத்தி போராட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது என் முன்னிலையில் மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் மற்றும் தொழிலாளர்

[திரு. பொங்கலூர் நா. பழனிசாமி] [1999 நவம்பர் 24

தலைவர்கள், ஆணையாளர் ஆகியோர் முன்னிலையில் சமரசப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன. இந்தப் பேச்சுவார்த்தைகளில் அரசு இரப்பர் கழக நிர்வாகம் இடைக்கால ஊதிய உயர்வாக ஒரு நாளைக்கு 5 ரூபாய் வீதம் அன்றைய தேதியிலிருந்து வழங்குவதாக ஒப்புக்கொண்டு போராட்டம் அன்றைக்கு விலக்கிக்கொள்ளப்பட்டது. 1997-98-ல் இந்தக் கழகம் நட்டத்தில் இயங்கி வந்த போதிலும் இக்கழகத் தொழிலாளர்களுக்கு 8.33 சதவீத போனசும் 11.67 சதவீத கருணைத் தொகையும் வழங்க அரசு ஆணையிட்டது. இரப்பர் பொருள்கள் இருப்பு இருந்ததால் அதனை விற்று அரசு அறிவித்த போனஸ் மற்றும் கருணைத் தொகை அன்று வழங்கப்பட்டது. அரசாணை எண் 235-ன்படி அரசு இரப்பர் கழகம் நட்டத்திலே இயங்கி வருவதாலும் மற்றும் இரப்பர் விலை வீழ்ச்சி காரணமாகக் கடுமையான நிதி நெருக்கடியில் உள்ளதாலும் குறைந்தபட்ச மிகை ஊதியம் 8.33 விழுக்காடு வழங்க நிதித் துறையின் இசைவுடன் ஆணை வெளியிடப்பட்டது.

அரசு இரப்பர். கழகத் தொழிலாளர்கள் இந்த ஆண்டு தமிழ்நாடு தேயிலைக் கழகம் மற்றும் தமிழ்நாடு வனத் தோட்டக் கழகங்களில் வழங்கியதுபோன்று 20 விழுக்காடு மிகை ஊதியம் வழங்கக் கோரி 4-11-1999 முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு வருகின்றனர். 22-11-1999 ஆம் தேதிய நிலவரப்படி மொத்தத் தொழிலாளர்கள் 2143 பேரில் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் 1880 பேர். இந்த வேலைநிறுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர தொழிலாளர் நலத் துறை அலுவலர்கள் முன்னிலையில் நடத்திய பேச்சுவார்த்தைகள் தோல்வியடைந்தன. அரசு இரப்பர் கழகத்தின் நட்டத்தைக் குறைக்க பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, பணியாளர்களைக் குறைப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. கடந்த வருடம் 47 பணியாளர்களைக் குறைப்பதற்கு நிர்வாகக் குழு ஒப்புதல் பெறப்பட்டது. இந்த ஆண்டு 57 பணியாளர்களைக் குறைப்பதற்கு ஆணைகள் இடப்பட்டிருக்கின்றன. 17 பணியாளர்களைத் தவிர பிற பணியாளர்கள் ஏற்கெனவே விடுவிக்கப்பட்டனர். அரசு இரப்பர் கழகத் தலைவரின் பயணச் செலவுகள் கூட இரப்பர் கழகக் கணக்கில் வழங்கப்படவில்லை. அதேபோல இதர செலவுகளும் குறைக்கப்பட்டிருக்கின்றன. இதுவரை தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம் ரூபாய் 2.75 கோடி கடனாக அரசு இரப்பர் கழகத்திற்கு வழங்கியுள்ளது. 10-10-1999 ஆம் தேதி அன்று கட்டாயமாக வழங்க வேண்டிய தொழிலாளர் வைப்பு நிதி (E.P.F.) வழங்க இயலவில்லை. தொழிலாளர்கள் தொடர்ந்து போராடி வருவதால் இரப்பர் உற்பத்தியும் மற்றும் இருப்பும் குறைந்துள்ளன. தற்போது இரப்பர் இருப்பு 54 டன்களே உள்ளன. இதன்மூலம்



1999 நவம்பர் 24] [திரு. பொங்கலூர் நா. பழனிசாமி]

கிடைக்கப்பெறும் வருவாய் 20 இலட்சம் ரூபாய் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தத் தொகையைக் கொண்டு நவம்பர் மாத தொழிலாளர்களின் ஊதியமோ, பணியாளர்களுடைய சம்பளமோ கொடுக்கும் நிலையில் இரப்பர் கழகம் இல்லை. எனவே அரசு இரப்பர் கழகத் தொழிலாளர்களின் நவம்பர் மாத ஊதியம், சம்பளம் மற்றும் தொழிலாளர்களின் கட்டாய வைப்பு நிதி போன்றவற்றை வழங்குவதற்கு இந்தக் கழகம் ரூபாய் 65 இலட்சம் அரசிடம் கோரியுள்ளது. இது அரசின் பரிசீலனையில் உள்ளது. ஆகவே அரசு இரப்பர் கழகத்தின் நிதிநிலை நெருக்கடியைக் கருத்தில் கொண்டு தொழிலாளர்கள் மீண்டும் வேலைக்குத் திரும்ப வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சட்டப்படி 8.33 சதவிகித போனஸ்தான் வழங்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

(திரு. பி.ஆர். சுந்தரம், திரு. மு. அப்பாவு மற்றும் திரு. கே.ஆர். இராமசாமி ஆகியோர் எழுந்து நின்றனர்)

***மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கூடுதல் விவரத்தைச் சொல்ல விரும்புகிறேன். 8.33 சதவிகிதம் என்பதை Cash loss என்பதைப் பொறுத்தமட்டில் எல்லாத் தொழிற் சங்கங்களும் ஒப்புக்கொண்டிருக்கின்றன. இது இரப்பர் கழகத்திற்கும் பொருந்தும்.

(திரு. பி.ஆர். சுந்தரம், திரு. மு. அப்பாவு மற்றும் திரு. கே.ஆர். இராமசாமி ஆகியோர் மீண்டும் எழுந்து நின்றனர்)

## 3. தகவல் கோரல்

### (அ) தஞ்சை மாவட்டம், வல்லம், மகளிர் தொழில்நுட்பப் பயிலகம் மற்றும் பொறியியல் கல்லூரிக்கு அளித்த நிலத்தின் ஒரு பகுதியை அரசு திரும்பப் பெற நடவடிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒரு சிறப்புக் கவன ஈர்ப்பு அறிவிப்பை தங்களிடம் கொடுத்திருந்தேன். அதாவது, தந்தை பெரியார் அறக்கட்டளையின் சார்பாக வல்லத்திலே நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற மகளிர் பாலிடெக்னிக் மற்றும் பொறியியல் கல்லூரிக்குக் கொடுக்கப்பட்டுள்ள இடத்தை அரசு மீண்டும் கையகப்படுத்துவதற்கு முயற்சிகள்

நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அங்கே ஆளும் கட்சியிலே இருக்கின்ற....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சொல்ல வேண்டியதைச் சொல்லிவிட்டீர்கள், உட்காருங்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, அவர்கள் நிலத்தை அரசு கையகப்படுத்த முயற்சிக்கவில்லை. அவர்கள், அரசு நிலத்தில் ஒரு பகுதியை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறார்கள். ஏற்கெனவே முதலமைச்சராக எம்.ஜி.ஆர். இருந்தபோது ஒரு பகுதி நிலம் அவர்களுக்குத் தரப்பட்டிருக்கிறது. மறுபடியும் அவர்கள் தாங்களாகவே ஒரு பகுதி நிலத்தை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறார்கள். ஏற்கெனவே பல கட்சித் தலைவர்களிடத்திலேகூட இதுபற்றி நான் குறிப்பிட்டிருக்கிறேன். அதிலே ஒரு குறிப்பிட்ட அளவு நிலத்தை வைத்துக்கொண்டு அரசுக்கு அங்கே ஒரு பெண்கள் உயர்நிலைப்பள்ளி கட்டுவதற்காகத் தேவைப்படுகிற நிலத்தை—அங்குள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் தங்களுடைய தொகுதி மேம்பாட்டுத் தொகையைக் கொண்டு, அவர்களுக்கு அரசு வழங்குகின்ற தொகையைக் கொண்டு பெண்கள் உயர்நிலைப் பள்ளியைக் கட்டுவதற்காக ஒரு இடம் தேவையென்று அவர்கள் கேட்டிருக்கின்றார்கள். அதற்கு, நீங்கள் வைத்திருக்கிற இடத்திலே பெருமளவு நீங்கள் வைத்துக்கொண்டு, மீதியைக் கொடுங்கள் என்று கடிதமே அவர்களுக்கு எழுதப்பட்டிருக்கிறது. அரசு அக்கிரமமாக அந்த நிலத்திலே தலையிடுவதாகக் கூறுவது தவறு.

*முற்பகல் 10-50*

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,—

**திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,—

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. விசுவநாதன், உங்களுக்கு அனுமதி கொடுக்கவில்லை என்று நான் சொல்லிவிட்டேன். நீங்கள் உட்காருங்கள். திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு இடத்தில் பெரியாருடைய பெயரில் பொறியியல் கல்லூரி வைத்திருக்கிறார்கள் என்பதும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்வதும் அத்தனையும் உண்மை. அதற்கு மாறுபட்ட கருத்து



இல்லை. இருந்தாலும், ஒரு நல்ல பொறியியல் கல்லூரியாக அது செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அத்தோடு மட்டுமல்ல; பெரியாருடைய பெயரிலே அமைந்துள்ள அந்தக் கல்லூரிக்கு நீங்கள் பெரிய மனது வைத்து, அந்த இடத்தைத் தர வேண்டும். ஏனென்று சொன்னால் தந்தை பெரியாருடைய கொள்கைகளை முற்றிலுமாக நூற்றுக்கு நூறு ஏற்றுக்கொண்டு இருக்கிறவர்கள் நீங்கள். அவர்கள் lease-ல் தான் அந்த நிலத்தை வைத்திருக்கிறார்கள். அங்கே ஆக்கிரமிப்பு இல்லை. அவர்கள் அதற்கான கிஸ்தி எல்லாம் செலுத்தி B. Memo வைத்திருப்பதாகச் சொல்கிறார்கள். இப்போது அன்னிய நாட்டிலேயிருந்து வந்து, இங்கே பல்வேறு தொழிற்சாலைகளைத் தொடங்கியிருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் இலவசமாக மின்சாரம் கொடுக்கிறோம்; இடத்தை அதிகமாகக் கொடுக்கிறோம்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது சுயநிதித் திட்டத்திலே நடந்து கொண்டிருக்கிறது. அவர்கள் கட்சிக்காரர்களிடமே பணம் வாங்கிக்கொண்டுதான் Admission கொடுக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதை ஞாபகத்திலே வைத்துக்கொள்ளுங்கள்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய திராவிடர் கழகத்தினுடைய செயலாளர் திரு. வீரமணி அவர்கள் காலை என்னிடம் தொலைபேசியில் பேசினார். இந்த இடம் குறித்து உயர்நீதிமன்றத்திலே ஒரு வழக்கு இருக்கிறது; stay கூட வாங்கியிருக்கிறோம்; அதையும் மீறி ஆக்கிரமிப்பு பண்ணப் பார்க்கிறார்கள்: இதை நீங்கள் சட்டமன்றத்திலே எழுப்ப வேண்டும் என்று சொன்னார்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** யார் ஆக்கிரமிப்பு பண்ணப் பார்க்கிறார்கள், அதைச் சொல்லுங்கள்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** வீரமணி அவர்கள் சொன்னதை நான் சொல்கிறேன். யார் ஆக்கிரமிப்பு பண்ணப் பார்க்கிறார்கள் என்று எனக்குத் தெரியாது. சிலர் ஆக்கிரமிப்பு பண்ண முயற்சி செய்கிறார்கள் என்று அவர் சொன்னார். அதைத்தான் இந்த அவையிலே சொல்கிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எப்போதும் இப்படித்தான்; முழுக்க தெரிந்துகொண்டு பேசினால் நன்றாக இருக்கும். வீரமணி சொன்னார் என்பதற்காகப் பேசிப் புண்ணியமில்லை. அரசு ஒன்றும் ஆக்கிரமிப்பு

செய்யவில்லை. அரசு சட்டப்படிதான் நடவடிக்கை எடுக்கிறது. யாரோ அந்தப் பகுதியிலே உள்ளவர்கள் இவர்கள் ஆக்கிரமிப்பு செய்ததை வேறு சிலர் திரும்பப் பெறுவதற்காக வருகிறார்கள் அல்லது அவர்கள் அதன் மேல் இன்னொரு ஆக்கிரமிப்பு செய்ய வருகிறார்கள், அதிலே அரசு நடவடிக்கை எடுத்து யாரும் ஆக்கிரமிப்பு செய்யாமல் பார்த்துக்கொள்கிறது. நான் கூறுவதெல்லாம் 30-6-1998 அன்று பல மாதங்களுக்கு முன்பே வீரமணி அவர்களுக்கு அரசின் சார்பில் ஒரு கடிதம் சென்றிருக்கிறது. அந்தக் கடிதத்திலே, கடைசியாக உள்ளதை மாத்திரம் குறிப்பிடுகிறேன், முதலிலே உள்ளதை எல்லாம் சொன்னால் திடீரென்று அவையினுடைய அலுவல்கள் ஒத்திவைக்கப்பட்டு வேறு பிரச்சினைக்கு நான் சென்றுவிட்டதாக ஆகிவிடும். ஆகவே கடைசியாக நாம் அதிலே குறிப்பிட்டிருப்பது, "பொது நலன் கருதி நியாயமானதாக உள்ளதால் பெண்கள் உயர்நிலைப் பள்ளிக்குக் கட்டடம் கட்ட நிலம் அளிக்க வேண்டியதாகவுள்ளது. மேற்படி வல்லம் வடக்கு சேத்தி கிராமம் புல எண் 177/2 என்ற எண்ணில் அவர்கள் நிலத்திற்கு வழங்கப்பட்ட 11 ஏக்கர் நிலம் போக மீதி 7.85 ஏக்கர் நிலம் உள்ளது. சுமார் 56 சென்ட் பகுதியில் பெண்கள் தொழில் பயிலகத்திற்கான கட்டடம் கட்டி அதை ஆக்கிரமித்து வருகிறீர்கள். அதற்கு அருகிலுள்ள கௌதம தீர்த்தம் என்ற குளம். அது நீர் வற்றாத குளமாக இருப்பதாலும் அதைக் கோவிலுக்கு வரும் பக்தர்கள் உபயோகித்து வருவதாலும் அந்தக் குளத்தை நீக்கி மீதமுள்ள 5.55 ஏக்கர் பகுதியை அரசு பெண்கள் உயர்நிலைப்பள்ளி அமைக்க அளிக்கலாம் எனவும், அதேநேரத்தில் பெண்கள் தொழில் பயிலகம் அமைந்துள்ள நிலத்தையும் அதற்கு அருகிலேயுள்ள நிலத்தையும் மொத்தம் 56 சென்ட் நிலத்தை தங்கள் நிறுவனத்திற்கு அரசு நிர்ணயம் செய்யும் நியாயமான விலைக்கோ அல்லது நீண்டகால குத்தகைக்கோ அளிக்கலாம் என்றும் அரசு உத்தேசித்துள்ளது. தஞ்சாவூர் மாவட்டத்தில் ஆண்டுதோறும் விளையும் நெல் விவசாயிகளுடைய நலன் கருதி அரசே, நேரிடை நெல் கொள்முதல் நிலையங்கள் மூலமாகக் கொள்முதல் செய்து வருகிறது. மேற்படி நெல்லை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் பல்வேறு மாவட்டங்களுக்கு அனுப்பிய பின்னர், திறந்தவெளியில் சேமிப்புக் கிடங்கு அமைக்கப்பட்டு மீதம் உள்ள நெல்லைப் பாதுகாத்து வருகிறது. அந்த நெல் மூட்டைகளை மழை மற்றும் வெள்ளக் காலங்களில் பாதுகாத்து அவற்றை நவீன அரிசி ஆலையிலே அரைத்து, அந்த அரிசி பொது விநியோகத் திட்டத்திற்கு அனுப்பிவைக்கப்பட வேண்டியுள்ளது. இலட்சக்கணக்கான டன் நெல் மூட்டைகளை



அடுக்கிவைக்க நிரந்தரக் கிடங்கு வசதி இல்லாமல் உள்ளது. எனவே பல கிடங்குகள் அமைத்து அவற்றில் நெல் மூட்டைகளை மழைக்காலத்தில் பாதுகாப்பாக வைக்க வேண்டி கட்டடம் கட்ட சுமார் 50 ஏக்கர் நிலம் வேண்டுமென தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக மேலாண்மை இயக்குநர் கேட்டுள்ளார். நிரந்தரக் கிடங்கு அமைப்பது, தஞ்சாவூர் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் விவசாயப் பெருமக்களின் நீண்டகால நலன் கருதி எடுக்கப்படுகின்ற ஒரு காரியமாகும். எனவே அதேநேரத்தில் உங்கள் கோரிக்கையையும் பரிசீலித்து, பெண்கள் பொறியியல் கல்லூரியைச் சுற்றி - நன்றாகக் கவனிக்க வேண்டும் - பெண்கள் பொறியியல் கல்லூரியைச் சுற்றி தங்களது ஆக்கிரமிப்பில் உள்ள மொத்தப் பரப்பளவான 63.50 ஏக்கரில் 26.20 ஏக்கர் நிலத்தை மேற்கண்ட பொதுக் காரியத்திற்காக எடுத்துக்கொண்டு, மீதமுள்ள 37.30 ஏக்கர் நிலத்தைத் தங்களது சங்கத்திற்கு வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது" என்று எழுதப்பட்டுள்ளது.

முற்பகல் 10-55

இதிலே என்ன ஆக்கிரமிப்பு? நீங்கள் எடுத்துக்கொண்டதில் 26 ஏக்கரை அரசாங்கம் எடுத்துக்கொள்கிறது. தயவுசெய்து திருப்பிக் கொடுங்கள்; நாங்கள் 26 ஏக்கரை எடுத்துக் கொள்கிறோம், நீங்கள் 37 ஏக்கரை எடுத்துக்கொள்ளுங்கள் என்று சொன்னால், அது முடியாது என்று சொல்லி, உங்களைச் சந்தித்துப் பேசிவிட்டால் மட்டும் அது நியாயமாகிவிடாது. இது ஏதோ இப்பொழுது ஏற்பட்ட அரசியல் சூழ்நிலைகளில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் இல்லை. இது ஏற்கெனவே 30-6-1998-லே அவர்கள் எழுதிய கடிதத்திற்கு அப்போதே எழுதப்பட்ட பதில் கடிதம். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சுந்தரம், முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிட்டார்கள். அப்புறம் என்ன?

**திரு. பி.ஆர். சுந்தரம்:** Court-ல் Stay வாங்கியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Court-ல் Stay வாங்கியிருந்தால் அரசாங்கத்தின்மீது Contempt of Court வழக்குப் போடலாம். இதிலே அரசாங்கம் ஒன்றும் செய்ய முடியாது.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** அரசியல் காழ்ப்புணர்ச்சியின் காரணமாகத்தான்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது உங்களுடைய கருத்து. அதை இல்லையென்று முதலமைச்சர் அவர்கள் படித்துக் காண்பித்துவிட்டார்கள். நீங்கள் உட்காருங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** நான் ஒரு வேண்டுகோளை முதலில் முதலமைச்சர் அவர்களிடம் வைத்திருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடிந்து போனதைப் பற்றியெல்லாம் பேசக்கூடாது. (குறுக்கீடு) இல்லையில்லை, இரப்பர் தோட்டக் கழகப் பிரச்சினை பற்றிப் பேசுகிறார்.

## 2. சிறப்புக் கவன ஈர்ப்பு—தொடர்ச்சி.

### (ஆ) தமிழக மீனவர்களை பாகிஸ்தான் சிறையிலிருந்து மீட்டல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த 19 மீனவர்கள் பாகிஸ்தான் சிறையில் அடைக்கப்பட்டிருப்பதால் மீனவர்களிடம் ஏற்பட்டுள்ள கவலை குறித்து, மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஜே. ஹேமச்சந்திரன், திரு. டி. மணி, டாக்டர் தே. குமாரதாஸ், திரு. சி. வேலாயுதன், திரு. இரா. பொன்னார்டு, திரு. சி. ஞானசேகரன், திரு. பி.என். வல்லரசு ஆகியோர் சிறப்புக் கவன ஈர்ப்பு அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். திரு. பொன்னார்டு அவர்களைப் பேசுமாறு அழைக்கிறேன்.

**திரு. கே.ஆர். இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒரு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள். நான் அதை எடுக்க முடியாது என்று சொன்ன பின்னாலே நீங்கள் பேசிக்கொண்டே இருப்பதில் அர்த்தம் இல்லை. திரு. இரா. பொன்னார்டு.

**திரு. கே.ஆர். இராமசாமி:** நீங்கள் அனுமதி கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் அனுமதி கொடுக்கவில்லை.

**திரு. கே.ஆர். இராமசாமி:** நாங்கள் எல்லாம் பேசுவதற்கு வாய்ப்புக் கொடுக்க வேண்டும்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அனுமதி கொடுப்பதும் கொடுக்காததும் என்னுடைய உரிமை. நீங்கள் உட்காருங்கள். திரு. இரா. பொன்னார்டை பேச அழைக்கிறேன்.

**திரு. கே.ஆர். இராமசாமி:** நான் வெளிநடப்புச் செய்கிறேன்.

(திரு. கே.ஆர். இராமசாமி, அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தார்.)

**திரு. இரா. பொன்னார்டு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விதி 55(1)-ன்கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு ஒன்றை மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** திரு. கே. ஆர். இராமசாமி அவர்கள், ஒரு ஐயரைக் கொலை செய்துவிட்டார்கள் என்று சொல்கிறார்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசிக்கொண்டிருக்கிறார். நீங்கள் அப்புறம் பேசுங்கள். (குறுக்கீடு) நான் அதை எடுக்க முடியாது என்று சொல்லிவிட்டேன். (குறுக்கீடு) நீங்கள் என்ன முடிவு வேண்டுமானாலும் எடுத்துக்கொள்ளுங்கள். நான் அதை எடுக்க முடியாது என்று சொல்லிவிட்டேன். திரு. இரா. பொன்னார்டு.

**திரு. இரா. பொன்னார்டு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த 19 மீனவர்கள் அரபிக் கடலில் மீன் பிடிக்கச் சென்றபோது, திசை மாறிச் சென்றதன் காரணமாக, பாகிஸ்தான் சிறையில் அவர்கள் அடைக்கப்பட்டு துன்பப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களை உடனடியாக மீட்க வேண்டிய அவசியம் குறித்து, அரசின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

19 மீனவர்கள் பாகிஸ்தான் சிறையில் அவதிப்படுகிற சோகச் செய்தி இந்தியத் துணைக் கண்டம் முழுவதிலும் மிகுந்த வேதனையை அளித்திருக்கிறது. பொதுவாக மீனவர்கள் வெளிநாடுகளில் மீன்பிடிக்கச் செல்வதற்கான காரணம், குமரிக் கடலைப் பொறுத்தவரையில் ஆழ்கடலில்தான் ருசியும், சக்தியும், தரமும் வாய்ந்த மீன்கள் கிடைக்கின்றன; அவற்றைப் பிடிப்பதற்கு கட்டுமரங்களில் சென்றுவர இயலாத சூழ்நிலை இருக்கிறது. ஆகவேதான் பல்லாயிரக்கணக்கான மீனவர்கள் முறையான Passport பெற்று வெளிநாட்டுக் கடல்களில், அரபிக் கடல் போன்ற பகுதிகளில் மீன்பிடிக்கச் சென்றிருக்கிறார்கள்.

இப்படி ஏஜெண்டுகள் உதவியோடு செல்கின்ற மீனவர்கள், கடல் கொந்தளிப்பு, புயல் போன்றவை ஏற்படுகின்றபோது திசைமாறிச் சென்றுவிட்டால் அவர்களை அழைத்துச் சென்ற ஏஜெண்டுகள்கூட உரிய உதவிகளை உரிய காலத்தில் வழங்குவதில்லை. இந்த நிலையில் 19 மீனவர்கள் பல மாதங்களாக என்ன ஆனார்கள், எங்கே சென்றார்கள் என்ற தகவல் கிடைக்காமல் இருந்த சூழ்நிலையில், சிறைச்சாலையில் அவர்கள் இருக்கின்ற செய்தி, யாருடைய உதவியின் பேரிலோ குமரி மாவட்டத்தில் உள்ள அவர்களுடைய உறவினர்களுக்குத் தெரிவிக்கப்பட்டு, அரசுக்கு உரிய தகவல் தெரிவிக்கப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்களுக்கும், மீன் வளத் துறை அதிகாரிகளுக்கும் தகவல் கொடுக்கப்பட்டு, அதன்பேரில் உடனடியாக, வேகமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதற்கு என்னுடைய பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*முற்பகல் 11-00*

இப்போது பாகிஸ்தான் அவதிப்படுகின்ற சூழ்நிலையில் உள்ளது. ஒரு பக்கம் கார்கில் யுத்தம்; இன்னொரு பக்கம் பாகிஸ்தானில் ஆட்சி மாற்றம். இந்த நிலைகளின் காரணமாக, இந்திய அரசு வேகமான நடவடிக்கையை எடுத்தாலும், அவர்களை மீட்டுக் கொண்டுவந்து தருகின்ற நிலை உருவாகாத காரணத்தால், மீனவர்கள் மிகுந்த அவதிக்கு ஆட்பட்டிருக்கின்றார்கள். அவர்களை விரைவாக மீட்டுத்தர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்வதோடு, இதுபோன்றதொரு நிலை எதிர்காலத்தில் மீனவர்களுக்கு வரக்கூடாது. குழந்தையினுடைய பசி, உடல் நிலை, இதர கூறுகளை அறிந்து எப்படி குழந்தையினுடைய தாய் அந்தக் குழந்தைக்கு உதவ முன்வருவாளோ அதைப்போன்று முன்னெச்சரிக்கையாக...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் மீனவர் பிரச்சினை பற்றி மட்டும் பேசுங்கள்.

**திரு. இரா. பொன்னார்டு:** அந்த மீனவர்களுடைய நலத்தையும், வளத்தையும் கருத்திலேகொண்டு, மேற்சொன்ன பிரச்சினைகள் எல்லாம் உருவாகாமல் இருக்கும்பொருட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குளச்சல் துறைமுகம் அமைப்பதற்கு 2500 கோடி ரூபாய்க்கான ஒப்புதலை வழங்கி அனுமதித்திருக்கிறார்கள். அதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், அரசுக்கும் மீனவ மக்களின் சார்பிலே நன்றியைத்



தெரிவித்து, அவதிப்படுகின்ற 19 மீனவர்களை விரைவில் மீட்டுத்தர, மத்திய அரசுடன் தொடர்புகொண்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், அரசும், உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டு, உரையை நிறைவு செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் தே. குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தைச் சார்ந்த 19 மீனவர்கள் பல மாதங்களாக பாகிஸ்தான் சிறையில் அடைபட்டு வாடிக்கொண்டிருக்கின்ற சூழ்நிலையில், அவர்கள் குடும்பத்தைச் சேர்ந்தவர்களும், உற்றார் உறவினர்களும் கண்ணீரும் கம்பலையுமான நிலையில் காலத்தைக் கழித்துக் கொண்டிருக்கின்ற சூழ்நிலையில், அவர்களை விடுவிப்பதற்கான முயற்சிகளை நீங்கள் மேற்கொண்டிருந்தாலும், அது துரித நடவடிக்கையாக இல்லை என்பது எங்களுடைய கருத்து. பல்வேறு விதமான போராட்டங்களை கன்னியாகுமரி மாவட்டத்தில் மீனவ நண்பர்கள் நடத்திக் கொண்டிருக்கின்ற சூழ்நிலையில், சுமார் மூன்று மாதங்களுக்கு முன்பாக, தேர்தலுக்கு முன்பு அங்கே வருகை தந்திருந்த அன்றைய பிரதமர் - இன்றைய பிரதமர், மரியாதைக்குரிய திரு. வாஜ்பேயி அவர்கள், வாக்காளர்கள் மத்தியில் 'என்னுடைய கவனத்திற்கு இப்போது இந்தப் பிரச்சினை வந்திருக்கிறது. நான் உடனடியாக அவர்களை விடுதலை செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்வேன்' என்று சொல்லிச் சென்றார். அதன் அடிப்படையிலே, நடந்து முடிந்த தேர்தலிலேகூட கடற்கரை கிராமங்களில் உள்ள மீனவர்கள், அந்த மீனவ நண்பர்களை மீட்டுவிட முடியும் என்று எண்ணி, அவர்களுக்குப் பெருவாரியான வாக்குகளை அளித்தார்கள். அவர்கள் பிரதமராகி 1½ மாதங்கள் ஆகிவிட்டன. ஆனால் அந்த மீனவர்கள் அங்கே சிறையிலே இருந்து கொண்டிருக்கிறார்களே தவிர, இந்திய அரசு அவர்களை விடுதலை செய்வதற்கான முயற்சிகளை மேற்கொண்டதாகத் தெரியவில்லை. எனவே, மாண்புமிகு தமிழக முதல்வரவர்கள், தமிழக மக்களைக் காக்கின்ற முகத்தானும், தங்கள் ஆளுகைக்குட்பட்ட மீனவர்கள் பாகிஸ்தான் சிறையில் இருக்கின்றார்கள்; அவர்களை மீட்டுத் தர வேண்டும் என்ற உணர்வோடும், மத்திய அரசோடு தொடர்பு கொண்டு, உடனடியாக அந்த 19 மீனவர்களையும் மீட்டு இங்கே கொண்டு வருவதற்கான நடவடிக்கையில் முழு வீச்சில் செயல்பட வேண்டும். அந்த மீனவர்கள், வடநாட்டைச் சார்ந்தவர்களாக இருந்தால் இவ்வளவு நாட்கள் காலம் கடத்தியிருக்கமாட்டார்கள். அவர்கள் தமிழர்கள் என்ற எண்ணத்தில் மெத்தனமாக இருக்கிறார்கள்

என்று கருதுகின்றேன். எனவே தமிழர்களுடைய தலைவராக இருக்கின்ற மரியாதைக்குரிய முதலமைச்சர் அவர்கள், இதில் தனிக் கவனம் செலுத்தி, அந்த 19 மீனவர்களையும் மீட்டுக் கொடுக்க முயன்றால் நிச்சயமாக நடக்கும்; அதற்கான ஆக்கபூர்வமான பணிகளை மாண்புமிகு முதல்வரவர்கள் மேற்கொள்ள வேண்டுமென்ற வேண்டுகோளை விடுத்து அமைகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.என். வல்லரசு.

**திரு. பி.என். வல்லரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த மீனவர்கள் 19 பேர், சட்டப்படி Passport பெற்று, அரபிக் கடலில் மீன்பிடிக்கச் சென்றிருக்கிறார்கள். அப்படி மீன்பிடிக்கச் சென்ற காலக்கட்டத்தில், திசைமாறிச் சென்றதால், கைது செய்யப்பட்டுள்ளார்கள். பல நாட்களாக அவர்கள் எங்கே இருக்கின்றார்கள்; எந்தச் சூழ்நிலையில் இருக்கின்றார்கள் என்றெல்லாம் தெரியாத நிலை இருந்து, இப்போது அந்த 19 மீனவர்களும் பாகிஸ்தான் சிறையிலே அடைபட்டுக் கிடக்கிறார்கள் என்ற செய்தி தமிழக அரசுக்கும், முதலமைச்சர் அவர்களுக்கும் தெரிந்துள்ள சூழ்நிலையில், தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் நிச்சயமாக அந்த 19 மீனவர்களைக் காப்பாற்றுவார்கள் என்பதில் எள் முனையளவுகூட நமக்குச் சந்தேகம் இல்லை. எனவே இன்றிருக்கிற சிக்கல் என்னவென்றால், இது சர்வதேச பிரச்சினையைப் போல, பாகிஸ்தான் சிறையிலே அடைக்கப்பட்டிருக்கிற காரணத்தால் மத்திய அரசோடு, பிரதமரோடு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடர்பு கொண்டு, அந்த 19 மீனவர்களை மீட்பதற்கு முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 11-05

அதேபோல இங்கே தமிழக மீனவர்களுக்கு அடிக்கடி பக்கத்தில் இருக்கிற இலங்கை இராணுவத்தால் பல்வேறு தொல்லைகள் ஏற்பட்டு, பல்வேறு தடவை அவர்கள் சிறையிலே அடைக்கப்பட்டு இருக்கிறார்கள். எனவே இன்றிருக்கிற நல்ல சூழ்நிலையில் — மாநில அரசுக்கும் மத்திய அரசுக்குமிடையே இருக்கிற நல்ல சூழ்நிலையைப் பயன்படுத்தி தமிழக மீனவர்களுக்கு இலங்கை அரசாலும் ஏற்படுகிற தொந்தரவு, தொல்லைகளிலிருந்து மீட்பதற்கும் பேச்சுவார்த்தை நடத்தி ஒரு நடுமையான நிலையை தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் உருவாக்க வேண்டுமென்று கேட்டு, அந்த 19 மீனவர்களை மீட்டுத் தர வேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி அல்லது திரு. ஜே. ஹேமச்சந்திரன், யார் பேசுகிறீர்கள்? (குறுக்கீடு) சரி, திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தைச் சார்ந்த மீனவர்கள் நம்முடைய நாட்டில் மீன்பிடித் தொழிலின் மூலம் அதிக வருவாய் இல்லாத காரணத்தால் பிற நாடுகளை அண்டிச் செல்கின்ற ஒரு சூழ்நிலை ஏற்பட்டதன் பின்னணியில்தான் அவர்கள் அரேபிய நாட்டிற்குச் செல்கின்ற வழியில் திசை மாறி — கடலின் எல்லையைத் தாண்டினார்களா, இல்லையா என்பது நமக்கு யாருக்கும் தெரியாது. எல்லையைத் தாண்டவில்லை என்றாலும்கூட — பாகிஸ்தானுடைய நடவடிக்கையின் காரணமாக அவர்கள் சிறைப்படுத்தப்பட்டிருக்கிறார்கள் என்று அவர்களுடைய உறவினர்கள் மூலமாக வந்த தகவலின் அடிப்படையில் இன்று பாகிஸ்தான் சிறையில் அவர்கள் அடைபட்டிருக்கிறார்கள்; வேதனையுற்றிருக்கிறார்கள்.

அந்த அடிப்படையில் அவர்களை விடுதலை செய்ய வேண்டிய நேரம் அல்லது காலம் கடந்து இருக்கிறது. இதெல்லாம் ஒரு மாத காலத்திற்குள்ளே முடிக்க வேண்டிய சமாச்சாரம்; சில மாதங்கள் ஆகின்றன. அதனால் அந்தப் பகுதியிலே, கன்னியாகுமரி மாவட்டத்திலே மீனவ மக்கள் மத்தியில், மீனவத் தொழிலாளர்கள் மத்தியில் பெரிய கொந்தளிப்பும், கடுமையான ஆத்திரமும் ஏற்பட்டிருக்கிறது. எனவே மாநில அரசு, மைய அரசோடு நெருக்கமான தொடர்பு வைத்துக் கொண்டிருக்கிற காரணத்தால் மத்திய அரசைக் கொண்டு பாகிஸ்தான் அரசோடு பேசி, விரைவில் அவர்களை விடுதலை செய்ய உரிய நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும். மேலும் சில மாதங்களாக அவர்கள் இல்லாத சூழ்நிலையில் அவர்களுடைய குடும்பத்தைப் பாதுகாக்க வேண்டிய மிகப் பெரிய பொறுப்பு நம்முடைய மாநில அரசுக்கு இருக்கிறது. அந்த வகையிலே அந்தக் குடும்பங்களுக்குத் தேவையான நிதி உதவியைத் தந்து அந்தக் குடும்பங்களைப் பாதுகாக்கவும், அதேபோன்று அவர்களை விரைவில் விடுதலை செய்வதற்கான உரிய நடவடிக்கையினை மாநில சர்க்கார் எடுக்க வேண்டுமென்றும் கேட்டு முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தைச் சார்ந்த 19 மீனவர்கள் ஆழ்கடலிலே மீன்பிடிக்கச் சென்றவர்கள் பாகிஸ்தான் அரசால் கைது செய்யப்பட்டு

சிறையிலே பல மாதங்களாக வாடுகிறார்கள். தேர்தலின்போது அடல் பிகாரி வாஜ்பேயி அவர்கள் நாகர்கோவில் வந்தபோது, மீனவ சகோதரர்கள் அவரிடம் மனு கொடுத்தார்கள். அவர்கள் பேசும்போது மீனவர்களை பாகிஸ்தான் சிறையிலிருந்து வெளியே கொண்டு வருவதற்கான முயற்சியினை நிச்சயமாக எடுப்பேன் என்று சொல்லியிருந்தார்கள். பாரத நாட்டில் தேர்தல் நடக்கும்போது பாகிஸ்தானில் ஜனநாயக ஆட்சி இருந்தது. தேர்தல் முடிந்த பிறகு, அங்கு இராணுவ ஆட்சி வந்துவிட்டது. எனவே அரசாங்கம் எடுத்த முயற்சி சரியாக வெற்றி பெறக்கூடிய சூழ்நிலை இல்லாமல் இருப்பதற்கு இது ஒரு பெரிய முட்டுக்கட்டையாக அமைந்துவிட்டது. இருந்தாலும்கூட மத்திய அரசு அதற்குண்டான முயற்சியை எடுத்துக்கொண்டிருக்கிறது. அதற்குண்டான தகவல்களும் கன்னியாகுமரி மாவட்டத்தில், எங்களுக்கு வந்துள்ளது. பாரதத்தில் ஜனநாயகம் இருக்கும்போது அங்கு இராணுவ ஆட்சி வந்துவிட்ட காரணத்தால்தான், இதுவரை அவர்களை வெளியே கொண்டுவர முடியாத சூழ்நிலை இருக்கின்றது. தமிழக அரசுகூட நிச்சயமாக இந்தப் பிரச்சினையில் தலையிட்டு முயற்சி எடுத்திருக்கும் என்று கருதுகிறேன்.

மத்திய அரசும் தமிழக அரசும் இணைந்து வெகுவிரைவில் இந்த 19 பேரை வெளியே கொண்டுவர ஆவன செய்ய வேண்டும். மீன்பிடி மூலம் வரக்கூடிய வருமானத்தில் குடும்பம் நடத்தக்கூடிய அந்த ஏழைகளுக்கு வருமானம் இல்லாதது ஒருபுறம், இன்னொன்று தன்னுடைய குடும்பத்தினுடைய தலைவர் அந்நிய நாட்டில் அதுவும் இராணுவ ஆட்சி நடக்கக்கூடிய ஒரு நாட்டில் அகப்பட்டுக் கொண்டாரே, என்னவாகுமோ என்ற வேதனையோடு அவர்களுடைய வாழ்க்கை இருக்கிறது. வயிற்றுக்கு உணவு இல்லாமலும் மன நிம்மதி இல்லாமலும் இருக்கிற சூழ்நிலை இருக்கிறது. எனவே தமிழக அரசு, மாண்புமிகு முதல்வர் அவர்கள், அவர்களை வெளியே கொண்டுவர முயற்சி எடுப்பதோடு, அவர்களுக்கு மன நிம்மதி அளிக்கக்கூடிய நல்ல செய்தியைச் சொல்லி, அவர்களுடைய குடும்பத்திற்கும் ஆவன செய்யுமாறு கேட்டு அமைகிறேன்.

*முற்பகல் 11-10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர்

***மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரியைச் சேர்ந்த 15 மீனவர்களும்,



திருநெல்வேலியைச் சேர்ந்த 2 மீனவர்களும், இராமநாதபுரத்தைச் சேர்ந்த 1 மீனவரும், கடலூரைச் சேர்ந்த 1 மீனவரும் பல்வேறு பகுதிகளிலிருந்து ஒப்பந்த அடிப்படையில் சவுதி அரேபியாவிற்கு மீன்பிடித் தொழில் செய்வதற்கு தனியார் மூலமாக அழைத்துச் செல்லப்பட்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலையில் 12-2-1999 அன்று சவுதி அரேபியா கடலில் மீன் பிடித்துக் கொண்டிருக்கும்போது திசை மாறி ஈரான் கடற்கரையை 16-2-1999 அன்று அடைகிறார்கள். ஒரு நாட்டின் எல்லையிலிருந்து வேறுநாட்டிற்குச் செல்லும்போது அங்கே கடவுச் சீட்டு (Passport) மற்றும் அயல்நாட்டு நுழைவு இசைவு (visa) இருந்தால்தான் அந்த நாட்டில் அனுமதிக்கப்படுவார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலையில் வழிதப்பி வரும்போது அந்த மீனவர்கள் சிறைபிடிக்கப்படுகிறார்கள். 5-6-1999 அன்று மீண்டும் அவர்களை இந்தியாவிற்குக் கொண்டு வந்துவிடுகிறோம் என்று சொல்லி, ஈரான் நாட்டவர்கள் இந்தியாவிற்குக் கொண்டுவந்துவிடாமல், அவர்களை பாகிஸ்தான் எல்லையில் கொண்டுவந்துவிட்டுவிடுகிறார்கள்.

அங்கும் அதே சூழ்நிலை. கடவுச் சீட்டும் மற்றும் நுழைவு இசைவும் அதாவது visa இல்லை என்ற காரணத்தால் அங்கேயும் அந்த மீனவர்கள் சிறைபிடிக்கப்படுகிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. பொன்னார்டு மற்றும் அந்த மாவட்டத்தைச் சேர்ந்த அமைச்சர், இன்னும் பல்வேறு சங்கங்களைச் சேர்ந்தவர்களும், கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்தவர்களும், இந்தப் பிரச்சினையை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தனர். அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்தவுடன் டாக்டர் கலைஞர் அவர்கள் எங்களுக்கு உடனடியாக ஆணை பிறப்பித்தார்கள். சிறை பிடிக்கப்பட்டிருக்கும் மீனவர்கள் தமிழ்நாட்டிலிருந்து செல்லவில்லை என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். உடனடியாக நடவடிக்கை எடுத்து தமிழக மீனவர்களை மீட்டு வர வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டார்கள். நாங்கள் உடனடியாக மத்திய அரசின் வெளி விவகாரத் துறையோடு தொடர்பு கொண்டு, இந்த மீனவர்களை மீட்டு வர வேண்டுமென்று கோரினோம். இதன் அடிப்படையில் 14-7-1999 அன்று மத்திய அரசிலிருந்து, இந்த மீனவர்கள் எல்லாம் எங்கிருந்து சென்றார்கள், அவர்களுடைய அடையாள அட்டைகள், Passport போன்றவற்றை எங்களுக்குத் தர வேண்டுமென்று சொன்னார்கள். 6-8-1999 அன்று இதுகுறித்து எங்களுக்கு ஒரு கடிதம் வந்தது. கடிதம் வந்தவுடன் 27-8-1999-லே நாங்கள் மீண்டும் அந்த 19

மீனவர்களின் அடையாளங்கள் மற்றும் அவர்களுடைய Passport விவரங்கள், விலாசங்கள் ஆகியவற்றை எல்லாம் மத்திய அரசுக்கு அனுப்பி வைத்தோம்.

அதுமட்டுமல்லாமல் நமது மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் காணாமல்போன 19 மீனவர்களை பத்திரமாக தாயகத்திற்கு அழைத்து வர வேண்டுமென்று மத்திய வெளி விவகாரத் துறைக்கு மீண்டும் கடிதம் எழுதினார்கள். நினைவூட்டுக் கடிதம் எழுதினார்கள். அந்தக் கடிதத்தின் மேல், மத்திய அரசு இஸ்லாமாபாத்தில் உள்ள இந்தியத் தூதரகத்தின் ஒரு பிரதிநிதி நேரில் சென்று அங்கே சிறைப்பிடிக்கப்பட்டிருக்கின்ற மீனவர்களை பத்திரமாக அழைத்து வர வேண்டுமென்று மீண்டும் ஆணையிட்டது. அதன்படி 9-9-1999-ல் அந்த 19 மீனவர்களும் பாகிஸ்தான் சிறையில் இருக்கிறார்கள் என்று உறுதி செய்யப்பட்டது. இன்னும் 19-11-1999-ல் மீண்டும் ஒரு நினைவூட்டுக் கடிதம் எழுதியிருக்கிறோம். இன்று பாகிஸ்தானுக்கும் நமக்கும் உள்ள சூழ்நிலைகள் இங்கே உள்ள அனைவருக்கும் தெரிந்திருப்பதே. அப்படியிருந்தாலும் தமிழக மீனவர்களை மீட்டு வர வேண்டுமென்று இந்த அரசு பாடுபட்டுக் கொண்டிருக்கிறது. இங்கே நமது சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு திரு. குமாரதாஸ் அவர்கள் சொல்லும்போது அண்டை மாநிலத்தில் இருந்தால் சீக்கிரம் மீட்டு வந்திருப்பார்கள் என்று சொன்னார். முறைப்படி நாங்கள் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம். 1996-லே ஒரு பெரிய புயல் வந்தது. அந்தப் புயலின் காரணமாக....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. குமாரதாஸ் உங்களுக்கு சாதகமாகத்தான் சொன்னார். அதாவது தமிழ்நாட்டில் இருந்து போய் உயிரோடு இருக்கிறார்கள் என்று சொன்னார்.

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்டை நாட்டில் உள்ள மீனவர்கள் இந்த நாட்டிற்கு வந்தால்கூட, நாம் முதலில் சிறையில்தான் அடைப்போம். அதுபோலத்தான் அந்த மீனவர்களை சிறைப்பிடித்திருக்கிறார்கள். மேலும் அந்தச் சிறையிலே உள்ள மீனவர்கள், தங்களுடைய குடும்பத்தாருக்குக் கடிதம் எழுதியிருக்கிறார்கள். அந்தக் கடிதம்கூட என் கையில் இருக்கிறது. மேலும் மாண்புமிகு முதல்வர் அவர்களும் கடிதம் எழுதியுள்ளார்கள். இவையெல்லாம் என் கையில் இருக்கின்றன.



புயல் காலத்தில் இரண்டு படகுகளில் சென்ற 10 மீனவர்கள் பங்களாதேஷ் சென்றடைந்தார்கள். இரண்டு வருடம் கழித்துத்தான் நமக்குத் தெரிந்தது. 1997-ல் தெரிவிக்கப்பட்டது. அப்படியிருந்தாலும்கூட, உடனே இந்த அரசு நேரிலே ஒரு துணை இயக்குநரை அங்கே அனுப்பி அந்த 10 மீனவர்களை மீட்டு வந்திருக்கிறது. மீனவர்களை மீட்டு வருவதில் நமது தமிழக அரசு நிச்சயமாக முதலிடம் பெற்றிருக்கிறது. இன்றைய சூழ்நிலை காரணமாக உடனடியாக மீட்டு வர முடியாத நிலை உள்ளது. இருந்தாலும் மீண்டும் மீண்டும் நாங்கள் இதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம் என்பதைத் தெரிவித்து அமைகிறேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ச. அழகிரி.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறுகிறபோது, இஸ்லாமாபாத்தில் உள்ள இந்தியத் தூதரகத்தைச் சேர்ந்தவர்கள் சிறையிலே இருக்கிற மீனவர்களைச் சென்று பார்த்தார்கள் என்று கூறினார்கள். ஆனால் சென்ற வாரம் இஸ்லாமாபாத்தில் சிறையில் இருக்கின்ற மீனவர்கள் எழுதிய கடிதத்தில் இந்தியத் தூதரகத்திலிருந்து எங்களை யாரும் வந்து இதுவரை சந்திக்கவில்லையென்று அவர்கள் கடிதம் எழுதி, அது குமுதம் பத்திரிகையிலே வெளி வந்திருக்கிறது. இதனை அமைச்சர் அறிவாரா? எது உண்மை என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-15

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுக்கு மத்திய அரசிலிருந்து 9-9-1999-ல் இஸ்லாமாபாத்தில் ஹட்டா மாவட்டத்தில் க்ஹூட்டா என்ற இடத்திலுள்ள சிறையில் இந்த மீனவர்கள் அடைக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற தகவல் வந்திருக்கிறது. ஆனால் மத்திய அரசு நேரிலே சென்று அவர்களைப் பாதுகாப்பாக அழைத்து வர வேண்டுமென்று அவர்களுக்கு அறிவுரை வழங்கியிருப்பதாக நான் கூறியிருக்கிறேன். ஆகவே அதன்படி அழைத்து வருவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**(ஐ) கன்னியாகுமரி மாவட்டம், அரசு இரப்பர் தோட்டக் கழகத் தொழிலாளர்களுக்கு போனஸ் வழங்குதல்**—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, இந்த இரப்பர் விஷயம் இரப்பராக இருந்துவிட்டது. (சிரிப்பு) நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் குமாரதாஸ் அவர்களும், ஹேமச்சந்திரன் அவர்களும், வேலாயுதன் அவர்களும் அதைப் பற்றி இங்கே பேசியிருக்கின்றார்கள். இரப்பர் கழகத்திலே வேலை செய்கின்ற தொழிலாளர்களுக்கு 20 சதவிகிதம் போனஸ் சென்ற ஆண்டு தந்ததைப் போலவே தர வேண்டுமென்று கோரி இருக்கின்றார்கள். தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் இந்த அரசு எத்தகைய அணுகுமுறை கொண்டிருக்கிறது என்பது எல்லோருக்கும் தெரியும். ஆனால் இருக்கின்ற நிலவரம், அவர்களே இங்கே குறிப்பிட்டதைப் போல, இரப்பர் விலை படு பாதாள வீழ்ச்சிக்கு உள்ளாகியிருக்கிற காரணத்தினால் பெரும் இழப்புக்கு அந்த நிறுவனம் ஆளாகியிருக்கின்றது. எனவேதான் அமைச்சர் இங்கே பேசும்போது, அந்த அளவிற்குத் தர இயலாது, 8 1/3 சதவீதம்தான் தர இயலும் என்று குறிப்பிட்டார். பிறகு அமைச்சரை நான் அழைத்து அவர்களிடத்திலே பேசியிருக்கிறேன். இந்தக் கோரிக்கையை மூன்று பேர், குமாரதாஸ், ஹேமச்சந்திரன், வேலாயுதன் — T.M.C., C.P.M., B.J.P. — மூன்றும் சேர்ந்து ஒருமித்த குரலிலே வைத்திருக்கிற காரணத்தினால் நான் சமாதானமாக ஒரு செய்தியைச் சொல்ல விரும்புகிறேன். அதை மூவரும் ஏற்றுக்கொள்வார்கள் என்று நம்புகின்றேன். முதலில், கடந்த ஆண்டு போல 20 சதவிகிதம் தர இயலவில்லை என்றாலும், முதல் கட்டமாக அதை இரு கூறுகளாகப் பிரித்து, 20 சதவிகிதத்தை இரண்டு தவணையாகத் தருவது என்று முடிவு செய்து, முதலில் இப்போது 10 சதவிகித போனஸ் வழங்குவது என்றும் (மேசையைத் தட்டும் ஒலி) மீதமுள்ள 10 சதவிகிதத்தை எதிர்காலத்தில் வழங்குவது என்றும், அவர்கள் குறிப்பிட்டதைப்போல,—இந்த இரப்பர் மரங்களை எல்லாம் வெட்டி, பிறகு அதை விற்றால் அதிலே லாபம் எல்லாம் வரும் என்று சொன்னார்கள், அதை வைத்து இரண்டாவது பகுதியாக இன்னொரு 10 சதவிகிதத்தை வழங்குவது என்றும் அரசு தீர்மானித்து, அதன்படி அங்குள்ள தொழிலாளர்களை வேலைக்குச் செல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்ள வேண்டுமென்றும் மூன்று உறுப்பினர்களையும் நான் கேட்டுக்கொள்கின்றேன். நானும் அவர்களைக் கேட்டுக்கொள்வதாக அவர்கள் எடுத்துக்கொண்டு பணிக்குச் செல்ல வேண்டுமென்று கோருகின்றேன். இந்த அளவில் என்னுடைய நிலையைத் தெரிவித்து அமைகின்றேன். (குறுக்கீடுகள்)



## 3. தகவல் கோரல்—தொடர்ச்சி.

### (ஆ) தமிழகத்தின் பல்வேறு இடங்களில் கிருத்துவ தேவாலயங்களும் மற்றும் வேலூரில் தர்காவும் தீயினால் சேதம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் உறுப்பினர் திரு. அப்துல் லத்தீப்புக்குத்தான் அனுமதி கொடுப்பேன்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை குறித்து எங்களுடைய கட்சியின் சார்பாக ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அறிவிப்பு கொடுக்கப்பட்டது. தமிழ்நாடு முழுவதும் 10-க்கும் மேற்பட்ட இடங்களில் கிருத்துவ தேவாலயங்கள் தீ வைத்துக் கொளுத்தப்பட்டிருக்கின்றன. வேலூரிலே சத்துவாச்சாரியிலே ஒரு தர்கா உடைக்கப்பட்டு தீ வைக்கப்பட்டிருக்கிறது. இது மிக முக்கியமான பிரச்சினை. எனவே இதுகுறித்து அரசினுடைய கவனத்தை ஈர்க்க வேண்டுமென்று எங்களுடைய உறுப்பினர் வாயிலாக தீர்மானத்திற்கு அறிவிப்பு கொடுக்கப்பட்டது. அது ஏனோ எடுத்துக்கொள்ளப் படவில்லை. எனவே அதை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று தங்களை நான் கேட்டுக்கொள்கிறேன்; அல்லது அதுகுறித்த பதிலை நான் பேசியதையே அடிப்படையாக வைத்து அரசு தருமானால் அதையும் ஏற்றுக்கொள்வதற்குத் தயாராக இருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, Church-கள், கூரை வேய்ந்த Church-கள் எரிக்கப்பட்டிருக்கின்றன அல்லது எரிந்திருக்கின்றன. ஒன்றிரண்டு எரிக்கப்பட்டது உண்மை; அல்லது தானாகவே எரிந்திருக்கின்றன என்பதும் உண்மை. குறிப்பாக நம்முடைய திருவள்ளூர் மாவட்டத்திலே மாத்திரம் 200-க்கும் மேற்பட்ட பூஜை இடங்கள், தேவாலயங்கள் அல்ல — பூஜை இடங்கள் — அல்லது வழிபடும் இடங்கள் என்று அவர்கள் வைத்திருக்கின்ற இடங்கள் கூரையினாலேயே வேயப்பட்டிருக்கின்றன. அதனால் அந்தக் கூரை வேய்ந்த இடங்களுக்கு அடிக்கடி ஆபத்து ஏற்படுகிறது. நெருப்பினால் ஆபத்து ஏற்படுவது சகஜம். அதுவும் தீபாவளி நேரத்திலே பட்டாசுகளால் பல இடங்களிலே தீ பற்றியிருக்கின்றது.

முற்பகல் 11-20

இன்னுமொன்று சொல்லப்படுகிறது. அது எவ்வளவுதூரம் உண்மை என்று எனக்குத் தெரியாது. எரிந்துள்ள Church-கள் எல்லாம்

கூடுமானவரையில் Protestant Church-கள் என்று கூறப்பட்டு, இன்னொரு பிரிவினர்மீதுகூட பழி கூறப்படுகிறது. இவையெல்லாம் என்னிடத்திலே வந்து விவாதித்தவர்கள் கூறியுள்ள செய்திகளாகும். நான் அந்த விளக்கங்களுக்கெல்லாம் செல்ல விரும்பவில்லை. கூடுமானவரையிலே கூரைகள் வேயாமல் Church-களை ஆங்காங்கே அமைத்திட்டால் நல்லது என்று அவர்களுக்கெல்லாம் அறிவுரை வழங்கப்பட்டு இருக்கின்றது. குறிப்பாக மத விரோதமாக, ஒரு மதத்தின் பேரால் Church-களுக்கோ, தர்காக்களுக்கோ அல்லது ஆலயங்களுக்கோ எந்த ஆபத்து சூழப்பட்டாலும், அதை இந்த அரசு வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்காது; உடனடியாக நடவடிக்கை எடுக்கும்; எடுத்து இருக்கிறது. குறிப்பாக கன்னியாகுமரியிலேகூட ஓலை வேய்ந்த ஓர் இடம் எரிந்ததன் காரணமாக, நானே மாவட்ட ஆட்சியரோடு தொடர்புகொண்டு தொலைபேசியிலே பேசி, அங்குள்ள எல்லாக் கட்சித் தலைவர்களையும் அழைத்து வைத்துப் பேசி, அந்தக் கூரை இருந்த அந்த இடத்தில் கட்டக் கூடாது என்று ஒரு சாரார் மறுத்து வந்தார்கள்; அவர்களையும் சமாதானப்படுத்தச் செய்து, அதே இடத்தில் அந்த கூரை வேய்ந்து பழைய Church-ஐயே மறுபடியும் புதுப்பிக்குமாறு சொல்லி, அங்கே அமைதி ஏற்பட்டு இருக்கின்றது. எனவே ஆங்காங்கு இத்தகைய சூழ்நிலைகள் ஏற்படும்போதெல்லாம், அதிகாரிகளோடு கலந்துபேசி ஓர் அமைதியான சூழ்நிலையை உருவாக்க அரசு முயன்று கொண்டிருக்கிறது.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Point of Order.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரப்பர் கழகமானது நட்டத்தில் இயங்கிக் கொண்டிருந்தாலும்கூட, அங்குள்ள தொழிலாளர்களுக்கு 20 சதவீதம் போனஸ் இரண்டு தடவையாக வழங்கப்படும் என்று சொன்ன மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவிப்பதோடு, அந்தத் தொழிலாளர்கள் strike செய்வதை விட்டுவிட்டு, வேலைக்குத் திரும்புமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன். இன்னொரு விஷயம்கூட..... (குறுக்கீடு) கன்னியாகுமரி மாவட்டத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்





சொன்னது; இரண்டு வழிபாட்டுத் தலங்கள் எரிந்ததாக பிரச்சினை வந்து இருக்கின்றது; C.B.C.I.D. விசாரித்து இருக்கின்றார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள் அந்த—

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதைப் பற்றிப் பேசியாகிவிட்டது. திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. அப்துல் லத்தீப் அவர்கள் ஒரு பிரச்சினையைக் கிளப்பி, முதலமைச்சர் அவர்களும் பதில் அளித்து இருக்கிறார்கள். இதே பிரச்சினை குறித்து நாங்கள் 17-ஆம் தேதியே எங்கள் கட்சியின் சார்பில் சிறப்புக் கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்து இருந்தோம். ஆனால் இடையிலே, திடீரென்று ஒரு நிகழ்வாக, தங்களால் அனுமதிக்கப்பட்டு விட்டதன் மூலம், முன்னரே அறிவிப்பு கொடுத்து இருப்பவர்களுடைய கதி என்ன? அதைக் கொடுத்து இருந்தவர்கள், தங்கள் பிரச்சினையை அவையிலே முன்வைப்பதற்குரிய வாய்ப்புகள் மறுக்கப்பட்டுவிட்டதே? எதிர்காலத்திலேயாவது இந்தப் பிரச்சினைகளிலிருந்து உறுப்பினர்களுக்குத் தாங்கள் பாதுகாப்பு அளிப்பீர்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் இப்படிச் சொல்வது எந்த வகையிலும் முறையல்ல. நேற்று மின்சாரத்தைப் பொறுத்தவரையில் ஒரு முக்கியமான பிரச்சினை; அதற்கு அறிவிப்பு கொடுத்து பேசுவதற்கு வாய்ப்பு இல்லை என்றார்கள். நேற்று மின்சாரத் துறை அமைச்சரிடம் கேள்வி நேரத்திலே, தொடர்பு இல்லாமல் துணை வினா மூலமாக திரு. சுப்பராயன் பிரச்சினையை எழுப்ப திரு. லட்சுமணன் பிரச்சினையை எழுப்ப, அனுமதி அளித்தேன். இது எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். இன்று மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்துல் லத்தீப் அவர்கள் திடீரென்று எழுந்து இந்தப் பிரச்சினையைச் சொன்னார்கள். அதற்கு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லி இருக்கின்றார்கள். இதிலே அதை எடுத்துக் கொண்டிருந்தால், யார் யார் அறிவிப்பு கொடுத்து இருந்தார்களோ அவர்கள் அத்தனை பேர்களையும் அழைத்து இருப்பேன். ஆகவே இதை ஒரு பெரிய பிரச்சினையாக இப்போது நீங்கள் பேசக் கூடாது. வருங்காலத்தில் எல்லோருக்கும் வாய்ப்புக் கொடுக்கப்படும்.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

[1999 நவம்பர் 24

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நினைத்தால் உடனே நீங்கள் எழுந்து நிற்கிறீர்கள். (குறுக்கீடுகள்) திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூரில் Church-ம் எரிந்தது; தர்காவும் எரிந்தது. இது குறித்து நான்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது பற்றி ஏற்கெனவே நான் சொல்லிவிட்டேன். அப்புறம் நீங்கள் திரும்பப் பேசிக்கொண்டு இருந்தால், என்ன அர்த்தம்? அதற்கு முதலமைச்சர் பதில் சொல்லியாகிவிட்டது. (குறுக்கீடு) நான் உங்களுக்கு வாய்ப்புக் கொடுக்கவில்லை. இதற்கு உங்களுக்கு மட்டும் வாய்ப்புக் கொடுத்தால், அப்புறம் ஒவ்வொருவரையும் கூப்பிட வேண்டும்; உட்காருங்கள். அடுத்து, கோவை...

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏன் நீங்கள் சத்தம் போட்டுப் பேசிக்கொண்டு இருக்கிறீர்கள்? (குறுக்கீடு) நான் அனுமதி கொடுக்க முடியாது; உட்காருங்கள்.

## 2. சிறப்புக் கவன ஈர்ப்பு—தொடர்ச்சி.

### (இ) கோவை, ஆற்றுப்பாலத்தில் சுங்கவரி வசூலிப்பதால் ஏற்பட்டுள்ள நிலை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, கோவை ஆற்றுப்பாலத்தில் சுங்கவரி வசூலிப்பதால் ஏற்பட்டுள்ள நிலை குறித்து மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. சுப்பராயன், திரு. வி.கே. லட்சுமணன், திரு. சி. ஞானசேகரன் ஆகியோர் அறிவிப்பு கொடுத்து இருக்கின்றார்கள். திரு. வி.கே. லட்சுமணன். (குறுக்கீடுகள்)

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முக்கியமான பிரச்சினை....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லாம் முக்கியமான பிரச்சினை தான். உட்காருங்கள். நீங்கள் என்னிடம் வந்து கேட்டீர்கள்; நான் அனுமதி கொடுக்க முடியாது என்று சொல்லிவிட்டேன். மேலும் மின்சாரத் துறை அமைச்சர் இப்போது இல்லை; வெளியூர் சென்றிருக்கிறார்; நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) நான் அனுமதிக்க முடியாது. (குறுக்கீடு) நான் அனுமதிக்க முடியாது என்று



1999 நவம்பர் 24] [பேரவைத் தலைவர்]

சொல்லிவிட்டேன். (குறுக்கீடு) இது முறையில்லை; உட்காருங்கள். திரு. வி.கே. லட்சுமணன். (குறுக்கீடு) திரு. மு. அப்பாவு சொல்வது அவைக் குறிப்பில் ஏறாது.

*(உறுப்பினர் திரு. மு. அப்பாவு நின்றுகொண்டு ஏதோ பேசிக் கொண்டிருந்தார்)*

திரு. மு. அப்பாவு சொல்வது அவைக் குறிப்பிலே ஏறாது. திரு. வி.கே. லட்சுமணன். (குறுக்கீடு) திரு. மு. அப்பாவு சொல்வது அவைக் குறிப்பிலே ஏறாது. (குறுக்கீடு) மீண்டும் திரு. அப்பாவு அவர்கள் பேசினால் அவையைவிட்டு வெளியேற்ற வேண்டிய அவசியம் வரும். திரு. வி.கே. லட்சுமணன்.

*முற்பகல் 11-25*

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்பாவு அவையைவிட்டு வெளியேற வேண்டும். (குறுக்கீடு) உறுப்பினர் அவையைவிட்டு வெளியேற வேண்டும். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்பாவு அவர்களை அவையை விட்டு வெளியேற்றுமாறு அவைக் காவலர்களுக்கு உத்தரவிடுகிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்பாவு சொல்வது அவைக் குறிப்பிலே ஏறாது. திரு. வி.கே. லட்சுமணன்.

*(திரு. மு. அப்பாவு அவைக் காவலர்களால் பேரவையிலிருந்து வெளியேற்றப்பட்டார்)*

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாநகரத்தில் தெற்குப் பகுதியில் நொய்யலாற்றின்மீது நீண்ட நாட்களாக ஒரு தரைமட்டப் பாலம் இருந்தது. 1950 ஆம் ஆண்டு அந்தப் பாலம் உயர்மட்டப் பாலமாகக் கட்டப்பட்டது. அந்தப் பாலம் சிறிய பாலமாக இருந்ததன் காரணமாக மிகுந்த போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. அதன் காரணமாக L & T நிறுவனத்தின் மூலமாக B.O.T. (Build, Operate and Transfer) என்ற முறையிலே இப்போது ஒரு புதிய பாலம், பழைய பாலத்திற்கு அருகிலே கட்டப்பட்டு, இரண்டு பாலங்களும் இணைக்கப்பட்டிருக்கின்றன. தற்போது பழைய பாலம்,

[திரு. வி.கே. லட்சுமணன்] [1999 நவம்பர் 24

புதிய பாலம் இரண்டின்மீதும் போக்குவரத்து இருக்கிறது. பழைய பாலத்திற்கு L & T நிறுவனம் எந்தத் தொகையும் செலவழிக்கவில்லை. புதிய பாலத்திற்கு 7 கோடி ரூபாய் செலவழிக்கப்பட்டு இருப்பதாகச் சொன்னாலும்கூட அவ்வளவு தொகை செலவாகியிருக்க முடியாது என்று நான் கருதுகிறேன்.

இதில் என்ன விநோதம் என்றால் இதுபோன்று பாலங்கள் புதிதாகக் கட்டப்படுகின்றபோது, அந்தப் பாலத்தைப் பயன்படுத்துவதற்கு ஒரு நாளைக்குத்தான் கட்டணம் வசூலிப்பது வழக்கம்; சுங்கவரி வசூலிப்பது வழக்கம். ஆனால் இந்தப் பாலத்திலே ஒவ்வொரு முறை போகின்றபோதும், காருக்கு 5 ரூபாய், லாரிக்கு 15 ரூபாய், கனரக வாகனங்களுக்கு 23 ரூபாய் என்று தொகை வசூலிக்கப்படுகின்றது. போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்காக அந்தப் பாலம் கட்டப்பட்டுள்ளது. ஆனால் அந்த நோக்கம் நிறைவேறாமல் போக்குவரத்து நெரிசல் மீண்டும் அதிகமாகி, கோவையிலிருந்து குனியமுத்தூர்வரை வாகனங்கள் நிற்பதை நம்மாலே பார்க்க முடிகிறது. நாங்கள் எடுத்த விவரத்தின்படி, ஒரு நாளைக்கு 6,000 வாகனங்கள் இந்தப் பாலத்தைக் கடந்து செல்கின்றன என்பது தெரிய வந்திருக்கிறது. இந்தப் பாலத்திலே வசூலிக்கப்படுகின்ற கட்டணமானது; இன்றுள்ள கட்டண விகிதத்தின்படி பார்த்தோம் என்று சொன்னால் ஆண்டொன்றிற்கு, L & T நிறுவனத்திற்கு குறைந்தது 1 கோடி ரூபாய் லாபம் கிடைப்பதற்கு வாய்ப்பிருக்கிறது. இந்தக் கட்டணத்தை வசூலிப்பதற்கு 21 ஆண்டுகளுக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறது. இந்தப் பாலத்தைக் கட்ட ஒட்டுமொத்தமாக 7 கோடி ரூபாய் செலவாகியிருக்குமென்று சொன்னால், கிட்டத்தட்ட 6, 7 ஆண்டுகளிலே அந்த முழுத் தொகையும் வசூலாகிவிடும். அப்படியிருக்க 21 ஆண்டுகளுக்கு இந்தத் தொகை வசூலிக்கப்பட்டால் அதனால் பொது மக்கள் பெரிதும் பாதிக்கப்படுவார்கள். ஆகவே நான் கேட்டுக்கொள்ள விரும்புவதெல்லாம் ஒவ்வொரு முறையும் கட்டணத்தை வசூலிப்பதற்கு பதிலாக, ஒரு நாளைக்கு ஒரு முறைதான் வசூலிப்பது என்ற முறையை—மற்ற பாலங்களுக்கெல்லாம் எப்படி விதிக்கப்பட்டிருக்கிறதோ அதேபோல—இதற்கும் கடைப்பிடிக்கப்படும் என்று சொன்னால், அங்கே போக்குவரத்தானது மிக எளிதாக்கப்படும், பொது மக்களுக்கும் துன்பங்கள் குறையும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். அரசு இதைச் செய்ய முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.



1999 நவம்பர் 24]

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மதிப்பிற்குரிய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் மாண்புமிகு திரு. வி.கே. லட்சுமணன் அவர்கள் முன் வைத்ததைப் போலவே ஒரு சிக்கலான, நெருக்கடி நிறைந்த பிரச்சினையாக அது நடைமுறையில் அமைந்திருக்கிறது. மக்களுடைய தேவைகளை நிறைவேற்றுவதற்கான கடமைப் பொறுப்புள்ள மாநில அரசு தன்னுடைய நிதிப் பற்றாக்குறையின் காரணமாக வேறு வழிமுறைகளைத் தேடுகிறபோது, ஏற்படுகிற விபத்து என்று நான் இதைக் கருதுகிறேன். குறிப்பாக எப்படியாவது பொது மக்களின் பிரச்சினைகளில், தேவைகளில் ஓரளவிற்கு நிறைவேற்றப்பட வேண்டுமென்று கருதி மேற்கொண்டிருக்கிற ஒரு செயல்முறையாக அமைந்திருக்கிற இந்த B.O.T. என்பது, நடைமுறையில் எப்படி பாதிக்கிறது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

முற்பகல் 11-30

அந்தப் பாலத்தைப் பொறுத்தவரையிலும், போகிறபோதும், வருகிறபோதும், 3 lanes இருக்கின்றன என்றாலும்கூட, பேருந்துகள், கார்கள், லாரிகள் அரை பர்லாங் தூரத்திற்கு முற்றிலும் நிறுத்தப்பட்டு விடுகின்றன. பேருந்திலே அமர்ந்திருக்கிற பயணிகள், கார்களில் வருகிற பயணிகள் எல்லோருக்குமே இது ஒரு rupture-ஆக, அவர்களுக்கு மன உளைச்சலை ஏற்படுத்துகிற ஒரு பிரச்சினையாக தினசரி, ஒவ்வொரு முறையும் அமைந்துவிடுகிறது. இப்படி ஒரு சிக்கலை ஏற்படுத்துகிற விஷயத்தை மாநில அரசு மிகுந்த கவனத்தோடு கவனிக்க வேண்டுமென்பதைத்தான் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

B.O.T. மூலம் வேலைகள் நடைபெறலாம்; ஆனால் வேலைகள் நடைபெற்று இருக்கின்றன. அந்த வேலைகளுக்காக அவர்கள் 20 வருடங்கள், 21 வருடங்கள், 30 வருடங்கள் கட்டணம் வசூலிக்கிறபோது இந்தப் பிரச்சினைகள் அதிகமாக ஏற்படுகின்றன என்பதைத்தான் நாம் நடைமுறையில் பார்க்கிறோம். எனவே அங்கே லாரி உரிமையாளர்களும் சரி, வேறு பல்வேறு அமைப்புகளும் சரி வரி வசூலை முற்றிலுமாக இரத்து செய்யவேண்டுமென்றுதான் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அப்படி இரத்து செய்ய வேண்டுமென்பதைத்தான் நானும் இப்பொழுது கோரிக்கையாக வைக்கமுடியும். ஆனால் நடைமுறையில் B.O.T. மூலம் அமைக்கப்பட்டிருப்பதில் அவர்களுக்கு ஒப்பந்த ரீதியான உரிமை, வசூலிப்பது என்பது. எனவேதான் நடைமுறையில் நிர்வாகச் சிக்கலை ஏற்படுத்தும் விஷயம் என்பதால் - இதில் ஒரு தீர்வு காணவேண்டி

இருக்கிறது. ஏனென்றால் அநேகமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட அந்த புறவழிச்சாலையை திறந்து வைக்கிற விழாவுக்கு வரக்கூடும். அப்படி வருவதற்கு முன்னரே, கோவை மாவட்டத்தில் இருக்கக்கூடிய பல்வேறு அமைப்புகளை ஒரு நாள் வரவழைத்து முதலமைச்சர் மட்டத்தில் இந்த பிரச்சினைகளைப் பேசி ஒரு சுமூகத் தீர்வு கண்டுவிட வேண்டுமென்பதைத்தான் நான் வலியுறுத்த விரும்பு கிறேன். ஆகவே மாநில அமைச்சரை நான் கேட்டுக் கொள்ள விரும்புவது, முதலமைச்சர் அவர்கள் திறப்பு விழா நிகழ்ச்சிக்கு வருவதற்கு முன்னரே அங்கே பாதிக்கப்பட்டிருக்கிற லாரி உரிமையாளர்கள், மற்றும் பல்வேறு சேவை அமைப்புகளையெல்லாம் சென்னைக்கு அழைத்து முதலமைச்சர் மட்டத்தில் ஒரு பேச்சு வார்த்தை நடத்தி அதில் ஒரு சுமூகத் தீர்வு காண்பதற்கான முயற்சியை மாநில அரசு மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலில் நான் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு ஒரு பணிவான வேண்டுகோளைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். தமிழ்நாட்டில் அடிப்படை கட்டமைப்பு வசதிகளே இன்னும் உருவாக்கப்படவில்லை என்பதை ஆளும் தரப்பிலே உள்ள நாங்களும் சொல்கிறோம். எதிர்த் தரப்பிலே உள்ள நீங்களும் சொல்கிறீர்கள். அப்படிப்பட்ட கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதற்கு இப்போது நம்முடைய அரசு மிகுந்த முயற்சிகளை மேற்கொண்டு இருக்கிறது. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதற்குத் தேவையான நிதியாதாரங்களை பல்வேறு வகைகளில் பெற்று அவற்றையெல்லாம் நிறைவேற்றுவதற்கு வேக வேகமாக திட்டங்களை உருவாக்குகிறார்கள். அதற்காக NABARD மூலமாக வாங்குகிறோம்; HUDCO மூலமாக வாங்குகிறோம்; உலக வங்கி மூலமாக வாங்குகிறோம்; இது தவிர தமிழக அரசு நிதியாதாரங்களிலிருந்து திட்டங்களை நிறைவேற்று கிறோம். இவற்றையெல்லாம் மீறி அகில உலகத்திலே ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிற, அகில இந்தியாவிலும் ஏற்றுக்கொள்ளப் பட்டிருக்கிற B.O.T. திட்டம் மூலமாக தமிழகத்திலே சில பெரிய திட்டங்களை நிறைவேற்றலாம் என்று முடிவெடுத்து அந்த வகையில் முதன் முதலாக கோவை புறவழிச்சாலையையும் அதோடு இணைந் திருக்கிற ஆற்றுப் பாலமும் ஏறத்தாழ 90 கோடி ரூபாயிலிருந்து





100 கோடி ரூபாய்க்கு L&T நிறுவனத்திற்குக் கொடுக்கப்பட்டிருக் கிறது. ஆகவே இந்த கட்டமைப்பு வசதிகளை உருவாக்குகிற இந்த முயற்சியில் அரசு ஈடுபடுகிறபோது அரசுத் தரப்பிலே இருக்கிறவர் களுக்கு இணையாக எதிர்க்கட்சி வரிசையில் இருக்கிற உங்களுக்கும் கடமை இருக்கிறது என்ற வகையில் அரசுக்கு நீங்கள் ஒத்துழைப்பு தரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இந்தப் புறவழிச்சாலைத் திட்டம் கோயம்புத்தூருக்கு ஒரு பெரிய வரப்பிரசாதம், ஓர் அருமையான திட்டம். பல ஆண்டுகளாக முயற்சி செய்து வராமல் இருந்த திட்டம் 1997 ஆம் ஆண்டு நிறைவேறி இருக்கிறது. இந்த ஒப்பந்தம் போடுவதற்கு முன்பு இதில் முதலீடு செய்த L & T நிறுவனத்தினர் மத்திய அரசின் தரைவழிப் போக்குவரத்துத் துறையிடத்திலே பேச்சுவார்த்தை நடத்தினார்கள். ஏனென்றால் இது முழுக்க முழுக்க மத்திய அரசின் தரைவழிப் போக்குவரத்துத் துறையின் சார்பில் போடப்பட்ட ஒப்பந்தம்; அவர்கள் மூலமாக நிறைவேற்றப்படுகிற திட்டம். அதிலே தமிழக அரசிற்கும் ஒரு பங்கு. முத்தரப்பு ஒப்பந்தம். அதிலே நாமும் கையெழுத்து இட்டிருக்கிறோம்.

முற்பகல் *11-35*

இந்தத் திட்டம் முதன்முதலாக *3-10-1997*-ல் போடப்பட்டது. *3-12-1997*-ல் வேலை தொடங்கியது. ஆற்றுப் பாலத்தையும், இந்த புறவழிச் சாலைத் திட்டத்தோடு சேர்த்தால்தான் தங்களுக்கு அது வசதிப்படும்; அல்லது இலாபகரமாக இருக்கும்; அல்லது தாங்கள் போடுகிற முதலீட்டைக் குறிப்பிட்ட காலத்திலே பெறுவதற்கு வாய்ப்பு இருக்கும் என்று வலியுறுத்தப்பட்டு, மத்திய தரை வழிப் போக்குவரத்து அமைச்சகம் அதை ஏற்றுக்கொண்டு, அந்தப் பாலத்தையும் கட்டுவதற்கு அனுமதித்தார்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு. வி.கே. லட்சுமணன் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, அது குறுகிய பாலம். அந்த குறுகிய பாலத்தில் பல கிலோமீட்டர் தூரம் வரையில் வாகனங்கள் நின்று கொண்டிருந்தன: அது போக்குவரத்திற்கு இடைஞ்சலாக இருந்தது என்பதெல்லாம் நாம் அறிந்த உண்மை. அதையும் போக்க வேண்டும். அங்கே ஒரு பாலம் வேண்டுமென்ற கோரிக்கை, உக்கடம் பகுதியிலே இருக்கிற, கோவை நகரத்திலே இருக்கக்கூடிய மக்களிடத்திலே இருந்தது. அந்தக் கோரிக்கையையும் இதன் மூலமாக நிறைவேற்றிவிடலாம் என்று தமிழக அரசு கருதியது. L&T நிறுவனத்தினுடைய கோரிக்கையும், மத்திய தரை வழிப் போக்குவரத்துத் துறையால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இந்தத் திட்டத்திலே

அந்த ஆற்றுப் பாலமும் சேர்க்கப்பட்டது. ஓராண்டுக் காலத்திலே அந்தப் பாலம் கட்டி முடிக்கப்பட வேண்டும். புறவழிச் சாலை இரண்டு ஆண்டுக் காலத்திலே முடிக்கப்பட வேண்டும். எனவே குறிப்பிட்ட காலத்தில், ஓராண்டுக் காலத்தில் அந்தப் பாலத்தை அவர்கள் கட்டி முடித்து, ஒப்பந்தத்தின்படி கட்டணம் வசூலிக்கின்ற முயற்சியிலே ஈடுபடுகிறபோது, அந்தத் திறப்பு விழா நிகழ்ச்சியின்போதே, என்னிடத்திலே கோரிக்கை வைத்தார்கள். அன்றைக்கு தரை வழிப் போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்த மதிப்பிற்குரிய தம்பிதுரை அவர்கள், ஏனோ அந்த விழாவிலே கலந்து கொள்ளாமல் தவிர்த்துவிட்டார். என்னிடத்திலும் அந்த கோரிக்கை வைக்கப்பட்டது. நானும், நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு. வி.கே. லட்சுமணன் அவர்களும் அந்த விழாவிலே பங்கு கொண்டோம். நான் பேசுகிறபோதே சொன்னேன். இதைக் கருணையோடு நாங்கள் பரிசீலிக்கிறோம். முதலீடு போட்டிருக்கிற L&T நிறுவனமும், நாங்கள் எடுக்கிற முடிவிற்கு இசைந்து வரவேண்டும் என்று நான் அவர்களையும் கேட்டுக்கொண்டேன்.

அந்தத் திறப்பு விழாவிற்குப் பிறகு முதல் கூட்டம் நடைபெற்றது. அந்தக் கூட்டத்திலே மாண்புமிகு அமைச்சர் பொங்கலூர் பழனிசாமி அவர்களும் கலந்து கொண்டார்கள், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் கலந்து கொண்டார்கள். அதிலே நாங்கள் ஒரு முடிவு எடுத்தோம். Taxi-களுக்கு, Car-களுக்கு ஐந்து ரூபாய். Bus, Truck, Lorry-களுக்கு பதினைந்து ரூபாய்; ஒரு Trip-க்கு பதினைந்து ரூபாய் என்று ஒப்பந்தம். ஒரு தடவை போனால் பதினைந்து ரூபாய், திரும்பி வந்தால் பதினைந்து ரூபாய். ஆக, முப்பது ரூபாய் என்று ஒப்பந்தம் போட்டிருக்கிறார்கள். இங்கே வைக்கப்பட்ட கோரிக்கை என்னவென்றால், நாங்கள் அடிக்கடி மணல் எடுக்கப் போவோம்; ஜல்லி எடுக்கப் போவோம்; factory-க்கு போவோம்; ஒரு நாளைக்கு 3 தடவை, 4 தடவை, 5 தடவை போக வேண்டி வரும்; அதை நீங்கள் கொஞ்சம் பரிசீலியுங்கள் என்று சொன்னபோது நாங்கள் என்ன முடிவு எடுத்தோம் என்றால், இரண்டு தடவை போய்விட்டு வந்தாலே, கிட்டத்தட்ட முப்பதும், முப்பதும் அறுபது ரூபாய் ஆகும். ஆகையினால் எத்தனை தடவை வேண்டுமானாலும் போய்க்கொள்ளலாம்; ஒரு நாளைக்கு ஐம்பது ரூபாய்; அடிக்கடி போய் வருகின்ற வாகனங்களுக்கு ஐம்பது ரூபாய்; என்று முடிவெடுத்து, அந்த முடிவை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டோம்.





நம்முடைய தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துத் துறையின் சார்பிலும் இந்தக் கோரிக்கை வைக்கப்பட்டது. நகரப் பேருந்துகள் அடிக்கடி போய்விட்டு வருகின்றன. இது அதிகமான கட்டணமாக இருக்கிறது, அதைக் குறையுங்கள் என்று கேட்டார்கள். அவர்களுக்கும் இதே முடிவைச் சொன்னோம். அந்த முடிவை தமிழக அரசு ஏற்றுக்கொண்டு, ஒட்டுமொத்தமாக 7½ இலட்சம் ரூபாயைத் தமிழக அரசின் போக்கு வரத்துத் துறை, அந்த நிர்வாகத்திற்குக் கட்டிவிட்டது. அதற்குப் பிறகு, தனியார் பேருந்து உரிமையாளர்களும், அதை ஏற்றுக்கொள்கிற அளவிற்கு வந்தார்கள். ஆனால் லாரி உரிமையாளர்கள் மட்டும் அதை ஏற்றுக் கொள்ள மறுத்து, பேருந்து உரிமையாளர்களையும் சேர்த்துக்கொண்டு ஒரு போராட்டம் நடத்த வேண்டுமென்று முடிவெடுத்து, அந்தப் போராட்டத்திலே இறங்கினார்கள். அவர்களிடத்திலே, அதற்குப் பிறகு இரண்டு மூன்று முறை, எங்களுடைய நெடுஞ்சாலைத் துறைச் செயலாளர் அவர்கள், பேச்சுவார்த்தை நடத்தினார்கள். அவர்கள் ஒத்துக்கொள்ளவில்லை. அதற்குப் பிறகு அவர்கள் நீதிமன்றத்திற்கு போனார்கள்; நீதிமன்றத்திலே writ petition போட்டார்கள். அந்த writ petition மீது stay கேட்டார்கள்; கொடுக்கப்படவில்லை. மறுக்கப்பட்டு விட்டது. நீதிமன்றத்திலே என்ன தீர்ப்பு சொல்லப்பட்டிருக்கிறது என்றால், நீதிமன்றத் தீர்ப்பு வருகிற வரையில், இப்போது ஒப்பந்தப்படி அந்தக் கட்டணத்தைச் செலுத்தி விடவேண்டும். தீர்ப்பு வரும்போது இந்தக் கட்டணத்திலே ஏதாவது குறைவு ஏற்படுமானால், அந்தப் பணத்தை L&T நிறுவனம் லாரி உரிமையாளர்களுக்கோ, வாகன உரிமையாளர்களுக்கோ திருப்பிச் செலுத்திட வேண்டும் என்பதுதான். அந்த undertaking-ஐ L&T நிறுவனத்தினர் நீதிமன்றத்திலே கொடுத்திருக் கிறார்கள். ஆனால் இப்போது நீதிமன்றத்தினுடைய தீர்ப்பு, ஒப்பந்தப் படியான கட்டணத்தை லாரி உரிமையாளர்கள், பேருந்து உரிமையாளர் கள் செலுத்த வேண்டும் என்பதுதான். ஆகவே இந்தச் சூழ்நிலையில் நாங்கள் எடுத்த ஒரு நாளைக்கு 50 ரூபாய் என்ற முடிவைக்கூட செயல்படுத்த முடியாத ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே இந்தச் சூழ்நிலையில் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்களை நான் கேட்டுக்கொள்வேன். இந்தத் திட்டம் நல்ல திட்டம், இதுபோன்று இன்னும் பல திட்டங்கள் காத்திருக்கின்றன. பச்சைக்குப்பத்திலே ஒன்று வர இருக்கிறது. வாணியம்பாடியிலே ஒன்று வர இருக்கிறது. கரூருக்குப் பக்கத்தில் வாங்கல் என்ற இடத்தில் பாலம் கட்டுகின்ற திட்டம் வரவிருக்கிறது; கன்னியாகுமரி மாவட்டத்திலே குழித்துறையில் ஒரு பாலம் கட்ட வேண்டியிருக்கிறது. நாம் தமிழகத்திலே இப்படி நல்ல

சூழ்நிலையை உருவாக்கவில்லை என்றால், இப்படிப்பட்ட நல்ல திட்டங்கள் வருவதற்கு வாய்ப்பே இல்லாமல் போகும். தனி முதலீட்டாளர்கள் தமிழகத்திலே் முதலீடு செய்வதற்குத் தயக்கம் காட்டுவார்கள். குளச்சல் போன்ற துறைமுகத்திற்கு எல்லாம் 2500 கோடி ரூபாய் முதலீடு செய்வதற்கு மலேசிய அரசாங்கம் வருகை தருகிறபோது நாம் இப்படிப்பட்ட ஒத்துழைப்பைத் தரவில்லை என்றால் அது தமிழகத்திற்குப் பெருத்த நட்டத்தை ஏற்படுத்திவிடும் என்பதை நான் உங்களிடத்திலே மிகுந்த பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-40*

வேறு மாநிலங்களுக்குப் போகின்ற வாகனங்கள் எல்லாம் செலுத்திவிட்டுப் போகின்றன—இடைஞ்சல் ஏற்படுகிறது—என்று நீங்கள் எல்லாம் சொல்கிறீர்கள். கொஞ்சம் police protection கொடுத்து, கடுமையான நடவடிக்கை எடுத்தபோது, அங்கே கட்டணம் செலுத்த மறுக்கிறவர்கள் பிடிவாதம் செய்து கொண்டு, அந்த இடத்தை விட்டுப் போக மறுக்கிறார்கள். அப்படி மறுக்கின்ற காரணத்தால் ஒரு நாள், இரண்டு நாள் வரிசையாக வாகனங்கள் நின்றிருக்கின்றன. ஆனால் அவற்றை ஒழுங்குபடுத்திய பிறகு எந்த வாகனமும் நிற்கவில்லை. எந்தவிதமான இடைஞ்சலும் கிடையாது. போக்குவரத்து சுமுகமாக நடைபெறுகிறது. கோவையிலே இருக்கின்ற லாரி உரிமையாளர்கள் சங்கத்தினர் மட்டும்தான் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்துக் கொண்டிருக் கிறார்கள். அரசாங்கம் கடுமையான நடவடிக்கைகூட எடுக்கலாம். இருந்தாலும் நாங்கள் அப்படிப்பட்ட கடுமையான நடவடிக்கையை இன்னும் எடுக்கவில்லை. ஒட்டுமொத்தமாகப் பார்த்தால் அந்தப் பகுதியில் 598 வாகனங்கள்தான் ஒருநாளைக்குப் போகின்றன என்று நாங்கள் கணக்கு எடுத்திருக்கிறோம். இந்த 598 வாகனங்களிலேகூட முழுமையாக அந்தப் பாலத்தைப் பயன்படுத்துகிற வாகனங்கள் இல்லை. இந்த 598, 600 பேருக்காக இலட்சக்கணக்கான மக்களுடைய நலனுக்கான இந்தத் திட்டத்தை நாம் புறக்கணிப்பதோ அல்லது அந்தத் திட்டத்திற்கு முழு ஒத்துழைப்புக் கொடுக்காமல் தவிர்ப்பதோ எந்தவகையிலே நியாயம் என்பதை நான் மிகுந்த பணிவோடு கேட்டு, இதையும் தயவுசெய்து அரசியல் ஆக்க வேண்டாம்; இப்படிப்பட்ட திட்டத்தை அரசியல் ஆக்குவது தமிழகத்திற்கு, தமிழகத்தினுடைய முன்னேற்றத்திற்கு நல்லதல்ல என்பதை மட்டும் மிகுந்த பணிவோடு தெரிவித்து, இந்தப் புறவழிச்சாலை திறக்கப்பட்டுவிடுமானால் அந்த இடைஞ்சல்கூட இந்த ஆற்றுப் பாலத்திற்கு வராது. அந்தப் புறவழிச் சாலையும் முடிந்துவிட்டது.





இன்றேகூட அது திறப்பதற்குத் தயாராக இருக்கிறது. நீங்கள் எல்லாம் ஒத்துழைப்பு கொடுத்தால் விரைவிலே அந்தப் புறவழிச் சாலையையும் திறந்து விடுவதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது என்பதைப் பணிவோடு தெரிவித்து முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

## 4. கவன ஈர்ப்பு

### தென்காசி நகராட்சி குடிநீர் விஸ்தரிப்புத் திட்டம் தொடங்குவதில் தாமதம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, பேரவை விதி 55-ன்கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. ரவி அருணன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. கே. ரவி அருணன்.

**திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தென்காசி நகராட்சி குடிநீர் விஸ்தரிப்புத் திட்டத்திற்கு அரசு ஒப்புதல் அளித்து இரண்டு ஆண்டுகளுக்கு மேல் ஆகியும் இன்னும் திட்டப் பணிகள் தொடங்கப்படாமல் இருப்பது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

### அறிக்கை

தென்காசி நகராட்சி குடிநீர் அபிவிருத்தி திட்டத்திற்கு அரசாணை எண் 292, நாள் 23-9-1997-ல் ரூ.1066 இலட்சத்திற்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டது. அதன்பேரில் தாமிரபரணி ஆற்றில் நான்கு இடங்களில் நீர் உறிஞ்சு கிணறுகள் அமைக்கும் பணிக்கான ஒப்பந்தப்புள்ளி முடிவு செய்யப்பட்டு பணிகள் தொடங்கப்பட உள்ளது. இதர பணிகள் அனைத்திற்கும் ஒட்டுமொத்தமாக ஒரே ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு 26-11-1999 அன்று நடைபெறும் வாரியக் குழுக் கூட்டத்தில் வைக்கப்பட்டு முடிவு செய்யப்பட உள்ளது.

[1999 நவம்பர் 24

**திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்காசி நகராட்சிப் பகுதியில் கடந்த 25 ஆண்டுகளாக ஏற்பட்டு வருகிற கடுமையான குடிநீர்ப் பிரச்சினையைப் போக்குகிறவகையில் நாளைய மறுதினம் நடைபெறுகிற வாரியக் குழுக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டு பணிகள் தொடங்கப்படும் என்று இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். தென்காசி நகர மக்கள் சார்பாக அமைச்சர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். திட்ட அறிக்கையில் கூறியவாறு இரண்டு ஆண்டுகளுக்குள் அந்தத் திட்டப் பணிகளை முடித்து குடிநீர் வழங்குவதற்கும், பணிகளை விரைவுபடுத்துவதற்காக தென்காசி நகரிலே குடிநீர் வடிகால் வாரிய கோட்ட அலுவலகத்தை அமைப்பதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறியவிரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில் காலதாமதம் என்று குறிப்பிடுவதற்கு வழியே இல்லை. காரணம் மேலெழுந்தவாரியாக ஏற்கெனவே ஒரு தோராய மதிப்பீட்டின் அடிப்படையில், இதை வழங்கி விட்டோம். கொள்கை புதிதாக மாற்றப்பட்டதில் Detailed Estimate போட வேண்டுமென்று அறிவித்த காரணத்தால் சில மாதங்களும், குடிநீர்ப் பிரச்சினையில் அதிக கவனம் செலுத்தி, அது தரம் தாழாமல் இருக்க வேண்டும் என்பதற்காக எடுத்துக் கொண்ட முயற்சியாலும் தான் சற்றுக் காலதாமதம் ஆயிற்று. இருப்பினும், இதற்கான கூடுதல் விழுக்காடுகள் அதிகமாக, இந்த ஆரம்ப கால வேலைக்கே விழுக்காடுகள் அதிகமாக இருக்கிறது என்று கருதி அவர்களிடம் பேசி 9 விழுக்காடாக அதைக் குறைத்து 22-11-1999-ல்தான் ஒப்பந்தம் ஆகியிருக்கிறது.

திருநெல்வேலியில் நடைபெற்ற கூட்டத்தில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வருவார்கள் என்று எதிர்பார்த்தேன். அவர் ஏதோ தவிர்க்க முடியாத காரணத்தினால் வரவில்லை.

*முற்பகல் 11-45*

**திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்றையதினம் நான் சென்னையில் நடைபெற்ற அரசு உறுதிமொழிக் குழுவின் கூட்டத்தில் கலந்து கொண்டதால் வர இயலவில்லை.



1999 நவம்பர் 24]

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** வரவில்லை. இருந்தாலும் அதுகுறித்து அவர்களிடத்திலே சொல்லி, இன்னும் ஒரு வாரத்திற்குள் அதைச் செய்ய வேண்டுமென்று சொன்னதன் அடிப்படையில் அது நிறைவேற்றப்பட்டிருக்கிறது. விரைவாக அதை எடுத்துக்கொள்கிறோம்.

அடுத்து sub-division என்ற பிரச்சினையை நீண்ட நாட்களாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அது தேவைதானா என்பதைப் பரிசீலித்து, நிச்சயமாக அது தேவை என்று வந்தால் அதற்கு ஏற்பாடு செய்யப்படும். ஆனால் எல்லா இடங்களிலும் sub-division என்று கேட்பது, உயர்ந்த அதிகாரிகள் ஆவதற்கு, பதவி உயர்வு பெறுகின்ற பட்டியலிலே இடம் பெறுவதற்குத்தான் அது இலாபமாக இருக்குமே தவிர, திட்டப் பணிகளுக்கு உதவியாக இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. நியாயமாகத் தேவைப்பட்டால், அதைப் பரிசீலிக்கலாம்.

## 5. அறிக்கை அளித்தல்

### அரசு உறுதிமொழிக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, குழுக்களின் அறிக்கை அளித்தல். அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கையை அளித்தல். குழுவின் தலைவர் திரு. கே. ரவி அருணன்.

**திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின், 1999-2000ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் பத்தாவது அறிக்கையைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

## 6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)

### (அ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு, 1999

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, அரசினர் சட்டமுன்வடிவுகள் ஆய்வு செய்தல். 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 52/1999), மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

[1999 நவம்பர் 24

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*"1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 52/1999) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"*
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதிலே விவாதம் இல்லை.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2 மற்றும் இணைப்புப் பட்டியல், திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 மற்றும் இணைப்பு பட்டியல், சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)



1999 நவம்பர் 24] [பேரவைத் தலைவர்]

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*"1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 52/1999) நிறைவேற்றப் பெற வேண்டும்"*
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## 7. அறிவிப்புகள்

### (அ) தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்த) சட்டமுன்வடிவு, 1999 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவையில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

[1999 நவம்பர் 24

## 6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—தொடர்ச்சி

### (ஆ) தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1999

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்). 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 45/1999), மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 45/1999) @ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 4 வரை திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 4 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

---

@ 19-11-1999 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பட்டுள்ளது.





ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 45/1999) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

### (இ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஏழாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1999

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஏழாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 46/1999). மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

*முற்பகல் 11.50*

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1999ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஏழாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 46/1999) @ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து வருகின்ற சட்டமுன்வடிவும் 1999ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (எட்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 49/1999)—பொது விற்பனை வரியைப் பற்றியது என்பதால் கருத்துக்களைக் கூற விரும்பும் உறுப்பினர்கள் இரண்டு சட்டமுன்வடிவுகளைப் பற்றியும் கூறலாம். திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

***திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விற்பனை வரி சம்பந்தமாக ஏற்கெனவே சட்டம் இங்கு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது. இது சம்பந்தமாக சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். Fried Groundnut Kernel என்பது இதிலே சேர்க்கப்பட்டுள்ளது. Groundnut என்பது சாதாரண மக்கள் பயன்படுத்துகிற ஒன்று. அதற்கு விற்பனை வரி விதிப்பது சில சங்கடங்களை ஏற்படுத்தும். அதனாலே அதற்கு ஒரு விதிவிலக்கு கொடுக்க இயலுமா என்று இந்த நேரத்திலே நான் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

இதோடு இணைந்த பிரச்சினை என்ற முறையிலே, விற்பனை வரியை அமல்படுத்துவதைத் தொடர்ந்து இரப்பர் தொழில் கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கிறது. அந்தத் தொழிலிலே ஈடுபடுகின்றவர்களுக்கு—அதாவது உற்பத்தியாளர்களுக்கும், வியாபாரிகளுக்கும்—சில சலுகைகளை, விற்பனை வரி விதிப்பது சம்பந்தமாகக் கொடுக்க இயலுமா என்பதை அரசு பரிசீலிக்க வேண்டுமென்று பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று இன்னொரு விஷயத்தையும் நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். நம்முடைய மாநிலத்திலே, கன்னியாகுமரி மாவட்டத்தில் ஏராளமான முந்திரி ஆலைகள் இருக்கின்றன. அந்த முந்திரி ஆலைகளுக்குத் தேவையான கச்சா முந்திரிகளை அவர்கள் வெளியே இருந்து வாங்கிக் கொண்டுவந்து இங்கே பயன்படுத்துகிறார்கள். ஆனால்

@ 19-11-1999 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பட்டுள்ளது.





அதற்கும் விற்பனை வரி கட்ட வேண்டுமென்கின்ற நிலை ஏற்பட்டிருக்கின்றது. இதனால் அந்தத் தொழிலைக் கடுமையாக பாதிக்கும் நிலை வந்து, அந்தத் தொழிலே மூடப்பட்டுவிடும் ஆபத்துகூட வரும் என்கின்ற ஐயம் ஏற்படுகிறது. ஆகவே அதுகுறித்தும் அரசு பரிசீலிக்க வேண்டுமென்று பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக அரசினுடைய கவனத்திற்கு நான் ஒன்றைக் கொண்டு வருகிறேன். அதாவது நம்முடைய அரசுக்குத் தேவையான பொதுப் பணிகளை செய்யக்கூடிய ஒப்பந்தக்காரர்களும் விற்பனை வரி கட்ட வேண்டுமென்கின்ற உத்தரவு போடப்பட்டிருக்கிறது. அவர்களைப் பொறுத்தவரையில், அவர்கள் எந்தப் பொருளையும் வாங்கி விற்கவில்லை. இந்த அரசுக்குத் தேவையான வேலைகளைத்தான் அவர்கள் செய்து கொண்டிருக்கின்றார்கள். ஆகவே அவர்களுக்கு விற்பனை வரி போடப்படுவது சரிதானா என்றால் இல்லை. எனவே அது அனுதாபத்துடன் அரசு பரிசீலிக்க வேண்டிய ஒரு விஷயம். ஒப்பந்தக்காரர்கள் விற்பனை வரி செலுத்த வேண்டுமென்று சொல்கின்ற நேரத்திலே, அது நம்முடைய அரசு வேலைகளைப் பாதிக்கின்ற, துரத்தைப் பாதிக்கின்ற நிலையை ஏற்படுத்தும். எனவே ஒப்பந்தக் காரர்களுக்குப் போடப்படுகின்ற வரிக்கு விதிவிலக்கு கொடுக்க முடியுமா என்பதையும் அரசு பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டு அமைகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சிறு தொழில்களைப் பொறுத்தவரையில், கன்னியாகுமரி மாவட்டத்தில் எந்தவிதமான தொழிற்சாலைகளும் கிடையாது. Painting போன்ற சிறுதொழில்களை அங்கே குடிசைத் தொழில்களாக செய்து வருகின்றார்கள். அவர்களுக்கு, தொழிற்சாலைகளுக்கு உள்ளதுபோல 16 சதவிகிதம் வரி இருக்கிறது. பக்கத்து மாநிலங்களில் எல்லாம் 4 சதவிகிதம், 5 சதவிகிதம், 6 சதவிகிதம் என்ற அளவிலேதான் இத்தகைய சிறுதொழில்களுக்கு வரி இருக்கிறது. எனவே குடிசைத்தொழில் என்ற நோக்கத்தில், இத்தகைய சிறு தொழில் செய்யக்கூடியவர்களுக்கு அந்த வரியைக் குறைக்க வேண்டும்.

அதேபோல ஒப்பந்தக்காரர்கள் பற்றி திரு. ஹேமச்சந்திரன் அவர்கள் சொன்னது போன்று, அவர்கள் அரசாங்கத்தினுடைய இடத்தில், அரசாங்கத்தின் பணத்தில், அரசாங்கத்திற்காக வேலை செய்கின்றார்கள். ஏற்கெனவே பல இடங்களில் ஒப்பந்தக்காரர்கள் சரிவர வேலை

[திரு. சி. வேலாயுதன்] [1999 நவம்பர் 24

செய்யவில்லை என்ற புகார்கள்கூட இருக்கின்றன. இந்நிலையில் ஒப்பந்தக்காரர்களுக்கு விற்பனை வரி என்று வருகின்றபோது, அதிலே மேலும் தவறுகள் நடக்க வாய்ப்பு இருக்கின்றது. எனவே அந்த ஒப்பந்தக்காரர்களுக்கு விதிக்கப்பட்டிருக்கக்கூடிய 2 சதவிகித வரியைக் குறைக்க வேண்டுமாய் அன்போடு கேட்டு அமைகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

*முற்பகல் 11-55*

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே முன்மொழியப்பட்டிருக்கின்ற திருத்தம், ஏற்கெனவே பொது விற்பனை வரிச் சட்டத்தினுடைய B வரிசையிலே இடம்பெற்றிருக்கின்ற இனங்களுக்கு 11 சதவிகிதமாக இருந்த வரியை 4 சதவிகிதமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறைத்து அறிவித்தார்கள். அதற்கு இப்போது சட்டவடிவம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இது பொது விவாதம் அல்ல. எனவே மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்ன கருத்துகள் வணிக வரித் துறையினுடைய மானியக் கோரிக்கையின்போது பரிசீலிக்கப்பட வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் ஹேமச்சந்திரன் அவர்கள் குறிப்பிடும்போது, contractorகளுக்கெல்லாம் வரி போடலாமா என்றார்கள். அவர்களே வரி கொடுக்காவிட்டால் பிறகு யார் கொடுக்கப் போகிறார்கள். அவர்கள் இலட்சக்கணக்கான ரூபாய்க்கு, சில நேரங்களில் கோடிக்கணக்கான ரூபாய்க்குக்கூட—(குறுக்கீடு) விற்பனை வரியைதான் சொல்கிறேன். விற்பனை வரி வரும்போதுகூட—அவர்கள் பொருட்களை வாங்குகிறார்கள். அதெல்லாம் முறைப்படுத்தப்பட்டிருக்கிறது. அரசுக்கு வருமானம் ஈட்டித் தரும் துறையே விற்பனை வரித் துறைதான். எனவே ஏழை எளியவர்களுக்கு சிறிய தொழில்களுக்கு சலுகைகள் கொடுக்கப்பட வேண்டும் என்பது இயற்கை. அது அங்கீகரிக்கப்பட வேண்டிய உண்மை. அது கொள்கை ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மை ஆகும். அந்த அடிப்படையில் பொது விவாதத்தின்போது அவையெல்லாம் பரிசீலிக்கப்படும். இப்போது இந்தப் பிரச்சினையைப் பொறுத்தமட்டும்தான், அதாவது பருப்பு வகையான மாவு, அரிசி மாவு, வாசனைப் பொருட்கள் அல்லது கேழ்வரகு மாவு, வணிகச் சின்னமோ அல்லது வணிகச் சின்னம் அல்லாத விற்பனை செய்யப்படும் பொருட்களுக்கு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் முதல் அட்டவணைப் பிரிவு B-ல் வரிசை 60-ன்கீழ் வகை செய்யப்படாத பொருட்களாகக் கருதப்பட்டு 11 சதவிகிதம் விதிக்கப்பட்டு வந்ததை



1999 நவம்பர் 24] [திரு. ஆலடி அருணா]

4-ஆகக் குறைக்க முதலமைச்சர் அவர்கள் சட்டம் இயற்றினார்கள். அதற்கு இப்போது சட்டவடிவம் கொடுக்கிறோம். அதை இந்த அவை அங்கீகரிக்க வேண்டுமென்று பணிவன்போடு வேண்டுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஏழாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 46/1999) நிறைவேற்றப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

### (ஈ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (எட்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1999

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (எட்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 49/1999), மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (எட்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 49/1999), @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

@ 22-11-1999 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

[திரு. ஆலடி அருணா] [1999 நவம்பர் 24

"1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (எட்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 49/1999) நிறைவேற்றப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## 7. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (ஆ) தமிழ்நாடு தொழிலியல் துறைக்கான நோக்கங்களுக்காக நிலத்தைக் கையகப்படுத்துதல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1999 (ஆ.இ)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலியல் துறைக்கான நோக்கங்களுக்காக நிலத்தைக் கையகப்படுத்துதல் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 50/1999) பேரவையில் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## 6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—தொடர்ச்சி

### (உ) தமிழ்நாடு தொழிலியல் துறைக்கான நோக்கங்களுக்காக நிலத்தைக் கையகப்படுத்துதல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1999

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, அரசினர் சட்டமுன்வடிவுகள் ஆய்வு செய்தல். 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலியல் துறைக்கான நோக்கங்களுக்காக நிலத்தைக் கையகப்படுத்துதல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 50/1999). மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.



1999 நவம்பர் 24] [பேரவைத் துணைத் தலைவர்]

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலியல் துறைக்கான நோக்கங்களுக்காக நிலத்தைக் கையகப்படுத்துதல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 50/1999) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

நண்பகல் 12-00

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

---

@ 22-11-1999 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க.

(ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

(இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலியல் துறைக்கான நோக்கங்களுக்காக நிலத்தைக் கையகப்படுத்துதல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 50/1999) நிறைவேற்றப் பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க.

(ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

(இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.





**(ஊ) தமிழ்நாடு ஊராட்சிகள் (ஏழாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1999**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (ஏழாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 39/1999). மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே.

"1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (ஏழாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 39/1999), [a] ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்துவரும் 3 சட்டமுன்வடிவுகளும் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை தொடர்பானவை. எனவே கருத்துகளைக் கூற விரும்பும் உறுப்பினர்கள் மேற்படி 4 சட்டமுன்வடிவுகள் குறித்தும் தங்கள் கருத்துக்களைக் கூறலாம். திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசு பொறுப்பேற்றுக்கொண்டவுடன் உள்ளாட்சித் தேர்தலை நடத்தி முடித்து மூன்று ஆண்டுகளுக்கு மேலாகிறது. இங்கே மாண்புமிகு அமைச்சரவர்களால் முன்மொழியப்பட்டிருக்கிற சட்டத் திருத்தத்தின் மூலம் சேலம் மாவட்டத்தில் ஓர் ஒன்றியத் தேர்தலும், பிற மாவட்டங்கள் உள்ளிட்ட 11 ஊராட்சிகளுக்கான தேர்தல்களும் நடத்தப்படாமல் மேலும் காலத்தை நீட்டிப்பதற்கான, தேர்தல் நடத்துவதற்கு வாய்ப்பு இல்லாத சூழ்நிலை இருக்கிறது. அதற்கான காரணம் என்னவென்பதைப் பற்றிக்கூட விரிவாக விளக்கப்படவில்லை. தேர்தல் நடத்த முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது என்பது மொட்டையாக அறிவிக்கப்பட்டிருப்பது ஜனநாயக அணுகுமுறைக்குப் பொருத்தமாக இருக்காது என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். மேலும் தேர்தல் நடத்தாமல் காலத்தை

---

[a] 18-11-1999 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

[திரு. நா. பெரியசாமி] [1999 நவம்பர் 24

நீட்டிப்பதற்கான இந்தச் சட்டத் திருத்தத்தை வாபஸ் பெற்று, உடனடியாகத் தேர்தலை நடத்துவதற்கான ஏற்பாடுகளை அரசு செய்திட வேண்டுமென்று வலியுறுத்தி அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் திருத்தச் சட்டத்தின்மீது ஒருசில கருத்துகளை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதிலே 87-வது பிரிவிலே சொல்லப்பட்டிருக்கிற ஒரு விஷயத்தில் ஆங்கில 'copy'-யிலே Fallen Women என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் தமிழிலே அது நெறியிழந்த வழுக்கி விழுந்த மகளிர் என்று சொல்லப்பட்டிருக்கிறது. வழுக்கி விழுந்த மகளிர் என்ற வார்த்தைகள் இந்தச் சட்டத்தில் இடம் பெறுவது நல்லதல்ல. பாலியல் பலாத்காரத்திற்குப் பலியான மகளிர் என்றுதான் அதிலே வந்திருக்க வேண்டும். ஆனால், நெறிபிறழந்த, பிறழந்த என்பதில் எழுத்துப் பிழை இருக்கிறது. நெறியிழந்த, வழுக்கி விழுந்த மகளிர் என்று வந்திருக்கிறது. இது முறையானது அல்ல. அது ஆங்கிலத்திலே Fallen Women என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதற்குத் தமிழிலே இப்படி மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. எனவே அது பாலியல் பலாத்காரத்திற்குப் பலியான மகளிர் காப்பகம் என்ற முறையில் மாற்றப்பட வேண்டுமென்பதைத் திருத்தமாகத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏனென்றால் விபச்சாரம் என்பதே ஆண் ஆதிக்கச் சமுதாயத்தினுடைய அவமானகரமான, அருவருப்பான ஓர் அடையாளம். அதில் அத்தகைய பெண்களைப் பற்றிக் குறிப்பிடுகிறபோது சட்டத்தில், அதுவும் நம்முடைய மரியாதைக்குரிய தமிழ் ஆய்ந்த தமிழர் கலைஞர் அவர்கள் பொறுப்பேற்றிருக்கின்ற இந்த அமைச்சரவையில் இப்படி ஒரு சட்டம், இத்தகைய சொற்றொடர்களோடு வெளிவருவது நல்லதல்ல என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-05*

அடுத்து சொத்திலேயிருந்து விலக்கு அளிக்கப்படுவது குறித்து விவரம் சொல்லப்பட்டிருக்கிறது. அதிலே என்னவென்றால் கல்வி நோக்கத்திற்காகப் பயன்படும் கட்டடங்களுக்கு விலக்கு என்று சொல்லப்பட்டிருக்கின்றது. இந்த விலக்கை நான் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் எதிர்க்கிறேன். ஏனென்றால் கல்வி நோக்கம் என்பது



1999 நவம்பர் 24] [திரு. கே. சுப்பராயன்]

இப்போது commercial நோக்கமாகிவிட்டது. வணிக நோக்கமாகிவிட்ட இந்தக் கல்விக்கு விலக்கு அளிப்பது நல்லதல்ல. பலரும் கல்வி என்ற போர்டுகளை மாட்டிக்கொண்டு தப்பித்துக்கொள்வார்கள். எனவே கல்விக் காரியங்களுக்கு விலக்கு அளிப்பது கூடாது என்பதை நான் வலியுறுத்துகிறேன். இதை நான் முன்னரும் வலியுறுத்தினேன் என்பதை நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவார்கள். எனவே இப்போதும் அதை அனுமதிக்கக்கூடாது என்று வலியுறுத்துகிறேன்.

இன்னொரு விஷயம். இந்தச் சட்டத்தில் நாடாளுமன்றத்திற்கான, சட்டமன்றப் பேரவைக்கான அல்லது ஒரு நகராட்சிக்கான தேர்தல் ஒன்றில் விளம்பரக் கட்டணத்தை வசூலிப்பதற்கான முறை போடப்பட்டிருக்கிறபோது நாடாளுமன்றத்திற்கான, சட்டமன்றப் பேரவைக்கான அல்லது நகராட்சித் தேர்தல் ஒன்றின் விளம்பரத்திற்கான வரி விதிக்கக் கூடாது என்று விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. ஓர் அரசியல் கட்சியினுடைய பொதுக் கூட்டம் அல்லது ஓர் அரசியல் கட்சியினுடைய மாநாடு அல்லது வேறு வகைப்பட்ட விளம்பரங்களுக்கு வரி விதிக்கப்படுவதற்கு இது வாய்ப்பளிக்கிறது. எனவே இத்தகைய அரசியல் நடவடிக்கைகள் அல்லது பகுத்தறிவுக் கருத்துக்களைப் பிரச்சாரம் செய்கிற நடவடிக்கைகள்—இந்த மாதிரியான விஷயங்களுக்கெல்லாம் வரி விலக்களிக்கிற வாய்ப்பை இந்தச் சட்டப் பிரிவு வழங்கிடக் கூடாது என்பதால் அதை உரியபடி மாற்ற வேண்டும் என்றும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொரு விஷயத்தையும் குறிப்பிட விரும்புகிறேன். இந்தச் சட்டத்தில் 'பொது இடம் எதிலிருந்து அத்துமீறல் எதனையும் நீக்குவதற்கான அதிகாரம்' என்ற விஷயத்தில் எனக்குள்ள மாறுபட்ட கருத்துகளை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதை அமைச்சர் அவர்கள் அநேகமாக ஒப்புக்கொள்ள மாட்டார்கள் என்பது எனக்குத் தெரியும். இருந்தாலும் இந்த விஷயம் இங்கே சொல்லப்பட வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். அத்துமீறல் என்பதிலே எனக்கு மாறுபட்ட கருத்துகள் உண்டு. எது அத்துமீறல்? நகரங்களில் சாலை ஓரங்களிலே வியாபாரம் செய்கிறவர்கள் அத்துமீறல் செய்துவிட்டார்கள் என்பதை நான் ஒப்புக்கொள்ளவில்லை. ஏனென்றால் பிழைக்க வக்கற்றவர்கள், பிழைக்க வழி தேடித்தரவேண்டிய கடமை, பொறுப்புள்ள அரசால் வழிதேடித்தர இயலாத நிலையில் தாங்களே வழி தேடிக்கொள்கிறார்கள்.

[1999 நவம்பர் 24

* **மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வழி தேடிக்கொள்வதை அரசு தடுக்காது. வழிக்குத் தடையாக இருக்கிறார்கள். அதனாலேதான் அரசு அத்துமீறல் என்று சொல்கிறது. வழிக்குத் தடையாக இருக்கிற காரணத்தால் தாங்கள் பிழைக்கும் வழி தேடிக்கொள்ள மற்றவர்கள் வழியை அடைக்கக் கூடாது.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கருத்துகளில் நான் முரண்படவில்லை. நடைபாதைகளை மறித்து பிறருக்கு இடையூறாக அமைவதை நான் ஊக்குவிக்கவும் இல்லை. அதை சரி என்று வாதாடவும் இல்லை. அதுவும் நம் நாட்டைப் போன்ற வேலையில்லாத் திண்டாட்டம் அதிகம் உள்ள ஒரு நாட்டில், பல்லாயிரக்கணக்கான மக்கள் சுய வேலைவாய்ப்பினை தேடிக்கொள்கிற வகையில் பேருந்து நிலையங்களைச் சுற்றி அல்லது கடைவீதி, சாலை ஓரங்களில் செய்யும் வியாபாரத்தைத் தடுப்பதற்கு இது வரம்பற்ற அதிகாரத்தை வழங்கிவிடும். இது ஒரு மனிதாபிமானமற்ற ஆயுதமாக நகராட்சிக்கு வழங்கப்பட்டுவிடும். எனவே இத்தகைய ஆயுதத்தை வழங்குவதை நான் முழு வன்மையோடு எதிர்க்கிறேன். இத்தகைய ஷரத்து இடம்பெறக் கூடாது என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மேலும் ஒரு விஷயம் இங்கே சொல்லப்பட்டிருக்கிறது. 'அறிவிப்பு எதுவும் இன்றி அசையும் தற்காலிகக் கட்டுமான அமைப்பு, விற்பனை காட்சியரங்கு, சாவடி அல்லது கூவி அழைக்கக்கூடிய அல்லது வெளியில் வைத்து அல்லது காட்சிக்கு வைத்து விற்பனைக்காக வைக்கப்படும் பொருள் எதனையும் அல்லது நகராட்சி எல்லைக்குள்ளாக தெருவில் அல்லது பொது இடத்தில் அல்லது நகராட்சிக்கு அல்லது மைய மாநில அரசுத் துறைகளுக்குச் சொந்தமான நிலங்கள் எதிலும் அத்துமீறல் என்ற வகையில் உள்ள பிற பொருள்கள் எவற்றையும் அகற்றலாம்' என்று வருவது ஒரு வரம்பற்ற அதிகாரத்தை வழங்கிவிடுகிறது. இது கட்டாயமாக துஷ்பிரயோகம் செய்யப்படும்; சாமானியப்பட்ட அப்பாவிகள் பாதிக்கப்படுவார்கள் என்பதை நான் இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன். இது எதிர்காலத்தில் நடக்கப் போகிறது.

இன்னொரு விஷயம், 2-வது ஷரத்தில் சொல்லப்படுகிறது. 'நகராட்சி எல்லைக்குள் உள்ள தனியார் சொத்து அல்லது நிலம் அல்லது இடம் எதிலும், பொதுத் தெரு எதிலும் அல்லது நகராட்சிக்கோ அல்லது



1999 நவம்பர் 24] [திரு. கே. சுப்பராயன்]

மைய அல்லது மாநில அரசுத் துறைக்கோ சொந்தமான நிலம் எதிலும் ஆக்கிரமிப்பு செய்கிற எவரும் குற்றத்தீர்ப்பின் பேரில் ஒரு மாதத்திற்குக் குறையாமல், ஆனால் 3 ஆண்டுகள்வரை நீட்டிக்கலாகும் சிறைத் தண்டனை விதித்தும் 20,000 ரூபாய் வரை பண தண்டத்தை விதித்தும், தண்டிக்கப்படுதல் வேண்டும்' என்று வந்திருப்பதையும் நான் விலக்க வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். விஷயம் என்னவென்றால், மறுபடியும் நான் குறிப்பிட விரும்புவது, பிழைப்பு தேடுகிறவர்களை இது பாதிக்கும். வழிப்பறிக் கொள்ளைகள் இன்னபிற சமூக விரோதச் செயல்களை இந்த ஷரத்து ஊக்குவிக்கும் என்று நான் எடுத்துச்சொல்ல விரும்புகிறேன். பாதையோரங்களிலே வியாபாரம் செய்கின்றவர்களின் வியாபாரம் செய்கிற உரிமைகள் பறிக்கப்படுமானால், மறுக்கப்படுமானால் அவர்கள் வழிப்பறி செய்யப்போக அரசின் நடவடிக்கை தூண்டுவதாக அமைந்துவிடும் என்பதால் அத்தகைய தூண்டுதல் நடவடிக்கைகளைக் கைவிட இந்த ஷரத்துக்களை நீக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-10

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் திருத்தச் சட்டத்தின்மூலம், ஏற்கெனவே நாம் ஒரு தேர்தலை நடத்தி இன்னும் சில பகுதிகளில் தேர்தல் நடத்தப்படாமல் தள்ளி வைக்கின்ற நிலையை நீட்டக் கூடாது. எனவே அந்தப் பகுதிகளில் தேர்தலை நடத்துவதற்கான உரிய நடவடிக்கைகளை இந்தக் காலகட்டத்திலே ஏற்படுத்தியாக வேண்டும். அதன் மூலமாக நம்முடைய உள்ளாட்சி அமைப்புக்கள் ஜனநாயக வடிவம் பெற அல்லது ஜனநாயக முறையில் செயல்படுவதற்கு, அந்தப் பிராந்திய மக்களுக்கு இருக்கின்ற வாய்ப்பைப் பயன்படுத்தக்கூடிய வகையில் தேர்தலைத் துரிதமாக நடத்த வேண்டுமென்று என்னுடைய கருத்தை நான் இங்கே தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதேபோன்று இன்னொன்று என்னவென்று சொன்னால், கிராமப் பஞ்சாயத்துக்களிலே, குறிப்பாக துத்தூர் கிராமப் பஞ்சாயத்தினுடைய தலைவர் முறைகேடுகள் செய்ததன் காரணமாக, அவர்மீது நடவடிக்கை எடுத்ததோடு மட்டுமல்லாமல், அவரை அந்தப் பதவியிலேயிருந்து வெளியேற்றியிருக்கின்றார்கள். ஆனால் அவர் நீதிமன்றத்திலே சென்று தடையாணை வாங்கி பொறுப்புக்களை ஒப்படைக்காமல் இருக்கின்ற

ஒரு நிலை இருக்கின்றது. இவற்றைப் போக்கக்கூடிய வகையில், நம்முடைய சட்டங்களிலே சில மாறுதல்களை நாம் ஏற்படுத்த வேண்டிய ஒரு கட்டாய சூழ்நிலை இருக்கின்றது. மேலே இருக்கின்ற அதிகாரிகள் உரிய காலங்களில் இதைக் கண்காணிக்காததனுடைய விளைவுதான் இந்த நிலைக்கு இட்டுச் சென்றிருக்கிறது என்று நான் கருதுகின்றேன். அந்த அடிப்படையிலே நாம் இவைகளைப் பரிசிலிக்க வேண்டும்.

அதேபோல நகராட்சி சம்பந்தமான பிரச்சினை வருகின்றபோது, நகராட்சிகளையெல்லாம் ஒரே கணக்கில் வைத்துவிடக் கூடாது. வருமானம் குறைந்த நகராட்சிகள் இருக்கின்றன. வரி விளம்பரத்திலே என்ன வைத்திருக்கின்றார்கள் என்று சொன்னால், விளம்பரத்திற்காக அதிக நிதியை ஒதுக்குகின்றபோது அல்லது அதிகக் கட்டணம் செலுத்தவேண்டிய கட்டாயச் சூழ்நிலை வருகின்றபோது நஷ்டம் ஏற்படுகிறது. இப்போது ஓர் அனுபவம். குழித்துறை நகராட்சியிலே ஒரு வேளாண்மைப் பொருட்காட்சி நடத்தினார்கள். அதிலே விளம்பரப் பலகைக்காக அதிகப்படியான கட்டணம் விதித்த காரணத்தினாலே யாரும் விளம்பரம் செய்ய முன்வரவில்லை. இதனால் அந்த நகராட்சிக்கு 25,000 ரூபாய், 30,000 ரூபாய் அளவுக்கு நஷ்டம் வந்துவிட்டது. எனவே மாநகராட்சிக்கு ஒரு முறை இருக்கலாம்; நகராட்சிகளிலே நிலை 1, 2, 3 என்ற அடிப்படையில் பார்த்து இந்த விளம்பரக் கட்டணங்களை நாம் வைத்துக்கொள்வது நல்லது. அது நகராட்சிகளுக்கு வருமானத்தைத் தேடித் தரும். அந்த வகையிலே சீர்திருத்தங்களைச் செய்வது நல்லது என்ற கருத்தைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோன்று நகராட்சி எல்லையிலே பஞ்சாயத்து வந்துவிடுகின்றது. அந்தப் பஞ்சாயத்திலே ஒரு சினிமாக் கொட்டகை இருக்கின்றது. அதற்கு பஞ்சாயத்திலே இருந்து வருமானம் கிடையாது. நகராட்சி வழியாகத்தான் அதனுடைய வருமானம் முழுவதும் இருக்கிறது. இருந்தாலும் அதன்மூலம் வரும் வருமானம் முழுவதும் பஞ்சாயத்துக்குப் போய்விடுகின்றது. எனவே அந்த வருமானத்திலே ஒரு பகுதி நகராட்சிக்கு வரவேண்டிய கட்டாயம் இருக்கின்றது. அதற்கும் வழி வகுக்க வேண்டும். அதேபோன்று, கட்டடங்கள் பூராவிலுமே நகராட்சியினுடைய எல்லை வழியாகத்தான் உள்ளே நுழைய வேண்டிய ஒரு கட்டாயச் சூழ்நிலை இருக்கின்றது. அந்த வகையிலே நகராட்சிகளுக்கு வருமானத்தைப் பெருக்குகின்ற வகையில் இந்த இடத்தைப் பயன்படுத்துகின்ற காரணத்தினாலே நம்முடைய சட்டத்திலே சில மாறுதல்களை நாம் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டு முடித்துக்கொள்கிறேன்.





**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த நான்கு திருத்தங்களின் அடிப்படையிலும் இங்கே மூன்று உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். முதலாவதாகக் குறிப்பிட வேண்டிய கருத்து ஜனநாயக நாட்டில் இரண்டு கட்டமாக 2 நாளிலே தேர்தலை நடத்தியபின், நீண்ட நெடிய காலமாக இடைத் தேர்தலே நடத்தாமல் இருக்கிறீர்களே என்பது போன்ற ஒரு பிரச்சினையை இங்கே குறிப்பிட்டார்கள். குறிப்பாக 12 ஆயிரத்து சொச்சம் பஞ்சாயத்துக்களுக்கு இரண்டே நாளில் தேர்தல் நடத்தி முடித்த வரலாறு தமிழகத்தைத் தவிர இந்தியாவில் வேறு எங்கேயும் நடைபெறவில்லை (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நான் திட்டவட்டமாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் பெரியசாமி அவர்கள் குறிப்பிடும்போது ஏற்காட்டில் 9 பஞ்சாயத்துக்களுக்கும், மற்ற மாவட்டங்களில் 11 பஞ்சாயத்துக்களுக்கும் தேர்தல் நடைபெறாமல் இருக்கிறது என்று சொன்னார்கள். மொத்தத்தில் 11 ஊராட்சி மன்றங்கள்தான். ஏற்காட்டில், புதிய ஒன்றியமாக அமைத்து 9 சிற்றூராட்சிகளை அதற்குள் அடக்கி, அவற்றில் தேர்தல் நடத்துவதற்கான தயார் நிலையில் தற்போதிருக்கிறோம். அதுபற்றி தேர்தல் கமிஷனை கலந்து நான் ஆலோசித்தபோது அவர்களும் அதற்குத் தக்க அறிவுரைகளை வழங்கியிருக்கிறார்கள். ஏறத்தாழ பிப்ரவரி மாத இறுதிக்குள் தேர்தலை நடத்தலாம் என்று அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். இந்தச் சட்டத் திருத்தத்திலேகூட, 6 மாத காலத்திற்கு வரம்பு இருக்கிற காரணத்தால் அதைக் குறிப்பிட்டு, அதற்கு அடுத்தாற்போல் தேர்தல் வருமானால் அதுவரையில்தான் இந்தத் தனி அதிகாரிகள் நியமனம் நீடிக்கும் என்ற ஒரு ஷரத்தையும் குறிப்பிட்டிருக்கிறோம்.

பிற்பகல் 12-15

அடுத்து பாப்பாரப்பட்டி, இன்னும் ஒன்று, ஆக இரண்டு ஊராட்சிகள் மதுரை மாவட்டத்தில் இருக்கின்றன. ஏறத்தாழ ஆறு முறைக்கு மேல் இடைத் தேர்தல் நடத்தப்பட்டுவிட்டது. அதற்கிடையிலே ஆரம்பத்தில் ஏற்பட்ட காலியிடங்கள் இருபதே இருபது ஊராட்சிகளில்தான். 12,000 சொச்சம் ஊராட்சிகளில் 20 ஊராட்சிகளில் தேர்தல் நடைபெறாமல் விடுபட்டிருந்தது. அதற்குப் பிறகு இடைத் தேர்தல

[திரு. கோ.சி. மணி] [1999 நவம்பர் 24

நடத்தியபோது 18 ஊராட்சிகளுக்குத் தேர்தல் நடத்தப்பட்டுவிட்டது. இரண்டு ஊராட்சிகளில் வேட்பு மனுக்களே கொடுக்காமல் இருந்தால் அங்கே அரசாங்கம் எப்படி தேர்தல் நடத்தமுடியும்? இப்போதுகூட சொல்கிறேன். உறுப்பினர்கள் விருப்பம் தெரிவிப்பார்களேயானால், வருகிற டிசம்பர் மாதத்தில் தேர்தல் நடைபெறவிருக்கிறது. யாரையாவது வேட்பு மனு தாக்கல் செய்யச் சொல்லுவீர்களேயானால் அந்த வேட்பு மனுக்களை ஏற்று, அதற்குரிய நடவடிக்கை எடுத்து, அந்த இரண்டு இடங்களிலும் தேர்தலை முடித்துவிடலாம். அதிலே எங்களுக்கு எந்தவித மாறுபட்ட கருத்தும் இல்லை. அந்தத் தேர்தல் நடைபெறுகின்ற வரையில்தான் இந்தத் தனி அலுவலருடைய பதவிக் காலம் நீடிக்கும். அதற்குப் பிறகு அவற்றைப் பொறுத்தவரையில் நீடிக்காது.

அதற்குப் பிறகு ஒரு வார்த்தையைச் சொன்னார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட சட்டத் திருத்தம் மறுபடியும் வருகிறபோது அந்த வார்த்தையை நீக்கி, நல்ல வார்த்தையைச் சேர்த்துக்கொள்ளலாம் என்றும் தெரிவித்திருக்கிறார்கள். அதையும் செய்துகொள்ளலாம். அதாவது, வழுக்கி விழுந்த மகளிர் என்ற வார்த்தைகள். வழுக்கி விழுந்த மகளிர் என்ற வார்த்தையை நீக்குவது பற்றியது.

இன்னொரு கருத்தை அவர் Select Committee-யில் சொன்னார். இங்கேயும் வலியுறுத்துகிறார். ஆனால் பெருவாரியான உறுப்பினர்கள் கல்விச் சாலைகளுக்கு எது எப்படியிருந்தாலும் இந்த முறை வரியை நீக்குங்கள், வரியைப் போடாதீர்கள், பிறகு பரிசீலித்து, வேண்டுமானால் சட்டத் திருத்தம் கொண்டுவரலாம் என்று சொன்னதன் அடிப்படையில், பெருவாரியான உறுப்பினர்கள் கருத்து தெரிவித்ததன் அடிப்படையில் மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கலந்துகொண்டு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டத்தில் கல்வி நிலையங்களுக்கு சொத்து வரி விதிப்பிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டது. இந்தச் சட்டத் திருத்தத்தில் இதை மேலும் தெளிவாக்கி இருக்கிறோம்.

அதைவிட இன்னும் ஒரு படி மேலே போய் சாலையோரங்களில் கடைகளை வைத்திருப்பவர்கள், பிழைக்க வழியில்லாமல் இருப்பவர்கள், இவர்களை எல்லாம் நீக்குவதற்கு ஒரு கடுமையான எதேச்சதிகாரமான ஒரு வாய்ப்பைத் தருகிறீர்கள் என்று சொன்னார்கள். இதை வரையறுத்திருக்கிறோம். இது நீண்ட நெடியகாலமாக நகராட்சிகளில் இருக்கிறது. உயர் நீதிமன்றம்கூட இப்போது பல தீர்ப்புகளை வழங்கியிருக்கிறது. உள்ளபடியே சாலையோரங்களில் இப்போதும் கடைகள் நடத்தப்படுகின்றன. ஆனால்



1999 நவம்பர் 24] [திரு. கோ.சி. மணி]

சாலையோரங்களில் நடத்தப்படுகின்ற கடைகளினால், மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் அவர்கள் சொல்லியதன் அடிப்படையில் நானும் சொல்கிறேன் — பொதுமக்களுக்கு பாதிப்பு இல்லையென்றால் அந்தக் கடைகளை யாரும் அகற்றுவதில்லை. அதை, வருமானத்திற்குக்கூட உபயோகப்படுத்திக்கொள்கிறோம். இன்னும்கூட சொல்கிறேன். பெருவாரியான இடங்கள் இருக்குமானால், அதில் நகராட்சிகள், மாநகராட்சிகள் கடைகளைக் கூடக் கட்டி அவற்றை வியாபாரத்திற்காக அளித்துக்கொண்டிருக்கிறோம். ஆனால் எப்படிப்பட்ட நிலை உருவாகிறது என்றால், முதலில் 1/2 அடியிலே ஆரம்பித்து 60 அடிக்குப் போகிறார்கள். அப்போதுதான் ஆக்கிரமிப்பு என்ற நிலை வருகிறது. அப்போதுதான் அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்கிறது. இதுவரையில் இந்த இரண்டு ஆண்டுகளில் கிடைத்திருக்கிற தீர்ப்புகள் அத்தனையுமே இந்த மாதிரி ஆக்கிரமிப்புக்காரர்களை வெளியேற்ற வேண்டும், அது நியாயம்தான் என்று வந்துள்ளன.

சென்னை மாநகராட்சியைப் பொறுத்தவரையில், ஆக்கிரமிப்பைக் காலி செய்ய வேண்டும், அப்படி காலி செய்யவில்லை என்றால் சம்பந்தப்பட்ட நகராட்சி ஆணையரை வலியுறுத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று உயர் நீதிமன்றத்திலிருந்து ஒரு தீர்ப்பு வந்திருக்கிறது. நான் அதைத்தான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன் நிச்சயமாகச் சொல்கிறேன். ஏதோ பலாத்காரத்தை உபயோகப்படுத்துவதற்காகவோ அல்லது கடுமையாக, ஏழையெளிய மக்களுக்கு, வியாபாரிகளுக்குத் தொல்லை கொடுப்பதற்காகவோ இந்தத் திருத்தம் கொண்டுவரப்படவில்லை.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,.....

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** இருங்கள், என்னுடைய பேச்சை முடித்துவிடுகிறேன். ஏற்கெனவே இருக்கிற சட்டத்தையொட்டியும், இன்னும் பல கோளாறுகள் இருப்பதை நீக்கியும் நலல நிர்வாகம் நடத்துவதற்கும் நகராட்சிகளிலே, மாநகராட்சிகளிலே இருக்கிற இடையூறுகளைப் போக்குவதற்கும், சரி செய்வதற்கும்தான் இந்தத் திருத்தம் கொண்டுவரப்பட்டிருக்கிறதே தவிர எந்த அதிகாரத்தையும் அதிகரித்துக்கொண்டு யாருக்கும் கெடுதல் செய்வதற்கு வரவில்லை என்பதையும் மட்டும் தெரிவித்து, இந்தச் சட்டத் திருத்தங்களை நிறைவேற்றித் தருமாறு கேட்டு அமர்கிறேன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் சொன்ன கருத்திலே எனக்கு ஒன்றும் மாறுபட்ட கருத்தில்லை. ஆனால் சமூக வளர்ச்சிப் போக்கில், சில சில புதுப்புது வளர்ச்சிக் கட்டங்கள் ஏற்படுகின்றன. இப்போது தொழில் நகரங்களில், வெறும் moving-அதாவது, தள்ளுவண்டிகளிலே இட்லி, தோசை விற்றுப் பிழைக்கின்ற குடும்பங்கள் இருக்கின்றன. எங்கள் பகுதியிலேகூடப் பார்த்தால் கிட்டத்தட்ட 1,500, 2,000 குடும்பங்கள் அப்படியிருக்கின்றன. இவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். சட்டம் ஒழுங்கு பிரச்சினை என்ற வளையத்திற்குள் பாதிக்கப்படுகிறார்கள். இத்தகைய சட்டங்கள் அவர்களுக்கு வழங்கப்படுமானால்—அரசாங்கம் நேர்மையற்று இப்படிச் செய்கிறது என்று நான் சொல்லவில்லை—அதிகாரிகள் அப்படி நேர்மையற்று இயங்க, இந்த ஓட்டை வாய்ப்பளித்துவிடும் என்பதால்தான் மிகுந்த எச்சரிக்கையோடு நான் முன்கூட்டியே தெரிவிக்கிறேன். அப்படி பிழைப்பை தாங்களே தேடிக்கொள்கிற தள்ளுவண்டி பிழைப்பாளர்களுக்கு, சாலையோர பிழைப்பாளர்களுக்கு எந்த வகையிலும் பாதிப்பு ஏற்படாது என்பதை அரசு ஓர் உத்தரவாதமாகத் தெரிவிக்க வேண்டும் என்று நான் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-20*

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சங்கம் வைத்து இருப்பது, Letter pad அடித்திருப்பது, போராடுவது, இதையெல்லாம் பார்க்கிறபோது, 'நடைபாதைக் கடைக்காரர்கள்' என்றே இருக்கிறது. நடைபாதை என்று இருக்கும்போது, கடைக்காரர்கள் என்று எப்படி வருவார்கள்? கடை வைத்துவிட்ட பிறகு, அதில் நடைபாதை எப்படி இருக்கும்? அதை நடைபாதையாக எப்படி எடுத்துக்கொள்ள முடியும் என்று நான் தயவுசெய்து கேட்கிறேன், அவர் எனக்கு ஒரு விளக்கம் தரவேண்டும். அவர் என்னைக்கேட்கிறார். நான் அவரைக் கேட்கிறேன். நடைபாதை என்று இருக்கிறபோது, நடைபாதைக் கடைக்காரர்கள் என்றே அச்சடிக்கிறார்கள். கோரிக்கையே வருகிறது. ஆகவே நான் தயவு செய்து வேண்டிக்கேட்டுக்கொள்கிறேன். நிச்சயமாக யாராவது நியாயமற்று முறையற்று வெளியேற்றப்படுவார்களேயானால், ஆக்கிரமிப்புகள் இருக்குமேயானால், அரசு அதைப் பார்த்துக்கொண்டு இருக்காது. உங்களுக்கு இருக்கிற அக்கறை கலைஞர் அரசுக்கும் இருக்கிறது. ஆகையினால் நான் திரும்பச்





சொல்கிறேன். நடைபாதைக்கோ, சாலைகளுக்கோ எந்தவிதமான இடையூறும் இல்லாமல் இருந்தால் அதை ஒரு வணிகமாகக்கூட நகராட்சி மன்றங்கள் ஏற்கும் என்றுகூட வாக்குறுதியைத் தருகிறேன். அதிலே எந்தவிதமான அச்சமும் யாருக்கும் தேவையில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொன்ன கருத்தில் என்னுடைய கருத்து தவறானதாகப் பதியப்பட்டுவிடக்கூடாது என்பதற்காக நான் திருத்த முற்படுகிறேன். நான் நடைபாதைக் கடைகளை ஊக்குவிக்கவில்லை. முன்னரும் சொன்னேன், இப்போதும் சொல்கிறேன், நாளையும் சொல்வேன்; அதுபற்றியல்ல. நடைபாதைக் கடைகளை ஊக்குவிக்கவில்லை. ஒருவேளை நடைபாதைக் கடைகள் என்று அவர்கள் Letter pad அடித்திருக்கலாம். இல்லையென்றுகூட நான் சொல்லவில்லை. அது அவர்களுடைய சிற்றறிவின் எல்லைக்குள் விரிந்த விசாலமான நிலை தெரியாமல் தவறி விழுந்திருக்கலாம். எனவே அந்தத் தவறி விழுந்த இடத்தையே நாம் பிடித்துக்கொள்ளக் கூடாது. அப்படியில்லை. சாலையோரக் கடைகள்தான் நடைபாதைக் கடைகள் என்று வழக்கில் சொல்லப்படுகின்றனவே தவிர, தோற்றம் அதுவே தவிர, உள்ளடக்கம் அது அல்ல. எனவே அவர்கள்மீது முன்னரே பரிவு கொண்டுதான் முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள் என்பதையும் நான் அறிவேன். அவர்களுக்கு எதிராக இப்போது நீங்கள் செயல்படுகிறீர்கள் என்று நான் சொல்லவேயில்லை. ஆனால் எதிர்காலத்தில் செயல்பட்டுவிடுவார்கள் அதிகாரிகள். அதனால் அரசுக்கு black mark வந்துவிடும் என்பதால் நான் எச்சரிக்கையோடுதான் குறிப்பிட்டேனே தவிர, குற்றம் சொல்வதற்கு அல்ல.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** துணைத் தலைவர் அவர்களே, அதிகாரிகள் அவர்களுக்கு எதிராகச் செயல்படுகிறார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் அவர்கள் வருத்தப்படத் தேவையில்லை. அது தவறான தகவல். எங்களுக்குள்ள கவலையெல்லாம், அவர்களுடன் சேர்ந்துகொண்டு அதிகாரிகள் செயல்படுகிறார்களே என்பதுதானே தவிர வேறல்ல.

**டாக்டர் அ. செல்லக்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,.....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஏற்கெனவே இதிலே கருத்துக் கூற விரும்புகிற உறுப்பினர்கள் யாராவது பேச விரும்புகிறீர்களா என்று கேட்டேன். யாரும் பேசவில்லை. இந்தச் சட்டமுன்வடிவில பேசிய உறுப்பினர் விளக்கம் கேட்கிறார். இன்னும் நிறைய அலுவல்கள் இருக்கின்றன. நீங்கள் உட்காருங்கள்.

1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (ஏழாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 39/1999) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெறவேண்டும் என்னும் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 4 வரை. திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 4 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே.

"1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (ஏழாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 39/1999) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

### (ஏ) தமிழ்நாடு ஊராட்சிகள் (எட்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1999

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (எட்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 40/1999). மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

[1999 நவம்பர் 24

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (எட்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 40/1999)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 4 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 4 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

---

@18-11-1999 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



1999 நவம்பர் 24] [பேரவைத் துணைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (எட்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 40/1999) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

பிற்பகல் 12-25

### (ஏ) தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரிய (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1999

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரிய (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 41/1999), மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரிய (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 41/1999)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவு 2 திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

---

@18-11-1999 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரிய (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 41/1999) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

### (ஐ) தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1999

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 47/1999), மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 47/1999) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 36, வரை திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 36 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு-1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

---

@ 19-11-1999-ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 47/1999) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

### (ஏ) தமிழ்நாடு இந்து சமய அறநிலைக் கொடைகள் (தனி வகைமுறைகள்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1999

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறநிலைக் கொடைகள் (தனி வகைமுறைகள்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 51/1999), மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

[1999 நவம்பர் 24

***மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறநிலைக் கொடைகள் (தனி வகைமுறைகள்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 51/1999) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

@ 22-11-1999 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



1999 நவம்பர் 24] [பேரவைத் துணைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறநிலைக் கொடைகள் (தனி வகைமுறைகள்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 51/1999) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

**(ஓ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு, 1999**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 42/1999), மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

*பிற்பகல் 12-30*

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 42/1999) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து வரும் இரண்டு சட்டமுன்வடிவுகளும் கூட்டுறவுத் துறையைப் பற்றியது என்பதால் கருத்துகளைக் கூற விரும்பும் உறுப்பினர்கள் இந்த மூன்று சட்டமுன்வடிவுகள் மீதும் கூறலாம். திரு. ச. அழகிரி.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கங்களுடைய தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுடைய பதவி நீடிப்பு குறித்த இந்தச் சட்டமுன்வடிவை தமிழ் மாநில காங்கிரஸ் கட்சி கடுமையாக எதிர்க்கின்றது. காரணம், அதிகாரத்தைப் பரவலாக்குவது, Decentralisation of Power என்பதிலே அதிக நம்பிக்கையுடைய திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம் 3 ஆண்டுகள் முடிந்த பிறகு புதிதாக தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர்கள், தேர்ந்து எடுக்கப்படாமல் தடுக்கப்படுவதற்கான ஒரு சூழ்நிலையை இந்தச் சட்டம் உருவாக்கியிருக்கிறது என்று நாங்கள் கருதுகிறோம்.

அடுத்ததாக, மேதகு ஆளுநர் அவர்கள் சட்டமன்றத்தைக் கூட்டுவதற்காக 16-10-1999 அன்று கோப்பில் கையெழுத்திட்டிருக்கிறார்கள். சட்டமன்றத்தைக் கூட்டுவது என்று ஆளுநர் முடிவு செய்த பிறகு, ஓர் அவசரச் சட்டத்தை இந்தத் துறை கொண்டு வந்திருக்கிறது என்று சொன்னால், தமிழக அரசாங்கம் கொண்டு வந்திருக்கிறது என்று சொன்னால், இந்திய அரசமைப்புச் சட்டத்தையே அவமதிப்பதாகும் அல்லது மீறுவதாகும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கூர்மையான பார்வையிலிருந்து இது எப்படித் தப்பியது என்று எனக்குத் தெரியவில்லை. ஆளுநருக்கோ, குடியரசுத் தலைவருக்கோ

---

@ 18-11-1999 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.





சட்டமன்றத்தையும், நாடாளுமன்றத்தையும் கூட்டுவதற்கான அதிகாரம் இருக்கிறதேயொழிய, மன்றங்கள் கூட்டப்பட்ட பிறகு புதிய அவசரச் சட்டத்தைப் பிறப்பிப்பதற்கான மரபுகள் இல்லை என்பதை நான் அழுத்தமாக இங்கே கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். சட்டத்திற்குப் புறம்பாக அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிற இந்தச் சட்டமுன்வடிவை தமிழக அரசாங்கம் திரும்பப் பெற்றுக்கொள்வதே, அதனுடைய மரபுக்கும் மாண்புக்கும் சிறப்பாக அமையும் என்பதை மெத்தப் பணிவோடு நான் கூறிக்கொள்கிறேன்.

இதற்கான விளக்கங்களை அரசாங்கம் எப்படிச் சொன்னபோதிலும், தவறு தவறுதான் என்பதை முதலமைச்சர் ஏற்றுக் கொள்வார் என்பதிலே எனக்கு மிகுந்த நம்பிக்கை உண்டு. உலகம் தட்டையானது என்று 500 ஆண்டுகளுக்கு முன்பு உலகம் முழுவதும் ஒரு நம்பிக்கை இருந்தது. ஆனால் அப்போதிருந்த விஞ்ஞானி கலிலியோ அவர்கள் உலகம் உருண்டை என்று சொன்னார்கள். அப்படிச் சொன்னதற்காக அவர் அழைக்கப்பட்டு, மத குருமார்கள் மத்தியிலே, அவருக்குக் கையிலே நெருப்பு வைக்கப்பட்டு உலகம் உருண்டை அல்ல, தட்டை என்றுதான் நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று அவர் கடுமையாக விமர்சிக்கப்பட்டு, அந்த இடத்திலே அவர் ஒத்துக்கொண்டாலும்கூட, அதன் பிறகு வெளியிலே வந்து உலகம் உருண்டை என்று அவர் சொல்லிவிட்டுச் சென்றார். ஏனென்றால் உண்மை உண்மைதான்; தவறு தவறுதான்.

*பிற்பகல் 12-35*

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அழகிரி அவர்கள் இந்த உவமையைச் சொன்ன காரணத்தால் அவர் தொடங்கிய அந்தக் கருத்தைப் பற்றிய விளக்கம் சொல்ல வேண்டிய ஒரு நிலை எனக்கு ஏற்படுகிறது. சட்டமன்றம் கூடுவதற்கான நாள் அறிவிக்கப்பட்டது என்று சொன்ன காரணத்தால் சட்டமன்றம் கூடியது ஆகாது. சட்டமன்றம் என்றைக்குக் கூடுகிறதோ அன்றைய தினத்திலிருந்துதான் அமைச்சர்களோ, மற்றவர்களோ சட்டமன்றத்தில் அறிவிக்க வேண்டியதை வெளியிலே அறிவிக்கக்கூடாதே தவிர, 27 ஆம் தேதி சட்டமன்றம் கூடும் என்று 17 ஆம் தேதி அறிவிக்கை வருமானால், இடையிலே இருக்கிற 10 நாட்களில் அரசாங்கம் செயலற்று நின்றுவிட முடியாது. அந்த இடைக்காலத்திலே எப்படி அமைச்சர்கள் கொள்கையையோ, நடைமுறையையோ அறிவிக்கலாமோ, அதுபோல

[பேராசிரியர் க. அன்பழகன்] [1999 நவம்பர் 24

27-ஆம் தேதி சட்டமன்றம் கூடுகிற அந்த நாள் வரையிலும் அரசாங்கம் அவசியத் தேவைக்காக எந்த ஒரு Ordinance-ஐயும் வெளியிடலாம் என்பதுதான் நான் அறிந்திருக்கிற ஒரு மரபு.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மரபு மீறியது என்று உறுப்பினர் சொன்னீர்கள். ஏற்கெனவே, Governor summon கொடுத்த பிறகும்கூட இதுபோல Ordinance-கள் போடப்பட்டிருக்கின்றன. அதற்கான ஆதாரம் இருக்கிறது.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். நீங்கள் சொல்லக்கூடிய விளக்கங்கள் தவறுகளை மூடிமறைப்பதற்காக, தவறு செய்த அதிகாரிகளைக் காப்பாற்றுவதற்காக அல்லது மெத்தனமாகச் செயல்பட்ட துறையைப் பாதுகாப்பதற்காக அது அமையலாம்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாங்கள் கலிலியோ இடத்தில் இருக்கிறோம்; நீங்கள் பாதிரிமார் இடத்தில் இருக்கிறீர்கள்.

**HON. DEPUTY SPEAKER:** Constitution Chapter IV - Legislative Power of the Governor.

"213. Power of Governor to promulgate ordinances during recess of Legislature: If at any time except when the Legislative Assembly of a State is in session or where there is a Legislative Council in a State except when both Houses of the Legislature are in session, the Governor is satisfied that circumstances exist which render it necessary for him to take immediate action he may promulgate such Ordinances as the circumstances appear to him to require."

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீங்கள் சொல்லியிருக்கிற கருத்துகள் உங்களுக்கு வலிவினைச் சேர்க்கலாம். ஆனால் நடைமுறையிலே ஆளுநர் அவர்கள் சட்டமன்றத்தைக் கூட்டுவது என்று அறிவித்த பிறகு, நன்றாக செயல்படக்கூடிய எந்த அரசாங்கமும் புதிய அவசரச் சட்டத்தைப் பிறப்பிக்காது, பிறப்பித்தது இல்லை என்பதுதான் நான் சொல்கிற கருத்து.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை; நீங்கள் மரபு கிடையாது என்று சொன்னீர்கள், அதற்காகத்தான் நான் இவ்வளவையும் எடுத்துச் சொன்னேன்.



1999 நவம்பர் 24]

**திரு. ச. அழகிரி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எந்த அரசாங்கமாவது அதைச் செய்திருந்தால், மரபை மீறிய அரசாங்கமாக அவர்கள் இருந்திருப்பார்கள்.

**HON. DEPUTY SPEAKER:** It is not a convention. It is a rule.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** House in session என்பது அறிவிக்கப்பட்ட தேதியிலிருந்து அல்ல. எந்தத் தேதியில் கூடுகிறதோ அந்தத் தேதியிலிருந்து.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் எனது கருத்தை, என்னுடைய கட்சியின் கருத்தைத் தெரிவித்திருக்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதைத் தெளிவுபடுத்தி, இன்னும் நன்றாகத் தெளிவுபடுத்தி முரசொலியில் ஒரு கடிதம் எழுதினாலும்கூட எனக்குத் திருப்தியாக இருக்கும். எனக்கு அதிலே மாற்றுக் கருத்து கிடையாது. எங்களுக்குத் தேவையானது உண்மைதான். அந்த உண்மையை நான் உங்களிடமிருந்து எதிர்பார்க்கிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நண்பர் அழகிரி அவர்களுக்குத் தேவையானது உண்மை என்று சொல்கிறார். நாங்களும் அதை உணர்ந்திருக்கிறோம், அவருக்கு உண்மை தேவைப்படுகிறது என்பதை.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உண்மைதான். காரணம் உண்மையைப் பற்றி மிக அதிகமாக நாங்கள் தெரிந்து வைத்திருக்கின்ற காரணத்தால் மேலும் உண்மைகளை அறிந்துகொள்ள வேண்டுமென்று நாங்கள் விருப்பப்படுகிறோம். அதிலே எந்தத் தவறும் கிடையாது.

அடுத்து கூட்டுறவுச் சங்கங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுடைய பதவிக் காலத்தை நீட்டிக்கிற இந்த அவசரச் சட்டத்தை தமிழ் மாநில காங்கிரஸ் கடுமையாக எதிர்ப்பதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. மத்திய அரசாங்கம் 'ஒரு மாதிரி கூட்டுறவுச் சட்டத்தை, அறிமுகப்படுத்தியது. அந்த Model Act மிகவும் சிறப்பாக இருப்பதாக இந்தியாவினுடைய பல்வேறு மாநிலங்களிலே இருப்பவர்கள் சொல்கிறார்கள்; அது உண்மையும்கூட இந்தியாவிற்கே வழிகாட்டியாக விளங்கக்கூடிய தமிழகத்தில் அதைப்போன்ற 'மாதிரிச் சட்டத்தைக்' கொண்டு வந்து, அதன்மூலமாக தேர்தல் நடத்தி, ஒரு சிறந்த கூட்டுறவு

பாரம்பரியத்தை ஏன் தமிழகத்திலே நாம் உருவாக்கக்கூடாது என்பதுதான் என்னுடைய கேள்வி.

பிற்பகல் 12-40

இப்போது நம்முடைய கூட்டுறவுச் சங்கங்கள் எப்படி இயங்குகின்றன? உதாரணமாக, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி இருக்கிறது என்றால், அதிலே விவசாயிகள் உறுப்பினர்களாக இல்லை. கைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றன. ஆனால் கைத்தறியாளர்கள் அதிலே உறுப்பினர்களாக இல்லை. வீடு கட்டும் கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றன. ஆனால் வீடு கட்டுவதற்காக கடன் பெற்றவர்கள் அதிலே உறுப்பினர்களாக இல்லை. ஆனால் அந்த மாதிரி கூட்டுறவுச் சட்டத்திலே என்ன சொல்லியிருக்கிறார்கள் என்று சொன்னால், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி இருக்கிறது என்று சொன்னால், "நிலம் வைத்திருப்பவர்கள்தான் அதிலே உறுப்பினர்களாக இருக்க வேண்டும்; விவசாயம் செய்வதற்காக கடன் பெறுபவர்கள்தான் அதிலே உறுப்பினர்களாக இருக்க வேண்டும். பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் இருக்கிறது என்றால், மாடு வைத்திருப்பவர்கள்தான் அதிலே உறுப்பினர்களாக இருக்க வேண்டும். 160 நாட்கள் யார் பால் கறந்து சங்கங்களுக்கு வழங்கியிருக்கிறார்களோ அவர்கள்தான் உறுப்பினர்களாக இருக்க வேண்டும்" என்று தெளிவாகச் சொல்கிறது. ஆனால் நாம் என்ன செய்கிறோம்? திரையரங்குகளிலே யார் பணம் கொடுத்தாலும் டிக்கெட் கொடுக்கிறார்களோ, அதைப்போல தேர்தலுக்கு முதல் நாள், அல்லது 10 நாட்களுக்கு முன்பாக அமர்ந்து, சம்பந்தம் இல்லாதவர்களையெல்லாம் அதிலே உறுப்பினர்களாக ஆக்கி, அதன் மூலமாக கூட்டுறவுச் சங்கத் தேர்தலை நாம் நடத்துகிறோம். இதனுடைய விளைவு என்னவாகிறதென்றால் கூட்டுறவு நசுக்கப்படுகிறது. எனவேதான் நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்; ஒரு சட்டமன்ற உறுப்பினராக அல்ல, ஒரு அரசியல் கட்சியினுடைய பிரதிநிதியாக அல்ல, ஒரு கூட்டுறவாளர் என்கிற முறையிலே இந்தக் கூட்டுறவை அரசியலுக்கு அப்பாற்பட்டு அமைப்பதற்கு நீங்கள் உறுதி செய்ய வேண்டுமென்று நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக இப்போது இருக்கின்ற கூட்டுறவுச் சட்டத்திலே பதிவாளர் ஒரு பேரரசரைப் போல இருக்கிறார். பதிவாளருக்கு





இருக்கின்ற அதிகாரங்கள் வானளாவிய அதிகாரங்களாக இருக்கின்றன. தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனநாயக அமைப்பிலே ஓர் அதிகாரிக்கு அவ்வளவு அதிகாரங்களை நீங்கள் எப்படி வழங்கலாம்? ஆனால் Model Act-ல் அதைப்போன்ற அதிகாரங்கள் அவர்களுக்கு வழங்கப்படவில்லை. எனவே, அதற்காகவும் இந்தச் சட்டமுன்வடிவை நாங்கள் எதிர்க்கிறோம். இன்றைக்குப் பதவியை நீட்டிப்பதற்காக இந்தச் சட்டமுன்வடிவிலே அரசாங்கம் சொல்லியிருக்கிற காரணங்கள் எனக்கு வேடிக்கையாக இருக்கின்றன. காரணங்களைச் சொல்லும்போது நல்ல காரணங்களாக நீங்கள் சொல்லியிருக்கலாம். 199-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 30-ஆம் நாள் தேர்தல் நடைபெற்றது. சில கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்தவரையில் நீதிமன்றத்திலே பிரச்சினைகள் ஏற்பட்ட காரணத்தினால், 1997-ஆம் ஆண்டும், 1998 ஆம் ஆண்டும் தேர்தலை நடத்தினோம். அவர்களுக்கு மூன்று ஆண்டு காலம் முடியவில்லை; எனவே அவர்களுக்கு மூன்று ஆண்டு காலம் முடிய வேண்டும் என்பதற்காக இவர்களுக்குப் பதவி நீட்டிப்புத் தருகிறோம் என்று நீங்கள் காரணம் சொல்லியிருக்கிறீர்கள். தமிழகத்திலே ஒரு பழமொழி உண்டு 'தென்னை மரத்திலே தேள் கொட்டினால் பனை மரத்திற்கு நெறி ஏறுகிறது' என்று. 1996-ஆம் ஆண்டிலே தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு மூன்று ஆண்டுகள் முடிந்த பிறகும்கூட, 1998-ஆம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு மூன்று ஆண்டுகள் ஆகவில்லை என்பதற்காக அவர்களுக்கும் சேர்த்து பதவி நீட்டிப்புத் தருகிறோம் என்று சொல்வது பொருத்தமாக இல்லை என்பதை நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். சரி, விவாதத்திற்கு இதை ஏற்றுக்கொண்டால்கூட, 2001-லே நீங்கள் மீண்டும் தேர்தலைக் கொண்டு வருகிறீர்கள். அப்போதும் 100 கூட்டுறவுச் சங்கங்களுக்கு நீதிமன்றத்திலே தடையாணை பெறுகிறார்கள். எனவே, அவர்களுக்கும் பதவி நீட்டிப்புத் தர வேண்டும், அவர்களுக்கு மூன்று ஆண்டு காலம் போதாது என்கிற ஒரு நிலை வந்தால் 2001-லேயும் தேர்தலை நாம் நடத்தமாட்டோமா? அப்போதும் தேர்தல்களுக்குத் தடை விதிக்கப்படுமா? இவர்களுக்கே மீண்டும் அந்தப் பதவி வழங்கப்படுமா? எனவே அது பொருத்தமாக' இல்லை என்பதை மாண்புமிகு முதலமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். நீங்கள் சொல்லியிருக்கிற நோக்கங்கள்கூட நேர்மையானதாக இல்லை என்கிற காரணத்தால் அதற்காகக்கூட இந்தச் சட்டமுன்வடிவை நீங்கள் திரும்பப்பெற வேண்டும் என்பது எங்களுடைய கருத்து.

அடுத்ததாக தேர்தலைக் குறித்த நேரத்தில் நடத்த வேண்டும். 1967-க்குப் பிறகு கூட்டுறவுச் சங்கத் தேர்தல்கள் முறையாக நடத்தப்படவில்லை. குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் அந்தத் தேர்தல்கள் நடத்தப்பட்டதாக சரித்திரமே கிடையாது. பெருந்தலைவர் காமராஜருடைய ஆட்சிக் காலத்திலே கூட்டுறவுச் சங்கங்களுடைய தேர்தல்கள் முறையாக நடத்தப்பட்டு இருக்கின்றன. ஆனால் 1967-க்குப் பிறகு பல நேரங்களிலே நீங்கள் காலம் கடந்துதான் அந்தத் தேர்தல்களை நடத்தியிருக்கிறீர்கள். அதற்குக் காரணம் கட்சி சார்புடைய அரசியல்தான். கூட்டுறவுச் சங்கத்திலே அரசியலைப் புகுத்த வேண்டும் என்பதற்காக, கூட்டுறவாளர்களுடைய இடத்தை அரசியல்வாதிகளைக் கொண்டு நிரப்ப வேண்டும் என்பதற்காக அந்தச் சங்கங்களுக்கு முறையான தேர்தல்களை நடத்தவில்லை என்பதுதான் என்னுடைய கருத்து. (குறுக்கீடு) கனகசபை பிள்ளை காங்கிரஸ்காரர். எங்களுக்கு அதிலே மாற்றுக் கருத்து இல்லை. (குறுக்கீடு) முதலமைச்சர் சொல்வது சரிதான். நான் சொல்கிற கருத்து, காங்கிரஸ்காரர்களை நீங்கள் விடவில்லை என்பதல்ல; கூட்டுறவாளர்களை நீங்கள் விடவில்லை என்பதுதான் என்னுடைய கருத்து. முறையான தேர்தலை, காலம் முடிந்தவுடன் நீங்கள் நடத்துவீர்களேயானால் இந்தச் சிரமம் ஏற்படாது. (குறுக்கீடு) எல்லோரும்தான் நிலச்சுவான்தார்கள்; யார் இப்போது நிலச்சுவான்தார்கள் இல்லை? இப்போது உங்களுக்கு இருக்கிற செல்வம் அவருக்குக் கிடையாது. கனகசபை பிள்ளை நம்முடைய திரு. வீரபாண்டி ஆறுமுகத்தைவிட ஏழ்மையானவர்தான். எனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தத் தேர்தல்களை குறித்த நேரத்திலே.....

*பிற்பகல் 12-45*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பெ.சு. திருவேங்கடம்.

**திரு. பெ.சு. திருவேங்கடம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1967-க்கு முன் கூட்டுறவுத் தேர்தல்கள், இப்போது நடைபெறுவதுபோன்று தமிழகம் பூராவும் ஒரே நேரத்தில், தேர்தல் ஆணையர் நியமிக்கப்பட்டு, நடத்தப்பட்டதா என்பதை உறுப்பினர் அவர்கள் தெரிவிக்க வேண்டுமென்று நான் விரும்புகின்றேன்.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் சொல்வது ஒரு கூட்டுறவு அமைப்பிற்கு, அதற்குரிய காலம் முடிந்தவுடன் காங்கிரஸ் காலத்தில் 1967-க்கு முன்பு, தேர்தல் அறிவிக்கப்பட்டு நடைபெற்று இருக்கிறது; தனி அதிகாரிகள் நியமிக்கப்படவில்லை; அல்லது தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கே பதவி





நீட்டிப்பு தரவில்லை; எல்லாம் முறையாக நடைபெற்று இருக்கிறது என்பதுதான் என்னுடைய வாதம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பெ.சு. திருவேங்கடம்.

**திரு. பெ.சு. திருவேங்கடம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எல்லா இயக்குநர்களுக்குமே இதுபோன்று தேர்தல் நடைபெறுவதில்லை. ஒவ்வொரு ஆண்டும் தேர்தல் நடைபெறும். 9 பேர் இருக்கிறார்கள் என்றால், இந்த ஆண்டுக்கு 3 பேர்; அடுத்த ஆண்டுக்கு 3 பேர்; அடுத்த ஆண்டுக்கு 3 பேர் என்று அந்தச் சங்கத்தில் இருக்கிற தலைவரே ஒரு இயக்குநரை தேர்தல் அதிகாரியாகப்போட்டு, அதைப் புத்தகத்தில் எழுதிக் கொள்வார்கள். 1969-ல் தி.மு.க. ஆட்சிக்கு வந்த பிறகுதான் தேர்தலை, ஊராட்சித் தேர்தல் போன்று முறைப்படுத்தி தேர்தல் நடத்தப்பட்டது என்பதை நான் இங்கே மெத்தப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் சொல்வது ஒரு கருத்து; உறுப்பினர் அவர்கள் சொல்வது ஒரு கருத்து; அவர்கள் சொல்கிற கருத்தை நான் மறுக்கவில்லை. ஆனால் என்னுடைய கருத்தை மறுக்கிற மாதிரி உங்களால் ஒரு சத்தான பதிலைச் சொல்ல முடியவில்லை.....

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அழகிரி அவர்களுடைய கருத்தை அல்லது அவர் சொன்ன தகவலை மறுத்துத்தான் திருவேங்கடம் அவர்கள் ஒரு கருத்தைச் சொல்லி இருக்கிறார்கள்; ஒரு தகவலைச் சொல்லி இருக்கிறார்கள். இது கருத்துப் போராட்டம்கூட அல்ல. தகவல் தவறானது என்ற ஒரு நிலை, விளக்கத்தைத் தவிர வேறல்ல. இன்னும் ஒன்று சொன்னார்கள். ஏதோ கட்சிக்காரர்களைத் தலைவர்களாக ஆக்குவதற்காக, நாங்கள் இம்மாதிரியான செயல்களில் ஈடுபடுகிறோம், அல்லது ஈடுபட்டோம் என்று சொன்னார்கள். கொஞ்சம் நம்முடைய நினைவைப் பின்னோக்கித் திருப்ப வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) வி.கே. ராமசாமி முதலியார், என்.எஸ். ராமலிங்கம், பக்தவச்சல நாயுடு, திருநெல்வேலியிலே வீரபாகு, சேலத்திலே சுப்பிரமணிய கவுண்டர்—இப்படி ஒவ்வொரு மாவட்டத்தை எடுத்துக்கொண்டால்—அவர்கள் யாரும் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் அல்ல; திராவிட இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் அல்ல; எல்லோரும் பெரிய காங்கிரஸ்காரர்கள் என்பதை மறந்துவிடக் கூடாது.

[1999 நவம்பர் 24

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆண்டுதோறும் நவம்பர் மாதம் 14 ஆம் தேதி கூட்டுறவு வார விழா நடத்தப்படுவது வழக்கம். அன்றைக்கு ஜவஹர்லால் நேருவினுடைய பிறந்த நாள். நேரு அவர்கள் இந்தியாவினுடைய மிகச் சிறந்த கூட்டுறவாளர் என்கிற காரணத்தினால், அவருடைய பிறந்த நாளில் கூட்டுறவு வார விழாவை இதுவரை நாம் நடத்தி வந்திருக்கிறோம். சென்ற ஆண்டுகூட திராவிட முன்னேற்றக் கழக அரசு நவம்பர் 14 ஆம் தேதி அதை நடத்தியது. ஆனால் நேருவினுடைய பெயரை வைத்து இருக்கிற நம்முடைய மாண்புமிகு அமைச்சர் நேரு அவர்கள் பொறுப்பு ஏற்றிருக்கிற அந்தத் துறை இந்த ஆண்டு நவம்பர் 14 ஆம் தேதி கூட்டுறவு வார விழாவை நடத்தவில்லை. அதற்கான காரணம் என்ன என்று எனக்குத் தெரியவில்லை. அதனை துறையைச் சார்ந்தவர்கள் விளக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்தச் சட்டமுன்வடிவை நாங்கள் எதிர்ப்பதன் மூலமாக எங்களுக்கும் சிரமங்கள் இருக்கின்றன; எங்களுடைய கட்சிக்காரர்களும் பாதிக்கப்படுகிறார்கள். ஆனாலும் நாங்கள் வெறுமனே கட்சி நோக்கத்தோடு மட்டுமே இதைப் பார்க்கவில்லை. இன்றைக்கு 3 இலட்சம் கூட்டுறவாளர்கள் தமிழகத்திலே இருக்கிறார்கள். அப்படிப் பார்க்கிறபொழுது, ஏறக்குறைய 32 ஆயிரம் பேர் தமிழ் மாநில காங்கிரஸைச் சார்ந்தவர்கள் கூட்டுறவிலே இடம் பெற்றிருக்கிறார்கள். நாங்கள் இந்தக் கோரிக்கையை வலுவாக வைப்பதன் மூலமாக, நீங்கள் மறு தேர்தல் நடத்துகிற வரை எங்களுடைய உறுப்பினர்கள் பதவிக் காலத்தை இழக்கக் கூடும். தோழர் ரங்கநாதன் போன்ற மாணிக்கப் பரல்கள் எல்லாம், பதவி இழக்கின்ற சூழ்நிலைகூட ஏற்படக்கூடும்; எங்களுக்கு அது புரிகிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதை உடைத்துப் பார்த்தீர்களா?

**திரு. ச. அழகிரி:** மாணிக்கத்தை உடைத்துப் பார்த்துத்தான் மாணிக்கம் என்று சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. மாணிக்கத்தை உரசிப் பார்த்தாலே தெரியும், அது மாணிக்கம் என்று.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, இல்லை; கால் சிலம்பை உடைத்துப் பார்த்தீர்களா என்று கேட்டேன்.



1999 நவம்பர் 24]

பிற்பகல் 12-50

**திரு. ச. அழகிரி:** ஆனாலும்கூட அறுவடையின்போது சில நெல் மணிகள் சிதறவே செய்யும் என்பதனை உணர்ந்திருக்கிற காரணத்தால் அறுவடையை வேண்டாமென்று சொல்லிவிட முடியாது. எனவே, இவற்றை எல்லாம் உணர்ந்துதான் இந்தக் கூட்டுறவுச் சட்ட முன்வடிவினை...

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** என்னுடைய அருமை நண்பர் அழகிரி அவர்களிடமிருந்து நான் ஒரு தகவல் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். எனக்கு வந்த செய்தி, நேற்றே தலைவர் சொல்லிவிட்டார். எதிர்க்கட்சித் தலைவர் கடுமையாக எதிர்ப்போம் என்று சொல்லியிருக்கிறார். அதற்கு என்ன பொருள் என்று தெரியும். அது வெளி நடப்பு. கட்டாயம் அதைச் செய்வீர்கள். அதோடு விட்டுவிடுவீர்களா? அல்லது இதை எதிர்ப்பதில் இருக்கின்ற அந்த அக்கறை காரணமாக, அதன் அடையாளமாக இருக்கின்ற உறுப்பினர்களெல்லாம், ஜனநாயகமற்ற முறையிலே இந்தக் கூட்டுறவு இயக்கம் இருக்கிற காரணத்தால், எங்கள் உறுப்பினர்கள் யாரும் இதிலே பங்கு வகிக்க மாட்டார்கள். அவர்களெல்லாம் இராஜினாமா செய்து விடுவார்கள் என்ற ஒரு முடிவை எடுப்பீர்களா? தயவுசெய்து அப்படி ஒரு முடிவை எடுத்துவிட வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் விருப்பப்பட்டால்கூட நாங்கள் அந்த முடிவை எடுக்க மாட்டோம். (சிரிப்பு) காரணம் என்னவென்றால் ஒரு கருத்தைச் சொல்வது என்பது உங்களைத் திருத்த வேண்டுமென்பதற்காகத்தான்; நீங்கள் எங்களுடைய பாதையைப் பின்பற்ற வேண்டுமென்பதற்காகத்தான்; நீங்கள் வேறு இடத்திலே இருக்கிறீர்கள், அங்கிருந்து நீங்கள் திரும்பி வர வேண்டுமென்பதற்காகத்தான்; உங்களுடைய சிந்தனையிலே ஒரு மாற்றம் வர வேண்டுமென்பதற்காகத்தான் நாங்கள் சொல்கிறோமே ஒழிய, அரசாங்கம் ஏற்றுக்கொண்டால் நாங்களும் ஏற்றுக்கொள்கிறோம். அதிலே எங்களுக்கு மாற்றுக் கருத்து இல்லை. ஒரு பழமொழி சொல்வார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இன்னும் 4 பேர் பேச வேண்டும்.

**திரு. ச. அழகிரி:** படிப்பது இராமாயணம், இடிப்பது பெருமாள் கோயில் என்று சொல்வார்கள். சாமானியர்களை அரசியலிலே தூக்கிவிட வேண்டுமென்பதற்காக ஆரம்பிக்கப்பட்ட இயக்கம்தான் திராவிட முன்னேற்றக் கழகம். அதிலே நீங்கள் பெருமளவு வெற்றி பெற்றீர்கள் என்பதிலே எங்களுக்கு மாற்றுக் கருத்து கிடையாது. இப்போது கூட்டுறவாளர்களாகக்கூட, நிறைய பேர் வந்திருக்கிறார்கள். ஆனால் அவர்களே திரும்ப அந்த அதிகார மையத்திலே இருக்க வேண்டுமென்பதற்காக, கூட்டுறவினுடைய தாத்பரியத்தை நீங்கள் தகர்த்துவிடக் கூடாது என்பதற்காகத்தான் நாங்கள் சொல்கிறோம். ஒருவரே திரும்பத் திரும்ப—மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டால் பிரச்சினை அல்ல; ஆனால் அவர்களே—அதிகாரத்திலே அவசரச் சட்டத்தின் மூலமாகவே இருப்பார்களேயானால் ஜனநாயகம் புரையோடிப் போய்விடும் என்பது எங்களுடைய கருத்து.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மன்னிக்க வேண்டும். துணைத் தலைவர் அவர்களே, Apex Society-கள் அதிலேயிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்தான் மாவட்ட அளவில், மாநில அளவிலே இருக்கின்ற கூட்டுறவு அமைப்புகளிலே இப்போது இடம் பெற்றிருக்கிறார்கள்; தலைவர்களாக, உறுப்பினர்களாக இருக்கின்றார்கள். நாம் கீழேயுள்ள, அடித்தட்டு சங்கங்களையெல்லாம் கலைத்துவிட்டால், ஓராண்டிற்கு முன்பு வந்த அந்தத் தலைவர்கள், மாவட்ட, மாநில அளவிலே உள்ளவர்கள் எல்லாம், இந்த சங்கங்களினுடைய பிரதிநிதிகள் இல்லாமல் இயங்க முடியாது. எனவேதான் மொத்தத்திலே இவர்களும் 2 ஆண்டுக் காலம் புதிதாக நீட்டிப்புப் பெற்று, எல்லோரும் மூன்று ஆண்டுக் காலம் பதவி வகிக்கலாம் என்கின்ற ஒரு முடிவை எடுத்து இருக்கின்றோம். இதற்கு என்ன அடிப்படைக் காரணம் என்றால் ஆரம்பத்திலேயே கூட்டுறவுத் தேர்தல், கடந்த பல ஆண்டு காலமாக நடைபெறாமல் இருந்து, இந்த ஆட்சி வந்த பிறகு, 1996-க்குப் பிறகு நடந்த காரணத்தினாலேதான் இந்த இடர்ப்பாடு ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் விளக்க விரும்புகின்றேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,.............

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உங்களுக்கு யாராவது அனுமதி கொடுத்தார்களா? உட்காருங்கள், திரு. அழகிரி பேசட்டும்.



(குறுக்கீடு) எல்லாம் நீங்களே பேசிக் கொண்டிருந்தால் எப்படி? இன்னும் 3, 4 உறுப்பினர்கள் பேச வேண்டும். (குறுக்கீடு)

**திரு. சி. ஞானசேகரன்:** Point of Order....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** On a point of clarification என்று சொல்லுங்கள். Point of order என்றால் எப்படி?

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூறுகிறபோது, Apex Society-களுக்கு எல்லாம் வந்திருப்பவர்கள் இப்போதுதான் வந்திருக்கிறார்கள், அவர்கள் வந்து 2 ஆண்டு காலம்கூட ஆகவில்லை, உடனடியாக பதவியை முடிப்பது எப்படி என்று கூறினார்கள். நாம் தேர்தல்களிலே சில வரையறைகளை வைத்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர்கள் ஹேமச்சந்திரன் அவர்களும், விஸ்வநாதன் அவர்களும் இப்போதுதான் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருக்கிறார்கள். ஆனால் அவர்கள் 1½ ஆண்டுதான் இருக்கப் போகிறார்கள். இவர்கள் 1½ ஆண்டுகள்தான் இருக்கப் போகிறார்கள் என்பதற்காக நாம் பதவி நீட்டிப்பு கொடுக்க முடியாது. ஓரளவிற்கு காலவரையறை என்று வைத்துவிட்ட பிறகு, அந்தக் காலவரையறை முடிந்த பிறகு மீண்டும் தேர்தலை நடத்துவதுதான் உசிதம் என்பதை நான் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முதலமைச்சருடைய கருத்து, விவாதத்திற்கு அவர்கள் பேசிய பிறகு கேட்பதற்கு ஏற்புடைய கருத்தாக இருக்கலாம். நான் இல்லையென்று சொல்லவில்லை. ஆனால் அது ஜனநாயகம் ஆகாது. கூட்டுறவைப் பொறுத்தவரை 3 ஆண்டுக்காலம் முடிந்த பிறகு புதிய உறுப்பினர்களுக்கு நீங்கள் வாய்ப்பளிக்க வேண்டுமென்பதுதான் கூட்டுறவினுடைய தாத்பரியம். எனவே இந்தச் சட்டமுன்வடிவை நீங்கள் திரும்பப் பெற வேண்டுமென்று நான் மீண்டும் ஒரு முறை கூறிக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-55

ஒரு நிகழ்வை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். சிவகங்கை மாவட்டம், இளையான்குடி வட்டம், 1252-சாலிகிராமம் என்கிற தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியிலே 23-12-1997 ஆம் நாள் சரக மேற்பார்வையாளர் பெட்டகத்தை ஆய்வு

செய்தபோது, நகை வைக்காமலேயே நகைக் கடன் வழங்கியதாக போலியாக ஆவணங்கள் தயார் செய்து 1,23,000 ரூபாய் கையாடல் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. அது சம்பந்தமாக துறை அதிகாரிகள் பல்வேறு விதமான விசாரணைகளை நடத்தி, அந்த விசாரணைகளெல்லாம் இந்தக் கோப்பிலே இருக்கின்றன. நான் இதை முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன். அதன்மீது அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்தச் சட்டமுன்வடிவை அரசாங்கம் திரும்பப் பெற வேண்டுமென்று சொல்லி அமைகிறேன். நன்றி, வணக்கம்.

(திரு. ச. அழகிரி சில தாள்களை மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் கொடுத்தார்.)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. இரா. விசுவநாதன்.

**திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவின்மீது இங்கே பேசிய நமது தமிழ் மாநில காங்கிரஸ் உறுப்பினர் அதைக் கடுமையாக எதிர்ப்பதாகச் சொன்னார்கள். அந்தச் சட்டமுன்வடிவை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக மிகக் கடுமையாக எதிர்க்கிறேன் என்பதை உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏனென்று சொன்னால், கூட்டுறவுச் சங்கங்களுடைய சித்தாந்தத்திற்கு மாறாக 31-10-1999 ஆம் நாள் நடத்தி முடிக்க வேண்டிய கூட்டுறவுச் சங்க நிர்வாகிகளுடைய தேர்தலை அப்பொழுது நடத்தி முடிக்காமல் இரண்டு ஆண்டுகளுக்குப் பதவியை நீட்டித்துக் கொடுத்திருப்பது, இதுவரை நான் அறிந்த வரையிலே, இந்திய அளவிலே எந்த மாநிலத்திலும், அதுவும் ஒரேயடியாக இரண்டு ஆண்டுக் காலத்திற்கு நீடிப்பு கொடுத்ததாக இல்லை என்று நான் கருதுகின்றேன். குறிப்பாக எந்தவொரு நிகழ்ச்சியிலும் ஆறு மாதத்திற்கு ஒரு நீடிப்பு கொடுத்திருக்கிறார்கள். அதற்கு அடுத்த ஆறு மாதம் கொடுத்திருக்கிறார்கள். இப்படி இந்த முறையைத்தான் பின்பற்றி இருக்கிறார்கள். இருந்தாலும்கூட இந்தத் தேர்தலை நீங்கள் ஏன் நடத்தவில்லை என்பதை நான் இந்த நேரத்திலே கேட்க விரும்புகிறேன். ஒருவேளை நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் கள்ள ஓட்டுக்கள் அதிகமாகப் போட்டு வெற்றி பெற்ற அந்த வழிமுறைகளை கூட்டுறவுச் சங்கத் தேர்தலை நடத்தினால் அதில் கையாள முடியாதோ என்ற சந்தேகமும், அச்சமும்





உங்களுக்கு ஏற்பட்டு இருக்கிறதோ என்று நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

கூட்டுறவுச் சங்கத் தேர்தலைப் பொறுத்தவரையில், ஏற்கெனவே நீங்கள் நடத்திய கூட்டுறவுச் சங்கத் தேர்தலே முறையாக நடத்தி முடிக்கப்படவில்லை. அதிலேகூட வேட்பு மனு தாக்கல் செய்யப்போன எங்கள் கட்சிக்காரர்களையெல்லாம் தடுத்து நிறுத்தியதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். முறைகேடாகத்தான் தேர்தலை நடத்தி இந்தப் பதவிக்கு நீங்கள் வந்திருக்கிறீர்கள் என்று சொன்னாலும்கூட, அதேபோன்ற முறைகேட்டைத் தொடர்ந்து நடத்தி மீண்டும் பதவியைக் கைப்பற்ற முடியாது என்ற அச்ச உணர்வு ஏற்பட்டு இருக்கிற காரணத்தால. மக்கள் விழித்துக் கொண்டார்கள் என்ற காரணத்தால். நீங்கள் தொடர்ந்து தேர்தலை நடத்த அச்சப்படுகிறீர்கள் என்ற ஐயத்தை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

எங்களுடைய சட்டமன்ற உறுப்பினர் திரு. சுந்தரம்கூட தேர்தலில் வேட்பு மனு தாக்கல் செய்யச் சென்றபோது, சேலம் மாவட்டத்திலே அவர் மிகக் கடுமையாகத் தாக்கப்பட்டார் என்பதையெல்லாம் இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஏனென்று சொன்னால், அங்கே ஜனநாயக முறைப்படி தேர்தலிலே பங்குகொள்வதற்குக்கூட யாருக்கும் முறையான வாய்ப்புகள் வழங்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எங்களுடைய மாவட்டத்தில்கூட அங்கிருக்கிற ஆளும் கட்சியினர் யாரைச் சொல்கிறார்களோ அவர்களுக்குத்தான் வேட்பு மனு கொடுத்தார்கள். இவையெல்லாம் இப்போது இந்த அவையிலே இருக்கிறவர்களுக்கெல்லாம் மிக நன்றாகத் தெரியும். அதுபோல இப்பொழுதும் நீங்கள் அந்த முறையைக் கையாள முடியாது என்ற காரணத்தால் இந்தத் தேர்தலை தள்ளி வைத்திருக்கிறீர்களோ என்றுகூட நான் அச்சப்படுகிறேன்.

அதேபோல இப்பொழுது இருக்கின்ற தலைவர்கள் அனைவரும், பெரும்பாலும் 75 சதவிகிதத்திற்கும் மேற்பட்டிருக்கின்ற தலைவர்கள் அனைவரும் கூட்டுறவுச் சங்கங்களில் co-operation என்பதற்குப் பதிலாக corruption என்று சொல்கிற அளவுக்கு ஊழல் நிறைந்ததாக அனைத்து சங்கங்களும் நடந்து கொண்டிருக்கின்றன. எந்தச் சங்கத்தை எடுத்துக்கொண்டாலும் இப்போது மக்கள் பேசிக் கொள்கிறார்கள்.

இவருடைய பதவிக் காலம் எப்பொழுது முடியும் என்று காத்திருந்த மக்கள் ஏமாற்றம் அடைகின்ற வண்ணம், இவர்களுக்கு போனசாக — பெரும்பாலான சங்கங்கள் முறையாக நடைபெறாத காரணத்தால் — இப்பொழுது மேலும் இரண்டு ஆண்டுக் காலம் பதவி நீட்டிப்புக் கொடுத்திருப்பது பொருத்தமாக இருக்காது என்பதையும், மக்களுடைய எண்ணங்களுக்கு விரோதமாக இது இருக்கிறது என்பதையும் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எனவே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக உங்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புவது, இந்தச் சட்டமுன்வடிவை திரும்பப் பெற்றுக்கொண்டு, உடனடியாகத் தேர்தலை நடத்த வேண்டும் என்பதுதான்.

பிற்பகல் 1-00

தேர்தல் நடத்துவது என்பது மட்டுமல்ல, அதை முறையாகவும், ஒழுங்காகவும், தார்மீக முறையிலும், நியாயமாகவும் நடத்த வேண்டும் என்றும் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். ஏனென்று சொன்னால், கூட்டுறவுச் சங்கத் தேர்தல் என்று சொன்னாலே, நாங்கள் அறிந்த வகையிலே, உறுப்பினர்களைச் சேர்க்கும்போது ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள் யாரைச் சொல்கிறார்களோ அவர்களை மட்டும்தான் புதிய உறுப்பினர்களாகச் சேர்க்கிறார்கள். மற்றவர்களையெல்லாம்—யார் கொடுத்தாலும்—உறுப்பினர்களாகச் சேர்ப்பதில்லை. இப்படி முறைகேடாக, உறுப்பினர் சேர்ப்பதையும் தடுத்து நிறுத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொண்டு, இந்தச் சட்டமுன்வடிவைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, முறையாக, உடனடியாகத் தேர்தலை நடத்தி முடிக்க வேண்டுமென்று எங்களுடைய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகத் தெரிவித்து அமர்கிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே முன்மொழியப்பட்டிருக்கின்ற திருத்தச் சட்டமுன்வடிவுகள் மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சில கருத்துகளைத் தெரிவிக்க விரும்புகின்றேன். கூட்டுறவு அமைப்புகளில், சில அமைப்புகளுக்கும் மையச் சங்கங்களுக்கும், உச்ச நிலைச் சங்கங்களுக்கும் தனி அலுவலர்களுடைய பதவிக் காலத்தை மேலும் நீட்டிப்பதற்கான ஒரு திருத்தச் சட்டமுன்வடிவும், ஏற்கெனவே தேர்வு செய்யப்பட்டு, பணியாற்றி, பணிக்காலத்தை முடித்துவிட்டவர்களுக்கு,





மேலும் இரண்டு ஆண்டு காலம் பணி நீட்டிப்புத் தருகிற ஒரு திருத்தச் சட்டமுன்வடிவும் இங்கே முன்மொழியப்பட்டிருப்பது, பதவிக்கால நீட்டிப்பு வழங்கப்பட்டிருப்பது ஏற்புடையதல்ல என்பதை அறிமுக நிலையிலேயே இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் தெரிவித்திருக்கின்றோம். இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையில், அரசுக்கு சட்ட ரீதியாக உரிமை இருக்கிறது என்றாலும், தார்மீக ரீதியாகவும், நாடாளுமன்ற ஜனநாயக நெறிமுறை அடிப்படையிலும் இது பொருத்தமானதாக இருக்காது, ஆபத்தானதாக முடிந்துவிடும் என்று எச்சரிக்க விரும்புகின்றோம்.

மூன்று ஆண்டுகளுக்கு மட்டுமே பணியாற்றுவதற்காக கூட்டுறவு அமைப்புகளிலே உறுப்பினர்களாக இருப்பவர்கள், தங்களை யார் நிர்வாகம் செய்ய வேண்டும் என்பதைத் தேர்வு செய்கிறபோது அவர்கள் பணியாற்றுகிற காலம் என்பது, மூன்று ஆண்டு என்பதைக் கருத்திலே கொண்டுதான் தேர்வு செய்கிறார்கள். மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு பொருத்தமான மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்கிற ஜனநாயக அடிப்படையில் அவர்கள் உணர்வுகளை வெளிப்படுத்துகிறார்கள். மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு அரசுக்கு இருக்கிற சட்ட உரிமையைப் பயன்படுத்தி, ஜனநாயக ரீதியாக நடத்தப்பட வேண்டிய தேர்தலை நடத்தாமல் தவிர்ப்பதற்கு இப்படியொரு சட்டமுன்வடிவு கொண்டு வருவது என்பது இந்த அரசு அமைந்த ஆரம்ப காலத்திலே, உள்ளாட்சித் தேர்தலாகட்டும், கூட்டுறவு அமைப்புகளின் தேர்தலாகட்டும், அவற்றை வேகமாக நடத்தி, ஜனநாயக இயக்கத்திற்கு ஒரு புத்துயிரை ஏற்படுத்தியது—அந்த நல்ல கீர்த்திமிக்க செயலுக்கு ஒரு இழுக்கை ஏற்படுத்துகிற வகையில் இந்தத் திருத்தச் சட்டமுன்வடிவு இங்கே வந்திருப்பதாக நாங்கள் கருதுகிறோம். எனவே, உறுப்பினர்களுடைய நம்பிக்கையை இழந்தவர்களை, பணிக்காலத்தைப் பூர்த்தி செய்தவர்களை, இன்னும்கூட உச்ச நிலை, மைய நிலைச் சங்கங்களுக்குத் தேர்தல் நடத்த வேண்டியிருக்கிற சூழ்நிலையில், மேலும் இரண்டு ஆண்டுக்காலம் நீடிப்பு தருவது ஜனநாயக இயக்கத்திற்குப் பொருத்தம் உடையதாக இருக்காது. எனவே இந்தச் சட்டத் திருத்தத்தை வாபஸ் பெற்று, உடனடியாகத் தேர்தலை நடத்துவதற்கு இந்த அரசு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் வலியுறுத்தி நிறைவு செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ம. அப்துல் லத்தீப்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனக்கு முன்பு பேசிய உறுப்பினர்கள், இந்தச் சட்டம் ஏன் நிறைவேறக் கூடாது என்பதற்கான நியாயமான காரணங்களை இந்த அவையில் எடுத்து வைத்திருக்கிறார்கள். இதிலே முக்கியமான பிரச்சினையாக, ஆளுநர் அவர்கள் சட்டமன்றக் கூட்டத்திற்கான அறிவிப்பைத் தந்த பிறகு, இந்த இடைக்காலத்தில் சட்டத்தைக் கொண்டு வரலாமா என்ற கேள்வியை மாண்புமிகு உறுப்பினர் அழகிரி அவர்கள் எழுப்பியிருக்கிறார்கள். இதிலே விதிமுறைகளும் இருக்கின்றன. இப்படி சட்டமன்றத் தேதி குறிப்பிட்ட பிறகு அவசரச் சட்டம் பிரகடனப்படுத்தப்பட முடியும் என்பதற்கு அந்த விதிமுறையை நாம் துணைக்கு அழைக்கலாம். ஆனால் அதே நேரத்தில், சட்டமன்றத்திற்குத் தாழ்வாரம் Lobby - எப்படி இருக்கிறதோ, அப்படித்தான், அறிவிப்பு செய்கிற தேதிக்கும், சட்டமன்றம் கூடுகின்ற தேதிக்கும் இடையே இருக்கிற காலம் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

*பிற்பகல் 1-05*

ஜனநாயக மரபுகளையும், சட்டமன்ற மரபுகளையும் தெரிந்தவர்கள் இதற்கு இப்படித்தான் விளக்கமளிக்கிறார்கள். ஒருவேளை அரசுக்குத் தேவையாக இருந்திருக்கலாம்; பதவிக் காலத்தை நீட்டித்துக் கொடுக்கக்கூடிய தேவை இருந்திருக்கலாம். ஆனால், அந்தத் தேவையை இந்த *அவசரச் சட்டம் பிரகடனப்படுத்தப்படுவதற்கு முன்போ அல்லது ஆளுநர் அவர்கள் தேதியைக் குறிப்பிடுவதற்கு முன்போ ஏன் அரசு உணரவில்லை? இந்நிலை ஏற்பட்டதற்குக் காரணம் என்ன? என்பதைத் தான் என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. இப்பேர்ப்பட்ட *அவசரச் சட்டங்களை நாம் பிரகடனப்படுத்தித்தான் தீர வேண்டும் என்ற உணர்வு அல்லது தேவை அரசுக்கு இருந்திருக்குமேயானால் ஆளுநர் அவர்கள் தேதியைக் குறிப்பிடுவதற்கு முன்பே ஏன் அந்தத் தேவையை உணர்ந்து பார்க்கவில்லை? அது குறித்து ஏன் சிந்தனை எழவில்லை? அதற்குப் பிறகு, இந்தத் தேவை இருக்கிறது என்று உணர்ந்த பிறகு, இந்தப் பிரகடனத்தைச் செய்வது ஒருவேளை விதிக்கு ஏற்புடையதாக் இருக்கலாம் ஆனால் ஜனநாயகத்திற்கு அது ஏற்புடையதல்ல என்பதை நான் உறுதிபடத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பொதுவாக நம்முடைய அமைப்புகள் Constitutional Bodies, Statutory Bodies என உள்ளன. Constitutional Bodies, Statutory Bodies-இவற்றில்

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பட்டன.



Constitutional Bodies உருவாகிற நம்முடைய அமைப்புகள், மத்திய மாநில அரசுகள் போன்றவை எல்லாம் சட்டத்தால் உருவாக்கப்படுகிற அமைப்புகளோடு, ஜனநாயக மரபுகளை மறந்து அவற்றோடு நாம் நம்முடைய நடைமுறைகளை ஏற்படுத்திக் கொள்வது. அவற்றை நம்முடைய இஷ்டப்படி நடத்துவது மிகவும் வேதனைக்குரியது மட்டுமல்ல, ஜனநாயக மரபுகளுக்கு ஏற்புடையதும் அல்ல என்பதை நாம் என்றைக்கு உணர்ந்து பார்க்கின்றோமோ அன்றைக்குத்தான் ஜனநாயகம் சரியான முறையில் நம்நாட்டில் நடைபெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

அரசியல் கட்சிகள்தான் ஆட்சிகளை அமைக்கின்றன. அதிலே சந்தேகமில்லை. ஆனால் அரசியல் கட்சிகள் அரசமைப்புச் சட்டத்தையும், தானே உருவாக்குகின்ற சட்டத்தையும், சட்டமன்றங்களும், நாடாளுமன்றங்களும் உருவாக்குகிற மரபுகளையும், தான் விரும்புகின்ற வகையில் தன்னுடைய இஷ்டப்படி பயன்படுத்துவது ஜனநாயகத்திற்கு சாவு மணி அடிக்கக்கூடிய ஒன்று என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. அழகிரி அவர்கள் எடுத்துச் சொன்ன கருத்துக்கு நம்முடைய மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் இங்கே விளக்கம் தந்திருக்கிறார்கள். பேரவைத் துணைத் தலைவர் அவர்களும் தொடர்புடைய விதியை இங்கே படித்துக் காட்டியிருக்கிறார்கள். நான் அதனுள்ளே மிக பாரதூரமான அளவிற்குச் செல்ல விரும்பவில்லை. ஆனால், ஒன்று. நம்முடைய ஜனநாயகத்தைக் காப்பதற்கு நாம் முழு கவனத்தைச் செலுத்த வேண்டும். ஆளுநர் அவர்களும் இத்தகைய அரசியல் சர்ச்சைக்கு அப்பாற்பட்டவராக கருதப்பட வேண்டும். மாறான ஒரு சூழ்நிலை ஆளுநருக்கு ஏற்படாவண்ணம் பார்த்துக்கொள்வது நம்முடைய கடமை என்பதை இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். 2 ஆண்டுகள் அவர்களுக்குப் பதவி நீட்டிப்புத் தருகிறீர்கள். நம்முடைய நாட்டின் ஜனநாயகத்தில், அதுவும் கிராம ஜனநாயகத்தில் கூட்டுறவுத் துறையில் புதியவர்கள் வர வேண்டும். புதியவர்களுக்கு வாய்ப்புகள் தர வேண்டும். இப்போதே நம்முடைய கூட்டுறவு அமைப்புகளில் பல முறைகேடுகள் நடப்பதாகச் சொல்கிறார்கள். எனவே இந்தச் சூழ்நிலையில் நாம் இரண்டு ஆண்டுக் காலம் ஏன் நீட்டிப்புக் கொடுக்க வேண்டும்? என்ன காரணம்? என்ன அவசியம்? உடனடியாகத் தேர்தலை வைத்து புதியவர்களைத் தேர்ந்தெடுப்பதுதானே? அதற்கு மாறாக ஓர் அவசரச் சட்டத்தை, அவசரக் கோலத்தில் பிறப்பித்திருப்பது ஜனநாயக மரபுகளுக்கு மட்டுமல்ல, ஜனநாயகத்திற்கே கேடு விளைவிக்கும். எனவே, அரசமைப்புச் சட்டத்தால்

உருவாக்கப்படுகிற அமைப்புகள், சட்டத்தால், நம்மால் உருவாக்கப்படுகிற Statutory Bodies என்று சொல்லப்படுகிற இந்த அமைப்புகளை, நினைத்ததுபோல் அலைக்கழிப்பது, விரும்பும்போது பதவி நீட்டிப்புத் தருவது என்பது எந்த வகையிலும் ஏற்புடையது அல்ல என்பதை நான் சுட்டிக்காட்டி, கூட்டுறவுத் துறையிலே உண்மையான ஜனநாயகத்தைக் கொண்டு வருவதற்கும், இப்போது இருக்கிற சீர்கேடுகளை அகற்றுவதற்கும், ஒழுங்கீனங்களைப் போக்குவதற்கும், தயவுசெய்து நான் கேட்டுக் கொள்கிறேன்; இந்தச் சட்டமுன்வடிவை நீங்கள் திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டும்; அதுதான் நமக்கு ஏற்புடையதாக இருக்கும் என்பதைக் கூறி, இந்தச் சட்டமுன்வடிவை, இந்திய தேசிய லீக் கடுமையாக எதிர்க்கிறது என்பதைக் கூறி அமைகிறேன்.

*பிற்பகல் 1-10*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் பேசுகின்றபோது, **என்று குறிப்பிட்டார். அவர் பேசி முடிக்கிற வரை பொறுமையாக இருந்தேன். அவருக்குத் தெரியாதது அல்ல. **என்பது வேறு; அவசரச் சட்டம் என்பது வேறு. எனவே, அவர் பேசியதை அவசரச் சட்டமாகப் பதிவு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்து, திரு. முகம்மது இஸ்மாயில்.

**திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு குறித்து, தமிழ் மாநில தேசிய லீக் கட்சியின் சார்பிலே எனது கருத்துகளை இங்கே எடுத்து வைக்க விரும்புகிறேன்.

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பிறகு, இந்தக் கூட்டுறவுத் தேர்தல்களை நடத்துவதால், அரசுக்கு அச்சம் ஏற்படும்; பயம் ஏற்படும் என்றுகூட இங்கே சில உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினார்கள். தமிழகத்திலே, கடந்த காலத்திலே, நடைபெற்ற ஆட்சியின்போது ஆட்சியாளர்கள், உள்ளாட்சி, நகராட்சி, பேரூராட்சிகளின் தேர்தல்களையும், கூட்டுறவுத் தேர்தல்களையும் நடத்துவதற்கே முன்வராத காலத்திலேதான், மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் கலைஞர் அவர்கள் (மேசையைத்

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்ிணங்க அகற்றப்பெற்றன.



தட்டும் ஒலி) தேர்தல் வாக்குறுதியிலே எடுத்துச் சொன்னதற்கு இணங்க, தமிழகத்தின் ஆட்சிப் பீடத்திலே அமர்ந்தவுடன், உள்ளாட்சி, நகராட்சி, பேரூராட்சிகளினுடைய தேர்தல்களையும், கூட்டுறவுத் தேர்தல்களையும் முறையாக நடத்திக் கொடுப்பேன் என்று வாக்குறுதியை அளித்துதான் மக்கள் மத்தியிலே, ஜனநாயக அடிப்படையிலே ஓட்டைக் கேட்டுப் பெற்றார்கள் என்பதை இங்கே நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த அடிப்படையிலே நடைபெற்ற தேர்தலிலே, இப்போது 3 ஆண்டுக்காலம் நடந்து முடிந்ததற்குப் பிறகு, பதவி நீட்டிப்புச் செய்கின்ற அவசரச் சட்டத்தை இங்கே பிரகடனப்படுத்துவதற்கு இந்தச் சட்டப் பேரவையிலே வைத்திருக்கிறார்கள். தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களினுடைய அவசரச் சட்டத்திற்கு மட்டுமல்ல; மின் துறை, உள்ளாட்சித் துறை போன்ற துறைகள் குறித்து சில சட்டமுன்வடிவுகளுக்கு எல்லாம், இந்த மன்றத்திலே அங்கீகாரம் பெறுவதற்காகத்தான் இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடர் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதை நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இப்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட இங்கே பேசுகிறபோது, இதுகுறித்து உறுப்பினர்கள் கேட்ட சில கேள்விகளுக்குத் தகுந்த பதில்களை அளித்திருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே, சில பகுதிகளிலே 3 ஆண்டுக்காலம் நிறைவு பெற்றவர்கள் இருக்கிறார்கள்; சில கூட்டுறவுச் சங்கங்களிலே ஓராண்டுக்காலம், ஒன்றரை ஆண்டுக்காலம் பதவியிலே அங்கம் வகித்தவர்கள் இருக்கிறார்கள். ஆகவே கூட்டுறவுத் துறையிலே அவர்களுடைய பதவிக் காலத்தையும் நீட்டிப்புச் செய்ய வேண்டும் என்பதற்காக கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் கால அவகாசத்தை 2 ஆண்டுக்காலம் நீட்டித்துக் கொடுத்தால், அவர்களுக்கும் பயனுள்ளதாக இருக்கும் என்ற முறையிலே, கூட்டுறவுச் சங்கங்களினுடைய இந்த அவசரச் சட்டத்தை, இந்தப் பேரவையிலே முன்வைத்திருக்கிறார்கள். (மணியடிக்கப்பெற்றது) ஆகவே இந்த அவசரச் சட்டம் மிகத் தேவையானது என்பதை இந்த நேரத்திலே தமிழ் மாநில தேசிய லீக் கட்சியின் சார்பிலே வலியுறுத்தி, இந்தச் சட்டத்திற்கு ஆதரவளித்து என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

***திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுறவு நீட்டிப்புச் சட்டத்தைப் பொறுத்தவரையில் மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பிலே நாங்கள் எங்களுடைய

எதிர்ப்பைத் தெரிவித்துக் கொள்கிறோம். கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்தவரையில், இப்போது அது மக்களுடைய வாழ்க்கையோடு பெரிய தொடர்பை ஏற்படுத்திக் கொண்டிருக்கிற ஓர் அமைப்பாக மாறியிருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஏற்கெனவே பல சங்கங்களைப் பொறுத்தளவிலே, நல்ல முறையிலே நடத்தி வருகிற சங்கங்களைக்கூட, சில அதிகாரிகள், ஏற்கெனவே அந்தச் சங்கங்களை திவாலாக்குவதற்கு முயற்சித்தவர்களோடு சேர்ந்து—தேர்ந்தெடுக்கப்பட்ட பொறுப்பிலே இருக்கிற நிர்வாகிகள், சங்கங்களை நல்ல முறையிலே அமைத்துக் கொண்டு வருவதற்கு முயற்சிக்கிற நேரத்தில்—அவர்கள்—சில காரணங்களைச் சொல்லி, சங்கங்களைக் கலைத்து விடுவதற்குக்கூட முயற்சிக்கிற நேரம் இது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

உதாரணமாக கன்னியாகுமரி மாவட்டத்தில், மெதுகும்மல் என்ற ஒரு கூட்டுறவுச் சங்கத்தில், சில தனியார்களால், பல முறைகேடுகள் நடந்தன. ஆனால் அந்தத் தனி நபர்களால் நடத்தப்பட்ட முறைகேடுகளுக்கு, இப்போது அந்தச் சங்கத்தைக் கலைத்துவிட வேண்டுமென்று குமரி மாவட்டத்திலே இருக்கிற இணைப் பதிவாளரும் மற்ற ஆட்களும் சிபாரிசு செய்கிறார்கள். தேர்ந்தெடுக்கப்பட்ட சில ஸ்தாபனங்களில், பொறுப்பிலே இருக்கக்கூடியவர்கள் நல்ல முறையிலே செயலாற்றுவதற்கு முயற்சிக்கின்ற நேரத்திலே, அதனை எப்படிக் கெடுக்கலாம் என்ற முறையிலே, சில அதிகாரிகள் முயற்சிக்கின்ற நேரத்திலே, இவற்றையெல்லாம் பாதுகாத்திட வேண்டுமென்றால், தேர்ந்தெடுக்கப்பட்ட, நல்லமுறையிலே சங்கங்களைச் செயலாற்றுகிற அமைப்புகள் இருந்தால்தான் முடியும். ஆகவே அதற்காக தேர்தல் நடத்தப்பட வேண்டுமென்று நான் வலியுறுத்திக் கூறவிரும்புகிறேன்.

*பிற்பகல் 1-15*

எங்களுடைய பகுதிகளிலே எல்லாம் ஓர் ஐயப்பாடு ஏற்பட்டிருக்கிறது. தேர்தலை முறையாக, நேர்மையாக, நீதிபூர்வமாக நடத்துவதிலே சமீபகாலங்களிலே சில சிரமங்கள் வந்திருக்கின்றன. எந்தக் காரணத்தினாலோ தமிழக அரசு இந்தத் தேர்தலை தள்ளி வைக்கிறது என்கின்ற ஐயப்பாடு மக்களிடையே ஏற்பட்டுள்ளது.

உதாரணமாக எங்களுடைய தொகுதியிலே இந்த இடைத் தேர்தலுக்குப் பிறகு, அதனுடைய முடிவு வருவதற்கு முன்னாலே தேர்தல் தொடர்ச்சியாக ஒரு கொலை நடந்தது. பெல்லார்மின் என்கின்ற



எங்கள் கட்சி வாலிபர் கொலை செய்யப்பட்டார். அதன்பேரிலே, திருவட்டார் காவல் நிலையத்திலே வழக்கு பதிவு செய்யப்பட்டது. ஆனால் எந்த மேல் நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மத்தியில ஆட்சிப் பொறுப்பிலே இருக்கின்ற கட்சியினுடைய நிர்பந்தம் காரணமாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று மக்களால் பரவலாகப் பேசப்படுகிறது. நான் என்ன சங்கடப்படுகிறேன் என்றால், இப்படிப்பட்ட சில நிர்பந்தங்கள் அரசுக்கு வரக்கூடும் என்ற காரணத்தினாலே இந்தத் தேர்தல்களைத் தள்ளி வைக்கின்ற அவல நிலை ஏற்பட்டால் அது சரியல்ல. நாம் மக்களுடைய உதவியோடு, மக்களுடைய ஆதரவோடு தேர்தல்களை நிச்சயமாக நடத்திட வேண்டும். மக்கள் அதற்கு முன்வருவார்கள். ஆகவே நல்லமுறையிலே இந்தக் கூட்டுறவுச் சங்கங்களைச் செயல்படுத்துவதற்கு தேர்தல்களை நடத்த வேண்டுமென்று வலியுறுத்தி அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கங்களுக்கு இரண்டு ஆண்டுக்கால பதவி நீட்டிப்பைக் கொடுக்கக்கூடிய சட்டமுன்வடிவை எங்களுடைய தமிழ்ப் பாட்டாளி மக்கள் கழகத்தின் சார்பிலே நாங்கள் கடுமையாக எதிர்க்கக் கடமைப்பட்டிருக்கிறோம். இப்போது இருக்கக்கூடிய சூழ்நிலையிலே, ஜனநாயக நெறிமுறைப்படி இந்தத் தேர்தல் நடத்தப்படுவதுதான் சரியாக இருக்கும். ஏற்கெனவே நடைமுறை மூலதனங்கள், முறைகேடாகப் பயன்படுத்தப்பட்டு பல்வேறு சங்கங்கள் இப்போது மூடப்படுகின்ற சூழ்நிலையிலேயும், இன்னும் பல சங்கங்கள் எதிர்காலத்திலே மூடப்படக்கூடிய அவல நிலையிலேயும் இருந்து கொண்டிருக்கின்றன. செய்தித்தாள்களைப் படித்தால், கடலூர் மாவட்டம், திட்டக்குடிக்குப் பக்கத்திலே ஒரு கூட்டுறவுச் சங்கத்தினுடைய செயலர் பல இலட்சம் ரூபாய் மோசடி செய்து அவர்மீது நடவடிக்கை எடுத்திருப்பதாகச் செய்தி வந்திருக்கிறது.

அதுமட்டுமல்ல மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களிடம், இந்தக் கூட்டுறவுத் துறையில் இடஒதுக்கீடு அடிப்படையிலே சரியாக நியமனங்கள் இல்லை என்ற காரணத்தை நாங்கள் எல்லாம் சுட்டிக்காட்டியவுடன் அதனுடைய அடிப்படையிலே அவர்கள் ஓர் அறிவிப்பைக்கூட வெளியிட்டார்கள். ஆனால் அரசு அறிவித்த

[திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்] [1999 நவம்பர் 24

முறையிலே, அந்தப் பணி நியமனங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றனவா என்றால், இல்லை.

உதாரணத்திற்காக நான் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். கூட்டுறவுப் பட்டயப் பயிற்சி முடித்தவர்கள் ஏறத்தாழ—ஆண்டிற்கு 5,000 பேர் என்ற வீதத்தில் கடந்த 18 ஆண்டுக் காலத்திலே—ஒரு இலட்சம் பேர்கள் இப்போது வேலைவாய்ப்பு அலுவலகத்திலே பதிவு செய்துவிட்டு இப்போது காத்துக் கொண்டிருக்கின்றார்கள். ஆனால் பல சங்கங்களிலே, அரசு அறிவித்த அறிவிப்புகளையெல்லாம் மீறி, தற்காலிக அடிப்படையிலே நியமனம் செய்கிறார்கள் அவர்களுக்கு வேண்டியவர்களை நியமனம் செய்துகொள்கிறார்கள். 480 நாட்கள் அவர்களுக்குத் தற்காலிக அடிப்படையிலே சம்பளம் கொடுத்துவிட்டு, கடைசியிலே அதே கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக Correspondence Course மூலமாக அவர்களைப் பயிற்சிக்கு அனுப்புகிறார்கள். நான் அரசைக் கேட்டுக்கொள்ள விரும்புவது என்னவென்று சொன்னால், ஏற்கெனவே பட்டயப் பயிற்சி முடித்தவர்கள் இலட்சக்கணக்கிலே படித்துவிட்டு வேலைவாய்ப்பு அலுவலகங்களிலே பதிவு செய்துவிட்டு காத்துக் கொண்டிருக்கின்றபோது, தற்காலிக நியமன அடிப்படையிலே, தங்களுக்கு வேண்டியவர்களை நியமனம் செய்து கொண்டு, இப்படி ஒரு கொல்லைப்புற வழியாக அந்தச் சங்கத்தினுடைய செலவிலேயே பயிற்சிக்கு அனுப்பி, அவர்களை நிரந்தரமாக ஆக்குவதற்கு, இப்படிப் பட்ட முயற்சிகளைச் செய்கின்ற கொடுமைகள் எல்லாம் இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. உதாரணத்திற்கு ஒன்றிரண்டை முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு சுட்டிக்காட்டக் கடமைப் பட்டிருக்கின்றேன். தூத்துக்குடி மாவட்டம், சாத்தான்குளம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியிலே—மூன்று பேர்கள் இந்த முறையிலேதான் பணி நிரந்தரம் செய்யப்பட்டிருக்கிறார்கள். இப்படி இருந்தால், இப்போது படித்த இளைஞர்கள் மத்தியிலே வேலையில்லாத் திண்டாட்டம் பெருகி வருகின்ற சூழ்நிலையிலே அவர்களுடைய மனநிலை எந்த அளவிற்கு வருத்தப்படும் என்பதையும் அரசு கவனத்திலே கொள்ளவேண்டும். ஆகவே இந்த 2 ஆண்டுக்கால பதவி நீட்டிப்பு என்கிறபோது — கூட்டுறவுச் சங்கத்திற்குத் தேர்தல் நடத்தியதிலே பெருமை உங்களுக்கு வந்திருக்கும் என்றாலும்கூட, இந்தப் பதவி நீட்டிப்பு செய்ததன் மூலமாக — உங்கள் பெயரானது கெடுகின்ற அளவிற்கு இப்போது நிலைமை போய்க் கொண்டிருக்கிறது. ஆகவே தயவுசெய்து இந்தப் பதவி நீட்டிப்பை ரத்து செய்து, கூட்டுறவுச்



1999 நவம்பர் 24] [திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்]

சங்கங்களுக்கு உடனடியாகத் தேர்தல் நடத்தப்பட வேண்டுமென்பதை வலியுறுத்தி தமிழ்ப் பாட்டாளி மக்கள் கழகத்தின் சார்பிலே கேட்டு அமைகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

பிற்பகல் 1-20

**மாண்புமிகு திரு. ஆண்டி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் இரண்டாவது திருத்தச் சட்டமுன்வடிவின்மீது மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துகளை இந்த அவையின் மேலான கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள். கூட்டுறவுச் சங்கத்திற்கு, அடிமட்டத்திலே இருக்கின்ற Primary Society, துவக்க நிலையிலே இருக்கின்ற இந்த Society-யில் இருக்கின்ற நிர்வாகக் குழுவிற்கு மீண்டும் 2 ஆண்டுக்காலம் பதவி நீட்டிப்புத் தேவையில்லாதது, அவசியமற்றது, ஜனநாயகத்திற்கு விரோதமானது என்று எதிரணியிலே இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் எங்களுக்கு நினைவுபடுத்தினார்கள். அவர்கள் இதை நினைவுபடுத்தும்போது, அவர்கள் மத்தியிலே ஆட்சியிலே இருந்த காலத்திலேயும் சரி, இந்த மாநிலத்திலே ஆட்சியிலே இருந்த காலத்திலேயும் சரி, எப்படி ஜனநாயகத்தை மதித்தார்கள் என்பதை எண்ணிப் பார்க்கும்போது, இவர்களுக்கு இந்தத் தகுதி உண்டா, யோக்கியதை உண்டா என்ற கேள்வி எங்களை அறியாமலேயே எங்களுடைய மனதிலே வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) நெருக்கடி நிலையை அறிவித்து, நாடாளுமன்றத்தினுடைய பதவிக் காலத்தையே நீட்டிப்பதற்கு அரசியல் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்ததை ஆதரித்தவர்கள், (மேசையைத் தட்டும் ஒலி) 22 ஆண்டுகளாக கூட்டுறவுச் சங்கங்களுக்கு, உள்ளாட்சி அமைப்புகளுக்குத் தேர்தலே நடத்ாதவர்கள் எல்லாம் ஜனநாயகத்தைப் பற்றிப் பேசுகிறார்கள். அதை நாங்கள் அனுமதிக்கிறோம். நாங்கள் எவ்வளவு பெரிய ஜனநாயகவாதிகள் என்பதை இதிலேயிருந்து நீங்கள் தெரிந்துகொள்ளலாம். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அழகிரி அவர்கள் பேசியபோது—

**திரு. சு. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலே நெருக்கடி நிலை அறிவிக்கப்பட்டபோது,

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் அதை ஆதரித்தார்களா, எதிர்த்தார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** அழகிரி அவர்கள் ரொம்ப புத்திசாலித்தனமாகக் கேள்வியைக் கேட்பதாக நினைத்துக் கொண்டார். அப்போது நான் அண்ணா தி.மு.க.-விலேதான் இருந்தேன். ஆனால் அந்த நெருக்கடி நிலையை எதிர்த்தேன். என்மீதே விசாரணை வந்தது என்பதை உங்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். பல கூட்டங்களிலே பகிரங்கமாகவே பேசியிருக்கிறேன். என்னுடைய பேச்சு, நாடாளுமன்றத்தில் பேசியது புத்தகமாகவே வந்திருக்கிறது. நெருக்கடி நிலையை எதிர்த்தே பேசியிருக்கிறேன். என்னை, மற்ற தோழர்கள், அப்போதிருந்த கட்சிக்காரர்களே கேட்டார்கள், தொடங்கும்போது அ.தி.மு.க. மாதிரி தொடங்குகிறாய், பேச்சை முடிக்கும்போது தி.மு.க. மாதிரி முடிக்கிறாயே என்றுதான் என்னைக் கேட்டிருக்கிறார்கள். எனவே எந்தச் சந்தர்ப்பத்திலும் நான் நெருக்கடி நிலையை ஆதரித்துப் பேசியதே கிடையாது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அழகிரி அவர்களுக்கு அடக்கத்தோடு தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆக, ஒன்று புரிகிறது. அமைச்சர் எப்போதுமே ஒரு கட்சியில் இருக்கிறார், ஆனால் வேறு கருத்தோடேயே இருக்கிறார் என்பதை நிரூபித்துக் காட்டியிருக்கிறார் என்பதை நான் அறிகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** அமைச்சர் எந்தக் கட்சியிலே இருந்தாலும் ஓர் இலட்சியவாதியாகவே இருப்பார் என்பதை அழகிரிக்கு நான் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். அருமை நண்பர் அழகிரி அவர்கள் பேசும்போதே முதலிலேயே தொடங்கினார், சட்டமன்றக் கூட்டத் தொடர் அறிவிக்கப்பட்ட பிறகு இந்த அவசரச் சட்டம் தேவையா என்றார். அதற்கும் நாங்கள் ஆதாரத்தைச் சொன்னபிறகு அரசமைப்புச் சட்டம் அனுமதிக்கிறதா, இல்லையா; Whether it is within the purview of the Constitution or not; அரசமைப்புச் சட்டத்திற்கு உட்பட்டதா, இல்லையா, அதற்கு எங்களுக்கு அதிகாரம் இருக்கிறதா இல்லையா என்பது பிரச்சினை. எங்களுக்கு அதிகாரம் இருக்கிறது. அப்படிப்பட்ட அதிகாரம் ஜனநாயகத்திற்கு விரோதமானதல்ல என்பதை அரசமைப்புச் சட்டம் அங்கீகரித்த பிறகு, அதன் அடிப்படையிலே அவசரச் சட்டத்தைப் பிறப்பித்தால் அதிலே என்ன தவறு இருக்கிறது



என்பதைத்தான் இந்த அவைக்கு நான் சொல்ல ஆசைப்படுகிறேன். கடந்த காலத்தில்கூட, இதேபோல சட்டப் பேரவைக்கான காலம் அறிவிக்கப்பட்ட பிறகும் அவசரச் சட்டங்கள் பிறப்பிக்கப்படவில்லையா? *21-12-1985*-ல் Pachaiyappa Trust Second Amendment Ordinance என்று பிறப்பித்தார்கள். அதுவும் அதே சந்தர்ப்பத்தில்தான். *23-12-1985* அன்று Tamil Nadu Agricultural Service Co-operative Society - Appointment of Special Officer Amendment Ordinance - அதுவும் அந்தச் சந்தர்ப்பத்தில்தான். இப்படி நிறைய ஆதாரங்கள் எங்களிடத்தில் இருக்கின்றன. பத்துக்கு மேற்பட்ட ஆதாரங்கள் கையிலே இருக்கின்றன. நான் எதற்காக இதைச் சொல்கிறேன் என்றால், இதெல்லாம் சட்டத்திற்கு உட்பட்டது. அதன் அடிப்படையில்தான் நாங்கள் செயல்படுகிறோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நினைவுபடுத்த நான் கடமைப்பட்டிருக்கிறேன். 3 ஆண்டுக்காலம் எதற்காக இப்பொழுது...

*பிற்பகல் 1-25*

**THIRU M. ABDUL LATHEEF:** We are not questioning the authority or the powers that be to come out with certain ordinances; but various Courts have observed that within the parameter of Constitutional desirability, it is not proper and appropriate to opt for an ordinance after the Governor notifies the date for Session. That is the question of desirability, not the question of law.

**HON. THIRU ALADI ARUNA:** Sir, I would like to submit to the Hon. Member to consider whether the Government has a right to issue such ordinance or not; whether there is any prevention from the Constitution as not to issue such ordinances? Is there any provision in the Constitution?

**THIRU M. ABDUL LATHEEF:** The authority of the Government under the Statute.....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஏற்கெனவே அது கேட்கப்பட்டு, நானும் அதைப் படித்துச் சொல்லிவிட்டேன். அது முடிந்துபோன விஷயம். அதைப் பற்றி நீங்கள் பேசி அவையின் நேரத்தை எடுத்துக்கொண்டிருக்கிறீர்கள். அதற்கான ஆதாரத்தை நான் படித்துக் காட்டினேன். நீங்களும் அதை ஒத்துக்கொண்டுவிட்டீர்கள். மறுபடியும் அதையே raise செய்து கொண்டிருந்தால் நேரம் போகிறது. There is no clarification please. நீங்கள் உட்காருங்கள்.

**THIRU M. ABDUL LATHEEF:** Mr. Deputy Speaker Sir, I should be properly understood. I am not questioning the authority of the Government; but the question of desirability in regard to the conventions so far as the ordinances are concerned........

**HON. THIRU ALADI ARUNA:** That is why I have referred just two ordinances as examples though I am having a list of more than 10 ordinances and they have been promulgated on the eve of the session. You might be aware of that. The question of.....

**HON. DEPUTY SPEAKER:** I request both the Honourable Minister and the Member to please leave this matter and go to the next point. (Laughter)

**HON. THIRU ALADI ARUNA:** The question of desirability and necessity will be decided by the Government, not by the Member. (Interruption). It is by the Government. எனவே இந்தச் சட்டத்தைப் பிறப்பிப்பதற்கு உரிமையும் அதிகாரமும் இருக்கிறது, தேவையும் இருக்கிறது. Desirability இருக்கிறதா என்று கேட்டார். Whether there is desirability or necessity; that should be decided by the Government and not by the Member. அதுதான் பிரச்சினை. இதில் நாங்கள் முடிவு எடுப்போமே தவிர, நீங்கள் முடிவு எடுக்க வேண்டுமென்ற அவசியம் இல்லை.

அடுத்து, நான் சொல்ல விரும்புவது எல்லாம் கூட்டுறவுச் சங்கங்களுக்கு தேர்தல் நடந்த முறைகள் சில கால கட்டங்களிலே மாறிவிட்டன. அதன் காரணமாகத்தான் திருத்தம் கொண்டுவரப்படுகிறது. 1996-ல் தமிழ்நாட்டில் மொத்தம் 23,379 கூட்டுறவுச் சங்கங்கள் அடி மட்டத்தில் இருந்தன. இவற்றில் 1996-ல் 14,107 சங்கங்களுக்குத்தான் தேர்தல்கள் நடைபெற்றன. பிறகு 1997-ல் 9,068 சங்கங்களுக்குத் தேர்தல்கள் நடந்தன. 1998-ல் 102 சங்கங்களுக்கு நடந்தன. இன்னும்கூட 102 சங்கங்களுக்குத் தேர்தல்கள் நடக்காமல் இருந்துகொண்டிருக்கின்றன. ஒரு சங்கத்திலே செயலாளராக இருப்பவர்கள், அங்கே கீழ்மட்டத்திலே நிர்வாகியாக இருப்பவர்கள், அதன் அடிப்படையில்தான் மத்திய மட்டத்திற்கும், மேல் மட்டத்திற்கும் வருகிறார்கள். கீழே அவர்கள் உறுப்பினர் பதவியை இழந்துவிட்டால் மேல் மட்டத்தில் தானாகப் பதவியை இழந்துவிடுவார்கள். எனவே மேல் மட்டத்தில் காலம் கடந்து வந்தவர்கள் அப்பதவியில் ஜனநாயக ரீதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்; நியமிக்கப்பட்டவர்கள் அல்ல. ஜனநாயக





ரீதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுடைய பதவிக் காலம் மூன்று ஆண்டுகளுக்கு நீடிக்க உரிமையுண்டு. அந்த மூன்று ஆண்டுகளுக்குக் குறையக் கூடாது. அவர்கள் மூன்று ஆண்டு காலப் பொறுப்பில் இருக்க வேண்டும். அவர்களுடைய ஜனநாயகத் தேர்தலைக் காப்பாற்றுவதற்காக இந்த நீடிப்பே தவிர, புதியதாக யாருக்கும் பதவி கொடுக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு அல்ல என்பதை நான் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தேர்தலைக் கண்டு அஞ்சுகிறோம், தேர்தலைக் கண்டு பயப்படுகிறோம் என்றெல்லாம் சில உறுப்பினர்கள் சொன்னார்கள். நான் அவர்களுக்குப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். கட்சியை நடத்துவதிலும் சரி, ஆட்சியை நடத்துவதிலும் சரி, தேர்தலுக்கு அஞ்சாமல் நடக்கிற ஒரே இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகமும், திராவிட முன்னேற்றக் கழக அரசும்தான் என்பதை அவர்களுக்கு நான் சுட்டிக்காட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். தேர்தலைக் கண்டு நாங்கள் ஏன் அஞ்சுகிறோம்? தேர்தலைக் கண்டு என்றைக்கும் அஞ்ச வேண்டியதில்லை. நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில்கூட, 1998 தேர்தலைவிட அதிகமான இடங்களைப் பெற்றிருக்கிறோம்.

பிற்பகல் 1-30

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் முன் அனுமதியோடு பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** தேர்தலைக் கண்டு அஞ்ச வேண்டிய அவசியம் எங்களுக்கு இல்லை என்பதற்காகத்தான் இந்தக் கருத்தைச் சொன்னேனே தவிர மற்றபடி தேர்தல் பிரச்சினைக்குள்ளே செல்ல வேண்டிய அவசியம் இல்லை.

கூட்டுறவுச் சங்கங்களில் சில நேரங்களில் பால் சங்கமாக இருந்தால் மாடே இல்லாதவர்கள் வருகிறார்கள் என்றும், நில வள வங்கியாக இருந்தால் நிலமே இல்லாதவர்கள் வருகிறார்கள் என்றும் சொல்கிறார்கள். உண்மையில் நான் சொல்கிறேன், தகுதி உள்ளவர்கள் தான் அங்கே உறுப்பினர்களாக இருக்கிறார்கள். எங்கேயாவது ஒரு சங்கத்திலே தகுதி இல்லாதவர்கள் இருக்கிறார்கள் என்பதை நீங்கள் ஆதாரபூர்வமாகச் சொன்னால் அதன்மீது நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறோம். எங்கேயாவது இருக்கலாம். நாங்கள் இல்லை என்று சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ச. அழகிரி.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஓர் உறுப்பினருடைய தகுதி எது என்று அமைச்சர் கூறுகிறார் என்று நான் அறிய விரும்புகிறேன். ஒரு பால் கூட்டுறவு உற்பத்தியாளர் சங்கத்திலே ஒருவர் உறுப்பினராக இருக்க வேண்டும் என்றால் அவர் 160 நாள் பாலைக் கறந்து சங்கத்திற்கு அளித்திருந்தால் அவர் உறுப்பினராக இருக்கலாம். மாடு இல்லாதவர், பால் கறக்காதவர், பால் கறக்கத் தெரியாதவர், இவர்கள் எல்லாம் இந்தச் சங்கத்திலே உறுப்பினர்களாக இருந்தால் அதன்பிறகு எப்படி அந்தச் சங்கம் கூட்டுறவுச் சங்கமாக இருக்க முடியும்? எனவே எந்தத் தகுதியினுடைய அடிப்படையில் நீங்கள் அந்தத் தொழிலுக்குச் சம்பந்தம் இல்லாதவர்களை உறுப்பினர்களாகச் சேர்க்கிறீர்கள் என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருக்கு நான் பணிவோடு தெரிவித்துக்கொள்ள விரும்புவதெல்லாம், தொடக்க நிலையில் ஒவ்வொரு துறையிலே இருக்கின்ற கூட்டுறவுச் சங்கத்திற்கும் தனித் தனியாகத் தகுதிகள் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றன. அவ்வாறு தகுதிகள் நிர்ணயிக்கப்பட்டதை அதிகாரிகள் ஒழுங்காகப் பரிசீலிக்கிறார்கள். பரிசீலித்து அதன் அடிப்படையில்தான் நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப் படுகிறார்கள். நண்பர் அழகிரி குறிப்பிட்டதைப் போன்று எங்கேயாவது குறை இருக்குமானால், தவறு இருக்குமானால் எங்கள் கவனத்திற்குக் கொண்டு வரலாம்; நிச்சயமாக நடவடிக்கை எடுப்போம் என்று அவருக்கு உறுதி அளிக்கிறேன். எனவே இந்த 2 ஆண்டு நீடிப்பு என்பது மேல்நிலைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுடைய பதவிக் காலம் குறைந்தபட்சம் 3 ஆண்டுகள் இருக்க வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தோடுதான், அந்த ஜனநாயகத்தைக் காப்பாற்றுவதற்குத்தான் இது கொண்டுவரப்பட்டிருக்கிறது. எனவே இந்த நீடிப்புக்குப் பிறகு உறுதியாக தேர்தல் நடத்தப்படும். தேர்தலைக் கண்டு ஒரு நாளும் நாங்கள் பயப்படமாட்டோம். தேர்தல் நடக்கும்போது மீண்டும் இந்தக் கூட்டுறவுச் சங்கங்களிலே நாங்கள் நல்ல வெற்றிகளைப் பெறுவோம் என்பதை உங்களுக்கு நினைவுபடுத்தி இதற்கு ஆதரவு தாருங்கள், இதை அரசியலாக்க வேண்டாம்.

"கூட்டுறவே நாட்டுயர்வு", கூட்டுறவிற்காக நேரு பெருமகனார் பாடுபட்டார் என்று சொன்னார்கள். அதிலே நீங்கள் குழப்பத்தை



உண்டாக்க வேண்டாம். கூட்டுறவிற்கு உங்களுடைய நேசக் கரத்தை நீட்டுங்கள் என்று கேட்டு இதை நிறைவேற்றித் தாருங்கள் என்று அன்போடு வேண்டுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள்; ஏன் இந்தச் சட்டத்தை நாங்கள் நீட்டிப்புச் செய்கிறோம் என்பதற்கு ஒரு விளக்கம் சொன்னார்கள். அதாவது மேல் மட்டத்தில் இருக்கிற, Apex Body-களில் இருக்கிற தலைவர்களுக்குப் பதவி இன்னும் இரண்டு ஆண்டுகள் இருக்க வேண்டிய ஒரு காரணத்தினாலேதான், கீழ் நிலையிலே இருக்கின்ற சங்கங்களுக்கு நீட்டிப்பைக் கொடுக்கிறோம் என்று சொன்னார்கள். கீழ் நிலையிலே இருக்கிற சங்கங்கள் — இன்று 1,400 கோடி ரூபாய் வரிப் பணத்தை நம்முடைய நியாயவிலைக் கடைகளுக்காக கொடுத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால்— அவற்றையெல்லாம் செயல்படுத்த வேண்டிய சங்கங்கள்—இன்று முறையாகச் செயல்படுத்தவில்லை என்பதை நம்முடைய முதலமைச்சரும் அறிவார்கள். இந்த நாட்டிலே உள்ள அத்தனை பேரும் மிக நன்றாக அறிவார்கள். அதற்கு ஏராளமான விளக்கங்களை நாங்கள் எல்லாம் சொல்லியிருக்கிறோம். ஆகவே இந்தச் சங்கங்கள் தொடர்ந்து இன்னும் இரண்டு ஆண்டுகள் இருக்குமேயானால் இந்த அரசுக்கு ஒரு கெட்ட பெயர் ஏற்படும் என்கின்ற நல்ல நோக்கத்தோடுதான் நாங்கள் இதை நீக்க வேண்டும் என்று சொல்கிறோமே தவிர வேறு ஒன்றும் கிடையாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கூட்டுறவாளர்களைப் பற்றியெல்லாம் இங்கே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். வாகீசம் பிள்ளை, நாச்சிமுத்து முதலியார், மணிகவுண்டர் என்று சொல்லக்கூடிய சுப்பிரமணிய கவுண்டர், நடேசன், பி.ஏ. இராமலிங்க செட்டியார், கனகசபை பிள்ளை, பி.என். பழனிசாமி, எம்.எஸ். பழனியப்ப முதலியார் போன்றவர்கள் எல்லாம் கூட்டுறவுத் துறைக்கே பெரிய அஸ்திவாரம் இட்டவர்கள் என்று சொல்ல வேண்டும். (குறுக்கீடு) வீரபாகு இவர்கள் எல்லாம் எப்படிப்பட்டவர்கள் என்று சொன்னால் இந்தக் கூட்டுறவுத் துறையை இந்தியாவிற்கே அறிமுகப்படுத்தியவர்கள். அப்படிப்பட்ட ஒழுக்கசீலர்கள்; உயர்ந்தவர்கள். அவர்கள் காங்கிரஸில் இருந்தார்கள் என்று சொன்னால்

அது காங்கிரஸிற்கு பெருமையே தவிர அவர்களுக்குப் பெருமை இல்லை என்பதைச் சொல்லி உங்களுடைய இந்தச் சட்ட நீட்டிப்பை முழுமையாக, மிக மிகக் கடுமையாக எதிர்க்கிறோம் என்று சொல்லி நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

(தமிழ் மாநில காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)

**திரு. ஜி. பழனிசாமி:** இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

(இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள், இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்ஸிஸ்ட்) கட்சி உறுப்பினர்கள், இந்திய தேசிய லீக் கட்சி உறுப்பினர்கள், எக்கட்சியையும் சாராத உறுப்பினர் திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் ஆகியோர் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)

**திரு. பி.ஆர். சுந்தரம்:** இந்த ஜனநாயகப் படுகொலையை எதிர்த்து எங்களுடைய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக வெளிநடப்புச் செய்கின்றோம்.

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)

பிற்பகல் 1-35

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை.

தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3 திருத்தங்கள் இல்லை.



பிரிவுகள் 2 மற்றும் 3 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை.

தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை

தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 42/1999) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை.

தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

### (ஔ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1999

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, 1999ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 43/1999), மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 43/1999) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை.

தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 7 வரை திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 7 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

@ 18-11-1999 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



மறுப்போரே இல்லை.

தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை.

தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1999 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 43/1999) நிறைவேற்றப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை.

தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

[1999 நவம்பர் 24

**(அஅ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1999**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 44/1999), மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1999ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 44/1999) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை.

தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3 திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை.

தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

---

@ 18-11-1999ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பட்டுள்ளது.



1999 நவம்பர் 24] [பேரவைத் துணைத் தலைவர்]

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை.

தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 44/1999) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை.

தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

**(அஆ) தமிழ்நாடு சங்கங்கள் பதிவு செய்தல் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1999.**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவு செய்தல் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 48/1999), மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவு செய்தல் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 48/1999) @ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் படுகிறது.

பிற்பகல் 1-40

பிரிவுகள் 2 மற்றும் 3, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

---

@ 19-11-1999 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பட்டுள்ளது.



ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவு செய்தல் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 48/1999) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## 8. அரசினர் தனித் தீர்மானம்

**நாடாளுமன்ற இரு அவைகளிலும் நிறைவேற்றப்பெற்ற 1999 ஆம் ஆண்டு அரசமைப்பு (எண்பத்து நான்காவது திருத்தச்) சட்டமுன்வடிவினால் செய்யக் கருதப் பெற்றுள்ள இந்திய அரசமைப்பின் 368-வது பிரிவின் (2)-ம் பகுதியின் காப்புரையின் (d) பகுதியின் வரம்பிற்குள் வரும் திருத்தங்களுக்கு ஏற்பளித்தல்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, அரசினர் தனித் தீர்மானம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

[1999 நவம்பர் 24

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"நாடாளுமன்ற இரு அவைகளிலும் நிறைவேற்றப்பெற்ற 1999 ஆம் ஆண்டு அரசமைப்பு (எண்பத்து நான்காவது திருத்தச்) சட்டமுன்வடிவினால் செய்யக் கருதப் பெற்றுள்ள இந்திய அரசமைப்பின் 368-வது பிரிவின் (2)-ம் பகுதியின், காப்புரையின் (d) பகுதியின் வரம்பிற்குள் வரும் திருத்தங்களுக்கு இப்பேரவை ஏற்பளிக்கிறது"

என்னும் தனித் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் முன்மொழியப்பட்ட தனித் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை

தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

## 9. அரசினர் தீர்மானம்

### பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப் பெறுதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் அவையை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கும் தீர்மானத்தை முன்மொழிவார்கள். மாண்புமிகு அவை முன்னவர்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பேரவை விதி 25(1)-ன்படி பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெறலாம்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.



1999 நவம்பர் 24]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை.

தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்படுகிறது.

பின்னர், பேரவை பிற்பகல் 1-42 மணிக்கு மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெற்றது.

## 10. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

*90. 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி விதிகளில் சில திருத்தங்கள் செய்தது குறித்து வணிக வரிகள் துறையின் 8-6-1999 ஆம் நாளிட்ட 134 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).*

*91. 1996-97 ஆம் ஆண்டிற்கான தருமபுரி மாவட்ட வளர்ச்சிக் கழகத்தின் இருபத்தி இரண்டாவது ஆண்டறிக்கை (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)*

*92. வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் கோட்டம், திருப்பத்தூர் சந்தன மரக் கூடுதல் கிடங்கில் 16-03-1997 அன்று ஏற்பட்ட தீ விபத்திற்கான காரணங்களும் மற்றும் சூழ்நிலைகளும் குறித்து ஆராயும் பொருட்டு ஏற்படுத்தப்பட்ட நீதியரசர் ஆ இராமன் அவர்களின் விசாரணை அறிக்கை (1952 ஆம் ஆண்டு விசாரணை ஆணையச் சட்டத்தின்*

*(மத்தியச் சட்டம் 60/1952) 3(4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ்)*

*93.* திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் *1995* ஆம் ஆண்டு ஜூலை, ஆகஸ்ட், செப்டம்பர் ஆகிய மாதங்களில் ஆதிதிராவிடர்கள் மற்றும் தேவர் இன மக்கள் சம்பந்தப்பட்ட சில மோதல்கள் மற்றும் சட்டம்-ஒழுங்குப் பிரச்சினைகளுக்கு வழிவகுத்த காரணங்களையும் சந்தர்ப்ப சூழ்நிலைகளையும் விசாரணை செய்வதற்காக அமைக்கப்பட்ட நீதிபதி பி. கோமதிநாயகம் அவர்களின் விசாரணை அறிக்கை *(1952* ஆம் ஆண்டு விசாரணை ஆணையச் சட்டத்தின் *(மத்தியச் சட்டம் 60/1952) 3(4)* பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)

## ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

*52. 1999* ஆம் ஆண்டு அரசமைப்புச் (எண்பத்து நான்காவது திருத்து) சட்டமுன்வடிவின் மீதான செய்தி குறித்து மாநிலங்களவை செயலாளர் - பொது அவர்களிடமிருந்து வரப்பெற்ற *4-11-1999* ஆம் நாளிட்ட RS.1/25/99-B எண்ணுள்ள கடிதத்தின் நகல்.

*53. 1999* ஆம் ஆண்டு அரசமைப்புச் (எண்பத்து நான்காவது திருத்து) சட்டமுன்வடிவு (மக்களவையில் அறிமுகப்படுத்தப் பெற்றவாறு).

*54. 1999* ஆம் ஆண்டு அரசமைப்புச் (எண்பத்து நான்காவது திருத்து) சட்டமுன்வடிவு (இரு அவைகளிலும் நிறைவேற்றப் பெற்றவாறு).

*55.* அரசு உறுதிமொழிக் குழுவின் பத்தாவது அறிக்கை, *1999-2000.*

முடிவு

D
2, 21, 200

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
816, Anna Salai,
Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.